NAVA LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate | Commercial | Business | Will & Estates
10 Milner Business Court, Unit 210
Scarborough, ON, M1B 3C6
416.321.1100 www.nava.law



தாயகத்திலும் கனடாவிலும் வெளிவரும்

# ஏகுருவி

ekuruvi.com




iNFORCE LIFe Financial Services Inc.
WE ARE HIRING
416.909.0400
www.inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough



சிறகு-04 November 2016 இணைய மாத இதழ் பறப்பு-11




## ஈழம் முழுவதும் "புதிய வெளிச்சம்"

## அறுவடை காலம்

## இனி இப்படித்தான் யாழ்ப்பாணம்


MORTGAGE ALLIANCE THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE Right Mortgage for you!
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
info@mortgageguardian.ca
Gini Annarasa
Mortgage Broker
Independently owned and operated franchise of the Mortgage Alliance Network | Lic#12521
gini.annarasa@gmail.com
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca


DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
The Local Experts
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com



"JOIN OUR TEAM"
GT Brokers
Protect You & Your Family
Get your industry licence at no cost...
Comprehensive skills training and mentoring by over 30 yrs.Experienced industry legend
Free in class teaching
Guna Thuraisingham M.A.Sc (Eng.) P.Eng.
416 528 1407

SINCE 1990 MRI
MRI SUPER RENOVATIONS AND PAINTING
www.mrisuperrenovations.com
Raj Munees
General Contractor
Cell: 416-618-4584 | Off: 416-299-3633
Free Estimate | Reasonable Price | Quality & Relible Work
Full Basement Renovation | Kitchen Cabinets
Hardwood & Tiling | Painting | Electrical & Plumbing


Punch Sockalingam
Broker
Century 21
Affiliate Realty Inc. Brokerage - 416-290-1200
For All Your Real Estate Needs
416-786-2463



Tam Sivathasan
Broker of Record
416.804.3443
MEDICAL & PROFESSIONAL CENTRE
AT MARKHAM & FINCH

800 SQ. FT AND UP
2016 FALL OCCUPANCY
CALL FOR INFORMATION
VEEDU REALTY INC. BROKERAGE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#1 RE/MAX Outstanding Agent *for* Outstanding Results.

# FOR SALE




Bedrooms:1+1 / Washrooms:1
Toronto




Bedrooms:2+1 / Washrooms:4
Markham




Bedrooms:3 / Washrooms:3
Markham




Bedrooms:4 / Washrooms:3
Whitby




Bedrooms:3 / Washrooms:3
Markham




Bedrooms:4+2 / Washrooms:2
Toronto




Bedrooms:4+2 / Washrooms:5
Richmond Hill




Bedrooms:3 / Washrooms:3
Markham



RE/MAX® Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independenlty Owned And Operated
*Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor*

**Raj Nadarajah**
Sales Representative
Dir: 416.333.6115
nanohomes@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

# யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கொலையும் புலம்பெயர் சமூகமும்

இலங்கைத்தீவில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் இருவர் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி கொக்குவிலில் ஸ்ரீலங்கா காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியான சம்பவம் “மீண்டும்” ஒரு பதட்ட நிலையைத் தோற்றுவித்துள்ளது. மாணவர்களின் போராட்டம், கடையடைப்பு உட்பட மாணவர்களுக்கு எதிரான இந்த வன்முறைக்கு எதிரொலியாக தாயகத்தில் போராட்டங்கள் தொடர்ந்தாலும் பெருமளவில் புலம்பெயர் சமூகம் "மௌனம்" காக்கும் நிலையே தோன்றியுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் மரணத்தைக் கண்டித்து ரொறன்ரோவில் "மாபெரும்" கண்டன பேரணி என்ற அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் வழமையான "நபர்களுடன்"இந்தக் கண்டன நிகழ்வும்முடிவுக்கு வந்துள்ளது. இதுபோன்ற பேரணிகளும், வேறு பல எழுச்சி நிகழ்வுகளும் இப்போதெல்லாம் ஏதோ ஒரு பதிவுக்காக மாத்திரம் நிகழ்கின்றதோ அல்லது நிகழ்த்தப்படுகின்றதோ என்ற எண்ணம் தோன்றுவதை தவிர்க்கவோ அல்லது தடுக்கவோ முடியவில்லை. கனடாவில் இயங்கும் தமிழ் மாணவர் அமைப்புக்கள், தமிழ் மாணவர்கள் கல்வி கற்கும் பல்கலைக்கழக மற்றும் கல்லு□ரிகளின் மாணவர் சங்கங்கள் இந்த கொலைகள் குறித்து அறியாமல் இருக்கின்றனரா? அல்லது விருது விழாக்களுக்கும் விடுமுறைக் கொண்டாட்டங்களுக்குமான தயார்ப்படுத்தல்கள் மத்தியில் அவர்களது நேரம் விரையமாகின்றதா?

மறுபுறம் கொண்டாட்டங்களுக்கும் தி(தெ)ரு விழாக்களுக்கும் ஆயிரக் கணக்கில் பொதுமக்களை ஈரக்கும் தந்திரம் தெரிந்திருக்கும் தமிழர் அமைப்புக்கள், ஆலக நிர்வாகங்கள் மற்றும் தமிழ் ஊடகங்கள் தாயகத்தை களமாகக் கொண்ட இதுபோன்ற பேரணிகளுக்கு "நு□றுகளை"தாண்டியும் மக்களை திரட்ட முடியாத நிலை இங்கு அதிருப்தியுடன் பதிவு செய்யப்படவேண்டியதாகும்.

2009ஆம் ஆண்டின் பின்னர் தமிழர்களை தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் அனைத்து வகைகளிலும் சீரற்ற, திட்டமற்ற, தலைமையற்ற ஒரு சமூகமாக உருப்படுத்துவதிலும், வழிநடத்துவதில் ஸ்ரீலங்கா தேசம் வகிக்கும் வியூகத்திலும், காட்டும் அக்கறையிலும் தமிழர் சமூகம் வீழ்ந்து போயுள்ளதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் காணமுடிகின்றது. தாயகத்தில் தமிழர்கள் மீது தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்களுக்கு "மாபெரும்" பேரணிகளையும், அறிக்கை யுத்தங்களையும் தாண்டி என்ன செய்தோம் என்பதை புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மனச்சுத்தியுடன் தம்மை நோக்கி கேள்வி எழுப்பவேண்டிய நேரம் இதுவாகும். “நல்லாட்சி” அரசாங்கத்தை தாங்கிப் பிடிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், கூட்டமைப் பை புலம்பெயர் தேசங்களில் இருந்து வகை தொகையின்றி ஆதரிக்கும் தமிழர் அமைப்புக்களும் தொடரும் தமது நிலைப்பாட்டில் மாற்றங்களை மேற்கொள்ள இது தருணமா என்ற கேள்வியும் இங்கு அவசியமாகின்றது.

தவிரவும் மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திற்கும், நகரசபைக்கு தெரிவாகியுள்ள தமிழ் பிரதிநிதிகளும், தொடர்ந்தும் நகரசபை, மாகாணசபை மற்றும் பாராளுமன்ற கனவில் மிதக்கும் அரசியல் வாதிகளும், அமைச்சர் பதவி உறுதிமொழிக்காக கட்சி தாவல்களை அரங்கேற்றும் அரசியல் வாதிகளும் இந்த விடயத்தில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற கேள்வியும் இங்கு முன்வைக்கப்பட வேண்டியது. கனடிய வரலாற்றில் ஆளும் அரசாங்கத்தின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை தன்னகத்தே கொண்டுள்ள தமிழ் சமூகம் தாயகத்தில் தனது உறவுகள் மீது இழைக்கப்படும் அநீதிகளை அந்த உறுப்பினர் நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும் என எதிர்பார்ப்பது நியாயமானதே. இதனை ஒரு எதிர்பார்ப்பாக மாத்திரம் கொண்டிருக்காமல் அதனை வலியுறுத்தவேண்டிய பொறுப்பையும் கனடிய தமிழ் சமூகம் கொண்டுள்ளது.

## உள்ளடக்கம்

இகுருவி கார்டூன் வரைனர் அஸ்வினுக்கு அஞ்சலி
ஈழத் தீவில் நடைபெற்ற புதிய வெளிச்சம்
புதிய வெளிச்சம் எனது பார்வையில் - நவஜீவன் அனந்தராஜ்
இது அறுவடை காலம் ..! - ரமணன் சந்திரசேகரமூர்த்தி
இனி இப்படித்தான் யாழ்ப்பாணம் - இந்திரன் ரவீந்திரன்
5 S கோட்பாடு
உங்கள் குழந்தைகளை அழுக்குச் சாப்பிட விடுங்கள்
கனடிய வரலாறு - தமிழர்களின் மரபுரிமை - குரு அரவிந்தன்
ஈராக் - இஸிஸ் முறுகல் எழுச்சி பெரும் போராடடம் -
கனடிய பணத்தாள்களில் பெண்கள் - எஸ் ஆர் ராஜபாலன்
இந்தக் கொலைகள்ள கண்டிப்பதோடு நின்றுவிடாமல் எம்மிடம் காணப்படும் குறைகளையும் நாம் களைய வேண்டும் - நக்கீரன்
டொரோண்டோ புளூஸ் 30 வது ஆண்டு
இவ்வாண்டு நோபல் பரிசுகள் - சில்லையூர் றெ. அலெக்ஸ்
யாழ் மாணவனின் படுகொலையும் பின்னரான காட்சிகளும்! - புருசோத்தமன் தங்கமயில்
அமெரிக்கா ஜனநாயகமும் டொனல்ட் ட்ரம்பும் - சதிஸ் கிருஷ்ணபிள்ளை
கனடாவுக்கு வர விரும்புபவர்களுக்கு பத்து வழிகள் - சிவா பஞ்சலிங்கம்
மீண்டும் அஜித் சபாரட்ணம் தலைவர் : ஜனநாயக முறை தேர்தல் நடைபெறும் ஒரே ஒரு அமைப்பு
கார்த்திகை நினைவேந்தலும் , புலம்பெயர் தேசங்களும் - -புருஜோத்தமன் தங்கமயில்
இகுருவி ஐயாவின் புகை படங்கள் - டொரோண்டோ நிகழ்வுகளில் மேலதிக புகை படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்
வடக்கில் குவியும் கேரளா கஞ்சா - கே வாசு
மந்திர தறி
சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் : பழி வாங்கப்படும் ஆப்பிரிக்கா
அமெரிக்க தேரத்லில் யார் வெற்றி பெற்றாலும் முஸ்லீம்கள் மீதான விரோதப்போக்கு தொடரும் - லத்திப் பாரூக்
71 வருடங்களில் ஐ . நா . சந்தித்தது என்ன?
மாணவர் விழிப்புணர்வு
எழ வேண்டுமெனில் புதுமையாய் எழுது எழுந்து விட்டால் வெற்றி உனதெனக் கருது -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வெளிச்சம்



நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம். புதிய வெளிச்சம் தன்னுடைய முதலாவது செயல்திட்டத்தை முடித்துக்கொண்டதன் பின்னர் பலரும் என்னிடம் தனித்தனியாக கேட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் முகமாகவும் புதிய வெளிச்சம் தொடர்பான ஒரு தெளிவை ஏற்படுத்தும் முகமாகவும் சில விடயங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

2009 பேரழிவிற்குப் பின்னர் எமது சமூகம் அடைந்திருக்கும் துயர நிலை ஒருவகை மன அழுத்தத்தைத் தந்துகொண்டிருந்தது. இருந்தாலும் இதை ஒரு சவாலாக நாம் ஒவ்வொருவரும் எடுத்து விரைவில் இந்த நிலையை மாற்றி முன்னகரவேண்டும் என்ற எண்ணம் எனக்குள் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். இது விடயமாக நான் 2010, 2011, 2012 , 2013, 2015 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக இலங்கை சென்று வந்திருந்தேன் . பாடசாலை கற்றல் அபிவிருத்தி , சிறு கைத்தொழில்களை ஊக்குவித்தல் , உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச மயப்படுத்தல் போன்ற கருத்தரங்குகளை மேற்கொண்டேன்

முதலில் அதன் அடிப்படையில் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களை குறிப்பாக விதவைகளை நேரில் சந்தித்து அவர்களுக்கு நம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கக்கூடியவாறான கலந்துரையாடல்களையும் செயல்திட்டங்களையும் மேற்கொண்டு உதவலாம் என தீர்மானித்திருந்தேன்.

இதன் முதல் கட்டமாக தமிழகத்தைச் சேர்ந்த உளவியல் ஆற்றுப்படுத்துகை மற்றும் நெறிப்படுத்துகையினை செவ்வனே செய்யக்கூடியவரான பேராசிரியர் Dr ஜெயந்தசிறீ பாலகிருஸ்ணன் அவர்களும் ,பேராசிரியர் Dr பாலகிருஸ்ணன் அவர்களும் தங்களுடைய நேரத்தையும் உழைப்பையும் இலவசமாக தரமுன்வந்தார்கள் .

இவர் பேராசிரியர், முனைவர் கடந்த 35 வருடங்களாக இளநிலை, முதுநிலை மற்றும் ஆராட்சி பேராசிரியராக கோயம்புத்தூர் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வருகின்றார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழித்துறையில் Doctor பட்டங்களை பெற்றவர் .இந்தியாவில் பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டத்தை வரையும் குழுவிலும், சிறந்த பேச்சாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், எழுத்தாளராகவும் மட்டுமல்லாது பெண்கள் மன நல, சமூக நல திட்டங்களில் பங்கு கொண்டு முன்னெடுத்துள்ளார். இவரை கடந்த வருடம் இகுருவி நிகழ்வுக்கு டொரோண்டோ அழைத்ததன் மூலம் ஈழத்துக்கு வருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டேன் .

அடுத்து அப்பயணத்தை ஒழுங்குபடுத்த மனிதவளமும் பொருள்வளமும் தேவைப்பட்டது. என்னுடைய ஒன்லைன் மார்க்கெட்டிங் மற்றும் பத்திரிகைப்பணி நடுவிலும் நானே செல்லவேண்டி ஏற்பட்டது. இது ஒரு இலாபநோக்கமற்ற விடயம் என்பதால் என் விளம்பரதாரர்களிடம் இருந்து பொருள்வளத்தையும் பெறவிரும்பவில்லை. அத்துடன் என் நண்பர்கள் சிலர் உதவ முன்வந்ததையும் ஏற்றுக்கொள்ள எனக்கு கொஞ்சம் சங்கடமாக

> என் உறவுகளுக்கு புத்துணர்ச்சியையும், ஆற்றுப்படுத்துகையும், நம்பிக்கையும் தைரியமும் நன்மையும், மன வளர்ச்சியையும் தரக்கூடிய இந்த செயல் திட்டத்துக்கு 'புதிய வெளிச்சம்' என்று பெயர்வைத்தோம்.

இருந்தது. ஆகையால் இம் முதல் முயற்சிக்கு என் மனித வளத்தையும் பொருள்வளத்தையும் இயன்ற அளவு பயன்படுத்துவது எனத் தீர்மானித்திருந்தேன்.

மற்றவர்களுக்கு புத்துணர்ச்சியையும், ஆற்றுப்படுத்துகையும், நம்பிக்கையும் தைரியமும் நன்மையும், மன வளர்ச்சியையும் தரக்கூடிய இந்த செயல்திட்டத்திற்கு 'புதிய வெளிச்சம்' என்று பெயர்வைத்தோம். மூன்று விதமாக எம்மக்களை பிரித்தோம் போரின் எல்லா வகையான காயங்களையும் சுமந்து துண்பப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களை குறிப்பாக பெண் தலைமைத்துவங்களை கொண்ட மக்களை,போராளிகளான "நிகழ்கால "மக்களையும்,போரினால்தொடர்ந்து துன்பத்தை அனுபவித்து கடந்து சென்ற ' கடந்தகால" மக்களையும், போரினால் பாதிக்கப்படட என் தேசத்தில் பிறந்த எதிர்கால முத்து மணிகள் போன்ற எமது "எதிர் கால" குழந்தைகளையும் அவர்களது ஆசிரியர்களையும் சந்திப்பதற்காக அக இருள் விலகணும் அகவெளி திறக்கணும் புதிய வழி பிறக்கணும் தமிழ் இனம் சிறக்கணும் என்ற தாரக மந்திரத்தோடு தாயகத்திற்குச் சென்றோம்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் அக்டோபர் தொடக்கம் 6 ஆம் திகதி வரையான சுமார் இரண்டுவார காலப்பகுதியில் யாழ்ப்பாணம், திருகோணமலை மட்டக்களப்பு முல்லைத்தீவு கிளிநொச்சி மன்னார் மலையகம் ஆகிய பிரதேசங்களில் உள்ள பல்வேறு பாடசாலைகளிலும் பொது மண்டபங்களிலும் நடைபெற்ற உளவியல் ஆற்றுப்படுத்துகைக் கருத்தரங்கில் அண்ணளவாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்குகொண்டு பயன்பெற்றார்கள்.

இக்கருத்தரங்கிலும் கலந்துரையாடல்களிலும் பெற்ற அனுபவங்களையும் அங்குள்ள மக்களின் நிலையையும் தெரியப்படுத்தும் முகமாகவும் அடுத்து என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பாகவும் கனடாவில் உள்ள நண்பர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் கடந்த வாரம் ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தேன்.

அதில் கலந்துகொண்டு கருத்துக்களையும் எண்ணங்களையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றி. செயல்திட்டங்களோடு மட்டும் நின்றுவிடாது செயல்ப்பாட்டு இயக்கமாக தொடர்ந்து செயலாற்றவேண்டும் என்ற உங்கள் அனைவரதும் வேண்டுகோளின்படியும் விருப்பின்படியும் புதிய வெளிச்சம் தொடர்ந்தும் எம் சமூகத்திற்கான வெளிச்சம் தேடி விருப்பும் அர்ப்பணிப்பும் கொண்ட உங்கள் ஒவ்வொருவரையும் இணைத்துக்கொண்டு பயணிக்கும்.

மகாத்மா காந்தி , விவேகானந்தர் , அப்துல் கலாம் ஆகியவர்களுக்கு பின்னர் எம் தேசத்துக்கு வந்த Dr ஜெயந்தசிறீ பாலகிருஸ்ணன் அவர்களுக்கு எனது அன்பான நன்றிகளை தெரிவித்து , புதிய வெளிச்சத்தின் அடுத்த செயல்திட்டம் தொடர்பாக தொடர் கலந்துரையாடல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அன்பும் ஆதரவும் நல்கும் அனைவருக்கும் என் நெஞ் சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அக இருள் விலகணும்! அகவெளி திறக்கணும்! புதிய வழி பிறக்கணும்! தமிழ் இனம் சிறக்கணும்

அன்புடன்

**நவஜீவன் அனந்தராஜ்** BSc
**புதிய வெளிச்சம்**
**Tel : 416 272 8543**

இது தொடர்பான காணொளிகளை பார்வையிட QR CODE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தீவில் நடைபெற்ற "புதிய வெளிச்சம்" ஊடக அறிக்கை



பேராசிரியர் Dr ஜெயந்தஶ்ரீ பாலகிருஷ்ணன் பங்குகொண்டு இலங்கைத்தீவின் தமிழர் வாழும் பல்வேறு பகுதிகளிலும் 20 நாட்கள் 18 பெரு நிகழ்வுகளாக நடைபெற்ற புதிய வெளிச்சம் நிகழ்வு குறித்த கருத்துப் பகிர்வும் மக்கள் சந்திப்பும் 17 Oct 2016 மாலை 7.00 PM அன்று கனடா ,ஸ்காபோரோவில் அமைந்துள்ள Estate banquet hall இல் நடைபெற்றது. அதில் வழங்கப்பட்ட ஊடக அறிக்கை

“புதிய வெளிச்சம்”

போரின் பேரழிவிற்குப் பின்னர் எங்களில் பலர் மனதிலும் எழுந்த அடுத்தது என்ன என்ற கேள்வியின் பதிலாகத்தான் “புதிய வெளிச்சம்” உருவானது.

அக இருள் விலகணும்!

அகவெளி திறக்கணும்!

புதிய வழி பிறக்கணும்!

தமிழ் இனம் சிறக்கணும்!

என்ற தாரகமந்திரத்தோடு “புதிய வெளிச்சம்” தன் பயணத்தை





இலங்கையின் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, முல்வைத்தீவு கிளிநொச்சி, மன்னார் மற்றும் மலையகம் ஆகிய பிரதேசங்களில் 20 நாட்கள் 18 பெரு நிகழ்வுகளாக நடைபெற்று முடிவடைந்துள்ளது “புதிய வெளிச்சம்”.

ஆரம்பித்தது.

இப்பயணத்தில் முக்கிய விடயமான உளவியல் ஆற்றுப்படுத்துகை மற்றும் நெறிப்படுத்துகையினை செவ்வனே செய்யக்கூடியவரான பேராசிரியர் ஜெயந்த ஶ்ரீ பாகிருஸ்ணன்



அவர்கள் தன்னுடைய நேரத்தையும் உழைப்பையும் தர முன்வந்தார்.

ஆற்றுப்படுத்துகைக் கருத்தரங்கில் அண்ணளவாக பத்தாயிரம் மாணவர்களையும் மக்களையும் சென்றடைய முடிந்தது. இதன் மூலம் அவர்களுக்கு ஒரு பொதுவான உளவியல் ஆற்றுப்படுத்துகை உரைகளையே வழங்கியிருந்தோம். ஆனால் உண்மையில் அங்கே உள்ள பாதிப்புகளும் தேவைகளும் வகைப்படுத்தப்பட்டு மிகவும் நுணுக்கமாகவும் தொடர்ச்சியாகவும் பணியாற்றிவேண்டியதன் அவசியத்தை நேரில் கண்டோம்.

குறிப்பாக உள்ளக வன்முறைகள், போதைப் பொருள் பாவனை, முறையற்ற பாலியல் தொடர்புகள், சிறுவர் துஸ்பிரயோகம், மதமாற்றம், ஆசிரியர் தராதர வீழ்ச்சி, தற்கொலை, கல்வியில் ஆர்வமின்மை, வெளிநாட்டு மோகம், நிவாரணங்களுக்காக அலைதல், ஒழுங்குபடுத்தப்படாத உதவிகள், திட்டமிடப்படாத உதவி முறைகள் போன்ற பல பிரச்சனைகளை இனம் காண நேர்ந்தது.

அதே சமயம் சிறப்பான சுயதொழில் முனைவோரையும், ஆரோக்கியமான பெண்தலைமைத்துவங்களையும் தூரநோக்குக் கொண்ட சிந்தனையாளர்களையும் கூடவே கண்டோம். இவர்களில் போராளிகளும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

இப்பயணம் மூலம் பெற்ற அனுபவமும் அறிவும் மிகவும் முக்கியமானவை. வேறுமனே கண்மூடித்தனமாக இருக்காமல் பிரச்சனைகளை சரியாக இனம் கண்டு தேவைகளையும் உதவிகளையும் முறையக திட்டமிடாமல் போனால் மீண்டும் ஒரு பேராபத்து எம்மை வந்தடையும் என்பதை உணர்கிறோம். இது தொடர்பாக எம்மிடையே ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வெளிப்படையான செயல்திட்டங்கள் நடைமுறைக்கு வரவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே உங்களை இன்று சந்திக்கின்றோம்.

இன்றைய சந்திப்பின்மூலம் ஆரம்பப் புள்ளியாக பின்வரும் மூன்று பரிந்துரைகளை முன்வைக்க விரும்புகிறோம்.

1) சமூக, கல்வி ,பொருளாதாரத்தில் உள்ள உளவியல் பிரச்சனைகளை இனங்கண்டு வகைப்படுத்தல்.

2) இவற்றை நிறைவு செய்யும் வழிகளை கண்டடைந்தல்.

3) இவற்றை முறையாகவும் தொடர்ச்சியாகவும் செய்து முடித்தல்.


இனி என்ன என்ற கேள்வியை பதில் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்கள் முன்னாலேயே விடுகின்றோம். ●

மட்டக்களப்பு, திருகோணமலை , யாழ்ப்பாணம் , முல்லைத்தீவு , கிளிநொச்சி , மன்னார் , மலையகம் ஆகிய மாவட்டங்களில் பேராசிரியர் Dr ஜெயந்தஶ்ரீ பாலகிருஷ்ணன் பங்குகொண்ட " புதிய வெளிச்சம் " நடைபெற்றது.

புதிய வெளிச்சம் – 20 நாட்கள் 18 பெரும் நிகழ்வுகள் 10,000 ற்கு மேற்பட்டவர்கள் பங்கேற்பு

1) வல்வை மகளிர் மகா வித்தியாலயம்(Teenager)
2) ஹாட்லிக் கல்லூரி (Teenager)
3) மெதடிஸ் கல்லூரி (Teenager)
4) புதுக்குடியிருப்பு – போரால் பாதிக்கப்பட்ட பெண்கள்
5) முல்லைத்தீவு – போரால் பாதிக்கப்பட்ட பெண்களை தலைமைத்துவமாக கொண்ட பெண்கள் .
6) கிளிநொச்சி போரால் பாதிக்கப்பட்டவர்கள்
7) இணுவில் பொது வாசிகசாலை
8) நல்லூர் மணிமண்டபம் – International day of Non-violence
9) வீரசிங்கம் மண்டபம்
10) சுய உற்பத்தி பொருளாதார மேம்படுகை கண்காட்சி சந்திப்பு – கிட்டு பூங்கா
11) யாழ் இந்துக் கல்லூரி (Teenager)
12) கோப்பாய் ஆசிரியர் பயிற்சி சாலை
13) மன்னார் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள்
14) திருகோணமலை இந்துக் கல்லூரி (Teenager)
15) மட்டக்களப்பு போரினால் பாதிக்கப்பட்டமக்கள் (தேவநாயகம் மண்டபம், அரசடி )
16) மட்டக்களப்பு நான்கு பெண்கள் பாடசாலையிலிருந்து (Teenager only)
17) ஹட்டன் ஆசிரிய பயிற்சி கல்லூரி
18) 5ற்கு மேற்பட்ட தனிப்பட்ட நிகழ்வுகள் (Private)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரட்டைக் குடியுரிமை (Dual citizens) பெற்றவர்கள் கனேடிய கடவுச்சீட்டையே பயன்படுத்த வேண்டும்

இரட்டைக் குடியுரிமை (Dual citizens) பெற்ற கனேடியர்கள், கனடாவினுள் பிரவேசிக்கும்போது கனேடிய கடவுச்சீட்டையே பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை விரைவில் அமுலுக்கு வரவுள்ளது. இது இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்கும் ஏறத்தாழ 1 மில்லியன் கனேடியர்களிற்கு ஆச்சரியமாக அமையலாம்.

கனேடிய அரச இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் படி, எதிர்வரும் செப்டெம்பர் 30 இலிருந்து கனடாவினுள் பிரவேசிக்கும் சகலரும், அவர்களது விமானப் பயணத்தை ஆரம்பிக்கும் முன்னரே தேவையான சகல ஆவணங்களையும் தம்வசம் வைத்திருக்க வேண்டும் என்று கேட்கப்படுவர். இது கனேடியர்களிற்கும், கனேடிய இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களுக்கும் பொருந்தும்,

கனேடிய கடவுச்சீட்டு, தற்காலிக கனேடிய கடவுச்சீட்டு அல்லது கனேடிய அவசர பயண ஆவணம் போன்றவை இல்லாதவர்கள் விமானங்களில் ஏற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அந்த அரச இணையத்தளம் மேலும் தெரிவிக்கிறது. இந்தக் கொள்கை மாற்றம், எல்லைப் பாதுகாப்பை அதிகரிக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் பரிசோதனை முறையின் ஒரு பகுதியாகும்.

கனடாவின் 2011 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின் படி 2.9% ஆனவர்கள் ( 944,700 பேர்கள்) இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களாக இருகிறார்கள். இவர்களில் மிக அதிகமானோர் அமெரிக்கக் குடியுரிமை உடையவர்களும், அதற்கடுத்ததாக, ஐக்கிய இராச்சியம் (United Kingdom), பின்லாந்து, போலந்து ஆகிய நாட்டுக் குடியுரிமை உடையவர்களும் உள்ளனர்.

இந்தப் புதிய நடைமுறை ஆகாய மார்க்கமாகக் கனடாவினுள் பிரவேசிப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும்



புதிய வருடத்திற்கு முன் 1000 சிரிய அகதிகள் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திற்கு வருகை

புதிய வருடத்திற்கு முன்னதாக 1000 சிரிய அகதிகள் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திற்கு வருவர் என எதிர்பார்க்கப் படுகிறது. பிரிட்டிஷ் கொலம்பியாவின் தொழில் அமைச்சர் Shirley Bond கருத்துத் தெரிவிக்கையில், இவ்வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற 2000 சிரிய அகதிகளின் வருகையை விட இத்தடவை வரும் 1000 அகதிகளின் வருகை சுமுகமானதாக இருக்கும் என நம்பிக்கை வெளியிட்டார்.

இவ்வருட டிசம்பர் மாத இறுதிக்கு முன்னதாக 1000 அகதிகள் வர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் Shirley Bond தெரிவித்தார். இவ்வாறு புதிதாக வருபவர்களில் சில குடும்பங்கள் வான்கூவர் நகரிலும், ஏனைய குடும்பங்கள் பிற பகுதிகளிலும் (outside the Lower Mainland) குடியமர்த்தப்பட வேண்டும் என்ற கருத்தை மாகாண அரசு ஆதரிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## நிரந்தர வதிவுரிமையை வெறுக்கும் கனடா வாசிகள்!




சிறப்பான வாழ்க்கைத் தரம், பாதுகாப்பான சூழல் கொண்ட நகரங்கள், சிறந்த கல்வித் தரம், உயர்வான பல்கலைக் கழகங்கள், சிறந்த நீர்வளம், ஞ்..

கனேடிய நிரந்தர வதிவுரிமை கொண்டோர் தங்கள் வதிவுரிமையை மீள ஒப்படைக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

சிறப்பான வாழ்க்கைத் தரம், பாதுகாப்பான சூழல் கொண்ட நகரங்கள், சிறந்த கல்வித் தரம், உயர்வான பல்கலைக் கழகங்கள், சிறந்த நீர்வளம், பல்லின சமூக வாழ்க்கை, சிறந்த சுகாதார வசதி எனப் பல வகைச் சிறப்புக்களைக் கொண்டது கனடா.

கனடாவில் வசிக்க விரும்பி நாள்தோறும் உலக மக்கள் அகதிகளாகவும் குடியேறிகளாகவும் மாணவர்களாகவும் தொழில் நிமித்தமாகவும் வந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு வருபவர்களில் பெரும்பாலானோர் இங்கேயே தங்குவதற்காக நிரந்தர வதிவுரிமை (Permanent Resident) கோரி விண்ணப்பிக்கின்றனர். அவ்வாறு விண்ணப்பிப்போர் நிரந்தர வதிவுரிமை பெற்று தொடர்ச்சியாக 4 வருடங்கள் கனடாவில் வதியுமிடத்து கனேடியக் குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும்.

நிலைமை இவ்வாறு இருக்க, கனேடிய வதிவுரிமையை வேண்டாம் என்று உதறித் தள்ளுவோருக்கான செயல்திட்டம் கனேடியக் குடிவரவு குடியகல்வுப் பிரிவால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து நடைமுறையிலிருக்கும் இத்திட்டம் பிரபலமானதாக இல்லாவிட்டாலும் அதனைப் பயன்படுத்தியோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் மட்டும் 5,205 பேர் விண்ணப்பித்து 17 பேருடையது மட்டுமே நிராகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 2016 இல் 7,378 பேர் விண்ணப்பித்ததில் 20 பேருடையது மட்டுமே நிராகரிக்கப்பட்டுள்ளது. எந்தவிதக் கட்டணங்களும் தேவையற்ற இந்த நடைமுறையில் 14 நாட்களுக்குள் முடிவு அறிவிக்கப்படுகிறது.

தங்களுடைய எதிர்பார்ப்பு நிறைவேறாதவர்களும், தங்கள் சொந்த நாட்டில் ஏற்படக் கூடிய இரட்டைக் குடியுரிமைச் சிக்கல் மற்றும் வேறு காரணங்களுக்காக இவ்வாறு கனேடிய வதிவுரிமையை மீள அளிக்கிறார்கள்.

இந்த நடைமுறையில் மீள ஒப்படைக்கப்படும் வதிவாளர்கள் மீண்டும் கனடாவுக்கு வருவதற்கு வெளிநாட்டவர்கள் கனடா வருவதற்கான நடைமுறைகளின் படி விசா தேவைப்படும். ஆனாலும் அவர்கள் கனடா வருவதற்கு எந்தத் தடைகளும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2015 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு June வரையான காலப் பகுதியில் நிரந்தர வதிவுரிமையை மீளக் கையளித்தோர் பட்டியலில் முதல் இடத்தைச் சீனர்களும் இரண்டாவது இடத்தை இந்தியர்களும் பெற்றுள்ளனர்.

## கனடா மாணவர் கடன் பெறுபவர்களிற்கு புதிய இடைவேளை

மத்திய அரசாங்கம் சமீபத்திய இரண்டாம்நிலை பட்டதாரிகள் அவர்களது மாணவர் கடன்களை சமாளிப்பதற்கான புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

நவம்பர் 1ந்திகதி தொடக்கம் வருடமொன்றிற்கு குறைந்தது 25,000 டொலர்களை உழைக்கும் வரை கனடியர்கள் அவர்களது கனடா மாணவர் கடனை மீள செலுத்த தேவை இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.


இவர்களது வருமானம் மற்றும் குடும்ப அளவு போன்றனவற்றை அடிப்படையாக கொண்டு தங்கள் கடனை சமாளிக்க மாணவர்கள் உதவியை நாடலாம். கடன் பெறுபவர்கள் மாதாந்த கட்டண தொகையை குறைக்க அல்லது முற்றாக நீக்க விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் எதிர்கால வளம் வேலை சந்தையில் இளம் கனடியர்கள் சிறந்த கல்வி மற்றும் பயிற்சிகளை பெறுவதில் அமைந்துள்ளதென வேலை வாய்ப்பு அமைச்சர் மேரிஆன் மைகிசக் தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமான குடும்பங்களை சார்ந்த முழு நேர மாணவர்கள் வருடமொன்றிற்கு 2,000டொலர்கள் முதல் 3,000 டொலர்கள் வரை ஆதரவு தொகை பெறலாம். நடுத்தரவருமானம் பெறும் குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள் 800 டொலர்கள் முதல் 1,200டொலர்கள் வரையும் பகுதிநேர குறைந்த வருமான குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள் 1,200 டொலர்கள் முதல் 1,800டொலர்கள் வரை நிதி உதவி பெறலாம்.கனடா மாணவர் கிரான்ட் 50சதவிகிதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2013 தொடக்கம் 2014வரை கிட்டத்தட்ட 750,000 மாணவர்கள் கனடா மாணவர் கடனை திரும்ப செலுத்துகின்றனர் என தெரிவிக்கப்பபட்டுள்ளது. இவர்களில் சுமார் 234,000 மாணவர்கள் கடனை திரும்ப செலுத்தும் உதவி திட்டத்தினால் நன்மையடைந்துள்ளனர்.

கடன் சுமையால் அவதிப்படும் மாணவர்கள் எத்தகைய நிதி உதவி தெரிவுகள் கிடைக்கும் என்பதை தேசிய மாணவர் கடன் சேவை மையத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.



புதிய குடிவரவு இலக்குகள் கணிசமான அளவினால் அதிகரிக்கும் - ஜோன் மக்கலம்

கனடாவினுள் அனுமதிக்கப்படும் புதிய குடிவரவாளர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவினால் அதிகரிக்க கனேடிய அரசு உத்தேசித்துள்ளது. ஆனால் இத்தகைய அதிகரிப்புடன், புதிய குடிவரவாளர்களுக்கான மீள்குடியமர்வு உதவிகளும் (resettlement assistance) பொருத்தமான விதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.


கனடாவின் புதிய குடிவரவாளர்களின் இலக்குகளை குடிவரவுத்துறை அமைச்சர் விரைவில் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிவாரி ஆலோசகர்கள் குழு ஒன்று கனடாவின் குடிவரவாளர் தொகையை குறிப்பிடத்தக்க அளவால், அதாவது 450,000 ஆக, அதிகரிக்குமாறு கோருகின்ற போதும், அவர்களால் முன்வைக்கப்படும் எண்ணிக்கை மிக அதிகம் என கனேடிய குடிவரவு அமைச்சர் ஜோன் மக்கலம் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 S கோட்பாடு

ராஜ்மோகன் செல்லையா




நவீன உலகின் சகல கூறுகளையும் உள்வாங்கியபடி, எமது அடையாளத்தை அகிலமெங்கும் உறுதிப்படுத்திக்கொள்ள நாம் சளைக்காமல் போராடிக் கொண்டிருக்கின்றோம். சங்க இலக்கியங்கள் வலியுறுத்திச் சென்ற மதிப்பீடுகளை இறுகப்பற்றி நிற்கும் தமிழர் சமுதாயம், உலகில் தோன்றும் புதிய மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கும், நவீன உலகின் விதிகளைப் புரிந்துகொள்வதற்கும், அவற்றை எதிர்கொள்வதற்கும் முனைந்து நிற்கின்றது.

உலகப் போரில் உருக்குலைந்து போன நாடுகளில் ஜப்பான் முக்கியமானது. ஆனால் இன்றைய உலகில் மிக முக்கியத்துவமிக்க ஒரு நாடாக இது விளங்குகின்றது. இரண்டாம் உலகப் போருக்கு பின்னரான காலத்தில் நாட்டிலுள்ள மக்களையும், தனது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையும் பயன்படுத்தி, பல உயர்வான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவே அதன் இன்றைய வளர்ச்சி. அவர்கள் உருவாக்கிய உயரிய கோட்பாடுகளில் ஒன்றுதான் 5 ஞு எனப்படும் செயல்முறைப் பணிகளை சீர்செய்கின்ற முகாமைத்துவ கோட்பாட்டு முறையாகும்.

இன்று உலகளாவிய ரீதியில் பல்வேறு முன்னணி நிறுவனங்கள் 5 ஞு எனப்படும் இந்த முகாமைத்துவக் கோட்பாட்டை முறையாகச் செயல்படுத்தி வியாபார ரீதியில் பெரு வெற்றி கண்டுள்ளன. இந்த 5 ஞு கோட்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு வியாபார நிறுவனம் தனது சீரான பணிகளை சிறப்புடன் செய்வதற்கு அனுமதியளிக்கின்றது. நாளாந்த செயல்முறைகளில் தவறுகள் இடம்பெறும் போது அவற்றை அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் கையாண்டு, அந்த செயல்பாட்டுத் தவறுகளை தீர்ப்பதற்கும், அந்த செயல்பாட்டு தவறுகள் இனிவரும் காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்குமான வழிமுறைகளை இந்த 5 S கோட்பாடு வலியுறுத்தி நிற்கின்றது.

### 5 S கோட்பாட்டின் அடிப்படை என்ன?

ஒரு செயல்பாட்டின் தனித்திறன் (quality) உற்பத்தித் திறன் (productivity), இலாபம் (profitability), வினைத்திறன் (efficiency) சேவை (service), மற்றும் பாதுகாப்பு (safety) போன்ற பல விடயங்களை அடுத்த நிலைக்குக் கொண்டுவர உதவும் ஓர் அடிப்படைக் கோட்பாடுதான் இந்த 5S உலகம் போற்றும் இந்த 5S களுக்குரிய காரண கர்த்தாக்களாக Seiri, Seiton, Seioso, Seyketsu, Shitsuke எனப்படும் ஐந்து ஜப்பானிய சொற்கள் உள்ளன. இதை ஆங்கிலத்தில் Sort, Set in order, Shine, Standardise, Sustain என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

### 1. Sort

பயனற்ற பொருட்களை நீக்கி சரியாக ஒழுங்குபடுத்தும் முறை இதனுள் அடங்கும். முதலில் தேவையான, தேவையற்ற பொருட்கள் மற்றும் செயல்கள் போன்றவற்றை அதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தல் வேண்டும். இதன் மூலம் இலகுவான கையாடல், நேர சேமிப்பு, இடவசதி, மட்டுப்படுத்தப்படாத தொடர்பு நிலை போன்ற விடயங்களில் முன்னேற்றம் அடையவைக்கின்றது.

### 2. Set in order

பயனற்ற பொருட்களை நீக்கிய பின்னர் தேவையான பொருட்களுக்கு டயடிநட பண்ணிக்கொள்ள வேண்டும். பின்னர் பொருட்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அவற்றைச் சீராகவும் ஒழுங்குமுறையுடனும் வரிசைப்படுத்தி அடுக்கி வைக்கவேண்டும். இதன் மூலம் பொருட்களின் இருப்பைக் கட்டுப்படுத்தி (inventory control) மேலதிக செலவுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

### 3. Shine

பொருட்களையும், இடத்தையும் தூய்மையுடன் வைத்திருப்பதை இது குறிக்கின்றது. தகுந்த அட்டவணை போடப்பட்டு சகல அங்கத்தினர்களுக்கும் இதன் பொறுப்புகளை வழங்கி செயல்படுத்த முடியும். குறிப்பிட்ட தினங்களுக்கு ஒரு பகுதி என திட்டங்கள் வரையப்பட்டு அந்தந்தப் பகுதியிலுள்ள உள்ள பொருட்களைத் தூய்மைப்படுத்தி சுத்தமாக வைத்துக்கொள்ள முடியும். இது ஒரு வியாபாரத்தின் முக்கியமானதொரு விடயமாக கருதப்படுகின்றது.

### 4. Standardise

ஒரு செயல்முறையை வரையறை செய்யப்பட்ட முறையில்தான் செய்ய வேண்டும் என்பதை ஆவணப்படுத்தி அதை நிலைப்படுத்திக் கொள்ளும் முறை இதற்குள் அடங்கும். இந்தச் செயல்முறை பொருட்களின் தரத்தைப் பாதிக்காமல் இருப்பதற்கும், அவை எந்த இடங்களில் இருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் இலகுவில் தெரியப்படுத்துவதற்கும் உதவும். கிளைகள் உள்ள நிறுவனங்களுக்கு இது அவசியம் தேவைப்படும்.

### 5. Sustain

மேற்கூறப்பட்ட எல்லா விடயங்களையும் தொடர்ந்து செயல்படுத்துவதன் அவசியத்தை இது வலியுறுத்தி நிற்கின்றது. இதை அமுல்ப்படுத்துவதன் மூலம் கட்டுக்கோப்பான முறையில் உற்பத்தித் திறன், பொருட்களின் தரம் மற்றும் சேவை போன்றவற்றை அதிகரிக்க முடியும். ஊழியர்களுக்கு உளவியல் ரீதியாக பெரும் தாக்கத்தைக் கொடுக்காமல் இயல்பாக இந்த செயல்முறைகளைப் பின்பற்றி உற்பத்தியை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

ஜப்பான் நாட்டினர் மட்டுமல்லாது, இன்று உலகம் பூராகவும் இந்த 5 ஞு கோட்பாட்டினைப் பயன்படுத்தி அதிக முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில் இந்தக் கோட்பாட்டை நமது நிறுவனங்களிலும், அமைப்புக்களிலும், சிறு வியாபாரங்களிலும் பயன்படுத்தும் போது வெற்றிகொள்ளும் வாய்ப்புகள் அதிகமாகின்றன. வர்த்தக நோக்கங்களுக்கு மட்டுமல்லாது இந்த 5 S கோட்பாட்டை வீட்டு நிர்வாகத்திலும், பிள்ளைகளின் கல்வியிலும் பயன்படுத்தும்போது பாரிய முன்னேற்றங்களைக் காணமுடியும். குழந்தைகளுக்கு இந்தக் கோட்பாட்டின் அடிப்படையை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களது நாளாந்த நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களின் ஆளுமையை வளர்க்க முடியும்.

எமது அன்றாட கடமைகளையும், சுமைகளையும் 5 ஞு கோட்பாட்டின் படி ஒழுங்குபடுத்துகின்ற போது பிரச்சினைகள் இல்லாத நிறைவு நிலை கிடைக்கின்றது. இதன் மூலம் எப்பொழுதும் சுத்தமாகவும், அழகாகவும், ஒழுங்கு முறையில் அமைந்ததுமான ஒரு வாழ்க்கை முறைமையை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும்.

5 S கோட்பாடு என்பது வெற்றியின் வெளிப்படையான ரகசியம். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடிய வரலாறு - 7

# தமிழர்களின் மரபுரிமை!

குரு அரவிந்தன்

கனடாவில் குடியேறியவர்களில் ஐரோப்பிய மக்கள் சுமார் 80 வீதத்திற்கும் மேற்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்களில் பலர் ஆரம்பகாலத்தில் வந்து கனடிய மண்ணில் குடியேறியவர்கள். இவர்களைவிட சுமார் 15 வீதத்தினர் அடையாளம் காணக்கூடிய சிறுபான்மையினராக இருப்பதாகக் குடிசன மதிபீட்டின் படி தெரிகின்றது. இவர்களில் 3.4 வீதத்தினர் முதல் குடியினர் என்றும் தெரிகின்றது. இதைவிட சிறுபான்மை இனத்தவர்களில் சீனர்கள், கறுப்பர்கள், தெற்காசிய சமூகத்தினர் ஆகியோர் அடையாளம் காணக்கூடிய சிறுபான்மையினர் என்ற வகைக்குள் அடங்குவர். ஈழத்தமிழர்களும் தெற்காசிய சமூகத்திற்குள்ளேயே அடங்குகின்றனர்.

ஆசியக் கனடியர்களை எடுத்துக் கொண்டால், தங்கள் நாட்டில் ஏற்பட்ட உள்ளூர் பிரச்சனைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டதால், அவர்களுக்கு கனடா நாடு தஞ்சம் கொடுக்கவே, அவர்கள் கனடாவில் குடியேறினார்கள். கனடாவில் குடியேறிய ஒவ்வொரு ஆசிய நாட்டவரும் ஏனையவர்களைப் போல வெவ்வேறு பிரச்சனைகளை எதிர் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். குறிப்பாக வியட்நாம் போர், கொரியன் போர், ஈழப்போர் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களை இங்கே குறிப்பிடலாம். இப்படியான சூழலில் கனடா வந்த ஆசிய நாட்டவர்களில் அனேகர் சில இடங்களை மட்டுமே தெரிவு செய்து அங்கு குடியேறினர். அப்படிக் கனடாவில் குடியேறிய நான்கு முக்கிய இடங்களை எடுத்துக் கொண்டால், ரொறன்ரோ, வான்கூவர், மொன்றியல், கல்காரி போன்ற இடங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.


குடிசன மதிப்புத் தரவுகளை எடுத்துப்பார்த்தால் ஒன்ராறியோவில் சுமார் 2,605,000 க்கும் மேற்பட்ட ஆசியர்கள் குடியிருக்கிறார்கள். ரொறன்ரோவில் குடியேறியவர்களில் சீனர்கள், பிலிப்பினோ, இந்தியர், ஸ்ரீலங்கன் போன்ற ஆசியர்கள் முக்கிய இடம் பெறுகின்றனர். பிரிட்டிஷ் கொலம்பியாவில் சுமார் 1,122,000 ஆசியர்கள் இருக்கின்றார்கள். வான்கூவர் நகரத்தை எடுத்துப் பார்த்தால் சீனர்கள், பிலிப்பினோ, கொங்கொங் சீனர்கள், இந்தியர்கள், வியட்நாமியர், தைவான் நாட்டவர், கொரியன் போன்றோர் அடங்குவர். கியூபெக்கை எடுத்துக் கொண்டால் சுமார் 488,906 ஆசியர்கள் குடியிருக்கின்றார்கள். மொன்றியலை எடுத்துக் கொண்டால் சீனர், வியட்நாமியர், பிலிப்பினோ, ஸ்ரீலங்கன் ஆகியோர் அடங்குவர். அல்பேட்டாவை எடுத்துக் கொண்டால் 551,710 ஆசியர்கள் குடியிருக்கின்றார்கள். கல்காரியை எடுத்துக் கொண்டால் பிலிப்பினோ, இந்தியர், சீனர், வியட்நாமியர், பாகிஸ்தானியர் ஆகியோர் அடங்குவர். மனிற்ரோபாவிலும் 127,000 ஆசியர்கள் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதில் ஸ்ரீ+லங்கன் என்று புள்ளிவிபரப் பட்டியலுக்காகத் தரம் பிரிக்கப்பட்டாலும் ஈழத் தமிழர்களையே அது சுட்டி நிற்கின்றது. தமிழர்கள் கனடாவின் ரொறன்ரோ, மொன்றியல், வான்கூவர், கல்காரி போன்ற இடங்களில் அதிகமாக வசிக்கின்றார்கள்.

கனடாவிற்குப் புலம் பெயர்ந்த ஆசியர்களில் அனேகமான சீனமக்கள் வான்கூவரில் குடியேறினார்கள். ரிச்மண்ட் என்ற இடத்தில் அமைந்துள்ள அபுடீன் சென்ரர் இங்கு பிரபலமானது. இதைவிட பெரும்சந்தைகளும் உணவு விடுதிகளும் நிறையவே இருக்கின்றன. மீன் சந்தைகளில் தொட்டியில் இருந்து மீனை எடுத்து வெட்டிக் கொடுப்பதையும் இங்கே அவதானிக்கலாம் என்று பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். விவசாயமும் மீன்பிடியும் இங்கே முக்கிய தொழிலாக இருக்கின்றது. றிச்மன் என்ற இடத்தில் கிட்டதட்ட 50 வீதமானவர்கள் சீனர்களாக இருக்கின்றார்கள். அவர்களைச் சார்ந்த உணவு விடுதிகள், பலசரக்குக் கடைகள் போன்றவற்றை இப்பகுதியில் காணமுடியும். இதே போலவே சீக்கிய இனத்தவர்களின் கடைகளும், வழிபாட்டுத் தலங்களும் அவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் இருக்கின்றன. குறிப்பாக பிரிட்டிஷ் கொலம்பியா, ஒன்ராறியோ, அல்பேட்டா ஆகிய மாகாணங்களில் கடைகள், சந்தைகள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியன அவர்களின் ஊர்களில் உள்ளவற்றை நினைவுபடுத்துவனவாக இருப்பதைக் குறிப்பிடலாம். இதைவிட கிச்சினர், ஒன்ராறியோவில் உள்ள மவுண்ட்கோப் மயானத்தில் உலகயுத்தத்தின்போது மரணமான சீக்கின வீரர்களின் நினைவுச் சின்னமும் இருக்கின்றது. றோயல் கனடியன் மவுண்ட் பொலீசில் தொப்பி வைத்த சீக்கியர்கள் முதலில் நிராகரிக்கப்பட்டாலும் 1990 ஆம் ஆண்டிலிருந்து அவர்களும் இணைவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

தெற்காசியர்களில் ஒருவர்களான ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் 1983 இல் நடந்த இனக்கலவரமும், அதைத் தொடர்ந்து நடந்த ஈழப்போர் காரணமாகவும் தங்கள் வீடு வளவுகளை அவர்கள் இழந்து சொந்த பந்தங்களைப் பிரிந்து கனடாவிற்குப் புலம் பெயர்ந்து வந்தார்கள். புதிய மண் என்பதால், தொடக்கத்தில் அவர்களின் வாழ்க்கை சுமூகமாக அமையவில்லை. தாயகக் கனவுகள் மட்டுமல்ல, புதியபூமி, பொருளாதார நெருக்கடி, பல்கலாச்சார சூழல், பனிவிழும் காலநிலை வேறுபாடுகள், கலாச்சார வேறுபாடுகள் இவற்றை எல்லாம் எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் ஏனைய ஆசிய மக்களைப் போலவே இவர்களுக்கும் தொடக்கத்தில் தங்களை நிலைநிறுத்துவது என்பது ஒருவகைப் போராட்டமாகவே இருந்தது. ஆனாலும் ஆங்கில மொழி அறிவும், கல்விச் செல்வமும் அனேக தமிழர்களிடம் இருந்ததாலும், தங்கள் விடா முயற்சியின் துணையோடு காலப்போக்கில் புகுந்த மண்ணான கனடிய மண்ணில் தங்களை ஓரளவு அடையாளப் படுத்தக்கூடியதாக இருந்தது.

ஒன்ராறியோ, கியுபெக் அல்பேட்டா போன்ற இடங்களில் வசிக்கும் தமிழர்கள் அங்குள்ள தங்கள் கடைகள், வழிபாட்டுத் தலங்கள், வீதிகளுக்குத் தமிழ் பெயர் சூட்டுதல், கோயில்களுக்கு ஊரில் உள்ள கோயில்களின் ஞாபகமாகப் பெயர்களைச் சூட்டல், கடைகளுக்கு ஊரில் உள்ள கடைகளின் ஞாபகமாக பெயர்சூட்டல் போன்றவை மூலம் தங்கள் நினைவுகளை மீட்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்கி அப்படியே வாழப்பழகிக் கொண்டார்கள். மற்றும் ஊர் ஒன்றியங்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள் போன்றவற்றை அமைந்து அதன் மூலம் தங்களை அடையாளப் படுத்தி, தாய்மண்ணிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளையும் செய்தார்கள். தமிழ் மொழித் திரைப்படங்கள் காண்பிப்பதற்கான திரை அரங்குகளும் இவர்கள் வாழும் பகுதிகளில் உண்டு. தமிழ் இலக்கியங்கள் மூலமும், தமிழ் ஊடகங்கள் மூலமும் தமிழர்களின் தாய் மொழியான தமிழ் மொழியின் வளர்ச்சி மேற்கு நாடுகளில் ஒன்றான கனடாவில் சிறப்பாக இடம் பெறத் தொடங்கிவிட்டது. இலக்கிய ஆர்வலர்களின் பார்வை கனடாத் தமிழர்களை நோக்கித் திரும்பியிருப்பதே இவர்கள் செய்த பெரியதொரு சாதனையாகும். இதைவிட தமிழ் மொழி கற்பதற்கான வசதிகளை மாகாண அரசுகளின் உதவியுடன், கல்விச் சபைகள் மூலம் நடைமுறைப் படுத்தியும் வருகின்றார்கள். தமிழர்களின் நாட்காட்டியின் முதல் மாதமான தைமாதத்தை இப்போது தமிழர் மரபுரிமை மாதமாகப் பிரகடனப் படுத்தி இருக்கின்றார்கள். இவற்றின் மூலம் தமிழர் என்றதொரு இனத்தின் அடையாளத்தை புலம்பெயர்ந்த மண்ணான கனடாவில் தக்கவைத்திருக்கின்றார்கள். இந்த அடையாளத்தைத் தொடர்ந்தும் நிரந்தரமாகக் கனடிய மண்ணில் தக்கவைப்பது அடுத்த தலைமுறையின் கைகளிலேயே தங்கி இருக்கின்றது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் குழந்தைகளை அழுக்குச் சாப்பிட விடுங்கள்

என்ன இது? குழந்தைகளை அழுக்குச் சாப்பிட அனுமதிப்பதா என்று ஆச்சரியப்படுகிறீர்களா? சுத்தம் சுகம் தரும் என்பதுதான் நம் பழமொழி. ஆனால் இப்போது சுத்தம் சுகவீனம் தரும் என்று ஒரு புதுமொழியும் உருவாக்கவேண்டிய அளவிற்கு நிலமைகள் மாற்றமடைந்திருப்பது ஆச்சரியம்தான்.

நோய் பரவும் காலங்களிலும் பொதுஇடங்களிற்கு குறிப்பாக வைத்தியசாலைக்கு சென்று வருகின்ற பொழுதுகளிலும் கைகளை தொற்றுநீக்கி பாவித்து சுத்தப்படுத்துவது நல்லதுதான்.

ஆனால் இன்றைய நாட்களில் சுத்தம் சுத்தம் என்று சொல்லி தாராளமாக நாம் பாவிக்கும் antibackterial வகை இரசாயணப்பதார்த்தங்களால் Microbes எனப்படும் நுண்ணுயிரிகளை முற்றுமுழுதாக துடைத்து அகற்றிவிடுவதுதான் பிரச்சனை.

ஒரு குழந்தை பிறக்கும்வரை நுண்ணுயிர்கள் (சாதாரண பேச்சு வழக்கில் கிருமி என்று சொல்வார்கள்) அதன் உடம்பில் இயல்பாக இருக்காது. அதேபோல் Immune system எனப்படும் நோய் எதிர்ப்பு கட்டமைப்பும் வளர்ச்சியடைந்திருக்காது.

ஆனால் குழந்தை கருவறையில் இருந்து வெளியில் வந்தவுடன் வெளிச்சூழலில் இருக்கும் நுண்ணுயிரிகள் வாய்வழியாக இலகுவாக குடலுக்குள் செல்ல ஆரம்பிக்கும்.

இவ்வாறு உடலினுள் செல்லும்; நுண்ணுயிர்கள் வெள;வேறு வகை மூலக்கூறுகளையும் சில வேதிப்பொருட்களையும் உற்பத்தி செய்யும். அவை குடலின் உற்பகுதிச் சுவர்களில் உள்ள Cells என்று சொல்லப்படும் உயிர்க் கலங்களோடு நேரடியாக இடைத்தொடர்பை ஏற்படுத்தி தாக்குதல் தொடுக்க ஆரம்பிக்கும்.

மறுபுறம் உடலில் உள்ள அதுவரை செயற்பாடற்றிருந்த நோய் எதிர்ப்பு கட்டமைப்பானது தன்னுடைய கலங்களை தாயார்படுத்தி சண்டைக்கு அனுப்பும். அதாவது புதிதாக உட்புகுந்த நுண்ணுயிர்க்கலங்களோடு உடலின் பாதுகாப்புப் பொறுப்பில் இருக்கும் நோய்எதிர்ப்புக் கலங்கள் சண்டையிடும்.

சுருக்கமாகச் சொன்னால் இந்தச் சண்டையில் வெளியிலிருந்து சென்ற நுண்ணுயிர்க் கலங்கள் வென்றால் குழந்தை நோய் வாய்ப்படும்;. ஏற்கெனவே உள்ளிருந்த நோய் எதிர்ப்புக் கலங்கள் வென்றால் குழந்தை ஆரோக்கியமாக இருக்கும் எனலாம்.

இவ்வாறு குடலில் நடைபெறும் முதல் சண்டையில் பயிற்சிபெற்ற நோய் எதிர்ப்புச் சக்திக் கலங்களை உடனடியாக உடலின் ஏனைய பாகங்களின் பாதுகாப்பிற்காகவும் அனுப்பிவைக்கிறது இந்த நோய் எதிர்ப்பு கட்டமைப்பு.

இன்னும் சொல்லப்போனால் நம் உடலில் எந்தளவுக்கு நோய் எதிர்ப்பு சக்தி வலுவாக இருக்கிறதோ அந்தளவுக்கு நம் உடல் எதிர்பாராத தொற்றுக்களில் (Infection) இருந்தெல்லாம் நம்மை இலகுவாக பாதுகாக்கும். நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி வலுவாக இருக்கவும் அதை எப்போதும் இயங்கு நிலையில் வைத்திருப்பதிலும் இந்த வெளியிலிருந்து குடலுக்குள் செல்லும் நுண்ணுயிர்கள் பிரதான பங்கு வகிக்கிறது.

இந்த நுண்ணுயிர்களுடன் தினசரி சண்டைப்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நம் நோய்எதிர்ப்பு சக்தியால் தான் திடீரென தாக்கும் தொற்றுக்களோடும் சண்டையிட்டு உடலைப்பாதுகாக்க முடிகிறது.

நாம் தினசரி தொற்று நீக்கிகளை பாவித்து நுண்ணுயிர்களை முற்றுமுழுதாக துடைத்தெடுத்து விடுவதால் நாம் சுத்தமாக இருக்கின்றோம் என்று நினைத்துக் கொண்டாலும் இவை நம் நோய் எதிர்ப்பாற்றலை பாதிக்கிறது என்பதும் குறிப்பாக குழந்தைகளின் உடலில் காணப்படும் நோய் எதிர்ப்பு ஆற்றலை ஆழமாக பாதிக்கிறது என்பதையும் அண்மைய புதிய ஆய்வுகள் வெளிக்கொணர்ந்திருக்கின்றன.

இது பற்றி Micro-biologist எனப்படும் நுண்உயிரியலாளார் மேரி கிளாரி அரீற்றா (Marie-Claire Arrieta) அவர்களும் கல்கரி (Calgary) பல்கலைக்கழகத்தின் உதவிப் பேராசிரியரும் நுண்உயிரியலாளருமாகிய பிறெற் பினலி (Brett Finally)அவர்களும் 'அவர்களை அழுக்குச் சாப்பிட விடுங்கள்: அதிகம் சுத்திகரிக்கப்பட்ட உலகில் இருந்து நம் குழந்தைகளை காப்பாற்றுதல்' (Let Them Eat Dirt: Saving our Children from an Over sanitized World) என்றொரு புத்தகத்தினை எழுதியிருக்கிறார்கள்.

அவர்கள் கூறியிருக்கும் முக்கியமான சில விடயங்களைக் கவனியுங்கள்.

நுண் உயிரியலாளர்களாகிய நாம் எமது குடல்களில் உயிர்ப்புடனிருக்கும் Microbiome என்று அழைக்கப்படுகின்ற நுண் உயிர்க்கட்டுமானங்களில் உள்ள நுண்ணுயிர்க்குடும்பங்களை ஆய்வு செய்துகொண்டிருந்தோம்.

அண்மைய வருடங்களில் எங்களது ஆய்வுகளிலும் மற்றைய ஆய்வுகூடங்களின் ஆய்வுகளிலும் 'குழந்தைப்பருவத்தில் நம் உடலில் வலிமைபெற்று எழும் நுண் உயிர்க்கட்டுமாணங்களின் செயல்பாடுகளானது எங்கள் வாழ்நாள் முழுவதற்குமான உடல் ஆரோக்கியத்தில் முக்கிய பங்காற்றுகின்றன' என்ற உண்மையைக் கண்டறிந்தோம்.

எப்போதும் சுத்தம் சுத்தம் என்று நுண்ணுயிர்கள் எல்லாவற்றையும் கழுவி எடுத்துவிடுவதன் மூலம் குழந்தையிலிந்தே இயல்பாக வலிமைபெற்று எழக்கூடிய நோய் எதிர்ப்பு சக்தியை ஒவ்வொரு குழந்தையும் இழக்கும் அபாயத்தை எண்ணிப்பார்த்தோம். நாளடைவில் ஒவ்வாமை தொடக்கம் உடல்பருமன்வரையான நாள்பட்ட நோய்களுக்கு நாங்களே காரணமாக இருந்துவிடுகின்றோம் என்ற செய்தியை எல்லோரிடமும் கொண்டு சேர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தோம்.

நாங்கள் வெறும் ஆராய்ச்சி யாளர்கள் மட்டுமல்ல பெற்றோர் களாயும் இருக்கிறோம். இது பற்றிய அறிவை வெளியில் கொண்டு வருவதன்மூலம் பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் பயனடைவார்கள் என்று எண்ணியே இவ்விடயத்தை ஒரு புத்தகமாக எழுதிவெளியிட்டிருக்கிறோம்.

Epidemiological எனப்படும் நோய்விபரவியல் ஆதாரங்கள் காட்டுவதன்படி பண்ணைச் சூழலில் வளரும் குழந்தைகள் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் குறைவாக இருப்பதை காணமுடிகிறது.

அதற்காக நீங்கள் உடனே உங்களுடைய பொருட்களை எடுத்துக்கொண்டு ஒரு விவசாயியாகி பண்ணைக்குச் சென்றுவிடமுடியாது. ஆனால் இதுவரையான தரவுகளின்படி குறைந்த சுத்தத்துடன் உள்ள ஒரு சூழலில் வசிப்பது உண்மையில் பயனுள்ளது என்று சொல்லலாம்.

குழந்தைக்கு வாயில் கொடுக்கும் எல்லாவற்றையும் நூறுசதவீதம் தூய்மையாக்கிவிட்டு கொடுப்பது ஆஸ்துமா போன்ற நோய்த்தாக்கங்களிற்கான சந்தர்ப்பத்தை அதிகரிப்பதை காண்கிறோம். அத்துடன் குழந்தைகள் வாயில் எப்போதும் வைத்திருக்கும் பிளாஸ்டிக் சூப்பியை பெற்றோர்களின் வாயினால் [illegible] கொடுப்பது ஆஸ்துமாவை உருவாக்கும் சம்பவங்களை குறைக்கிறது என்பதையும் காண்கிறோம். இதே விடயம் ஒரு செல்லப் பிராணியை வளர்ப்பதற்கும் ஒத்துப்போகிறது, குறிப்பாக நாய்வளர்ப்பிற்கு பொருந்தும். உங்கள் குழந்தைகளை பாதுகாப்பாக நாய்களுடன் விளையாட விடுங்கள் என்கிறார்கள் அவர்கள்.

அதாவது வாய்வழி கொஞ்சம் அசுத்தமும் உள்செல்வதே முழுமையான ஆரோக்கியத்திற்கு நல்லதென்கிறார்கள். அதுவும் குழந்தைப்பருவத்தில் இவ்வாறு அசுத்தம் உள் செ.ல்லும் போது வலுவான நோய் எதிர்ப்புக்கட்டமைப்பை உருவாக்க உதவுவதுடன் ஆயுள் முழுமைக்கும் சகல நோய்களையும் எதிர்க்கும் நோய்எதிர்ப்புச் சக்தி பெற்று சுகவாழ்வு வாழ உதவுகிறது என்கிறார்கள்.

இனிமேல் உங்கள் குழந்தைகளைக் கொஞ்சம் அழுக்குச் சாப்பிட அனுமதியுங்கள் என்றோ அல்லது குறிப்பிட்ட வகை அழுக்கை போத்தலில் அடைத்து ' இதைக் குழந்தைக்கு ஊட்டி நோய் எதிர்ப்பு சக்தியை . அதிகரித்துக்கொள்ளுங்கள் என்றோ விளம்பரங்கள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சுத்தம் சுகம் தரும்! அசுத்தம் சுகவீனம் தரும்! இவை பழமொழிகள்.

அசுத்தமும் சுகம் தரும்! அதிசுத்தம் சுகவீனமும் தரும்! என்று இனிப் புதுமொழிகள் உருவாக்கவேண்டிய காலத்தில் இப்போது நிற்கிறோம். ●

**இந்திரன் ரவீந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது அறுவடைக் காலம்....!

**தமிழ் தேசியம் பேசுவதும் தேர்தலில் நிற்பதும்**

இந்த கட்டுரை இப்படியான ஒரு கதையுடன் ஆரம்பிக்கின்றது—

இந்த கட்டுரையை ஒரு குட்டிக் கதையுடன் ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இக்கரையில் இரண்டு பேர் நின்று கொண்டிருக்கிறார்கைள். ஓடம் இல்லை. எப்படி அக்கரைக்குப் போவது?

இந்த நேரத்தில் ஒரு காளை மாடு அங்கே வந்தது. அதுவும் அக்கரைக்குப் போக வேண்டும். ஆனாலும் அதற்கு ஓடம் எதுவும் தேவைப்படவில்லை. அப்படியே ஆற்றில் பாய்ந்தது—

நீந்த ஆரம்பித்தது. இதைப் பார்த்த இரண்டு பேரில் ஒருவர் ஆற்றில் குதித்தான். அந்தக் காளை மாட்டின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். காளை மாடு சுலபமாக அவனை இழுத்துச் சென்று அக்கரையில் சேர்த்துவிட்டது.

அடுத்தவன் பார்த்தான். நமக்கு ஒரு 'வால்' கிடைக்காதா என்று எதிர்பார்த்தான்.

இந்த நேரம் ஒரு நாய் வந்து ஆற்றில் குதித்தது. இதுதான் நேரம் என்று இவனும் ஆற்றில் விழுந்து அந்த நாயின் வாலைப் பிடித்துக் கொண்டான்.

இந்த மனிதனை இழுத்துக் கொண்டு நாயால் ஆற்றில் நீந்த முடியவில்லை, திணறியது. ஒரு கட்டத்தில் நாய், 'வாள்– வாள்' என்று கத்த ஆரம்பித்து விட்டது.

விளைவு...! இருவருமே ஆற்று நீர் போகும் திசையிலேயே மிதந்து போய்க் கொண்டிருக்கிறார். அவர்கள் போக வேண்டிய திசை வேறு. போய்க் கொண்டிருக்கிற திசை வேறு.

கரை சேர நினைக்கிற மனிதர்களின் கதை இது. சிலர் கரையிலேயே நின்று விடுகிறார்கள். சிலர் காளையின் வாலைப் பிடித்துக் கொள்கிறார்கள். சிலர் நாயின் வாலைப் பற்றிக் கொள்கிறார்கள்

தமிழர்க்ள செறிந்து வாழும் ஒன்ராறியோ மாகாணத்தில் ஆட்சியாளரை தீர்மானிப்பதற்கான தேர்தல் 2018ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தலுக்கு இன்னும் 20 மாதங்கள் இருக்கின்ற நிலையில் இப்போதே தேர்தல் காச்சல் நம்மை தாக்கத் தொடங்கியிருக்கின்றது.

கடந்த மாகாண சபைத் தேர்தல்களிலும் இடைத் தேர்தல்களிலும் தமிழர்களின் பங்குபற்றுதல்கள் இருந்த போதிலும் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தமிழ் வேட்பாளர்கள் அதிகளவில் போட்டியிடுவதற்கான ஏது நிலைகள் தோன்றியுள்ளதை அண்மைக்கால முகப்புத்தக அறிவிப்புகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

பல்லின சமூகங்கள் எவ்வாறு ஒரு நாட்டில் தமது பண்பாடுகளும் கலாசார பாரம்பரியங்களையும் தொலைத்து விடாமல் வாழ முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக திகழும் ஒரு நாட்டில் யாரும் தேர்தல்களில் போட்டியிடலாம் வெற்றி பெறலாம்.

[illegible] விரும்பும் கட்சியில் இணைவதும் அந்த கட்சி சார்பில் தேர்தல்களின் பங்கு பற்றுவதும் தனி மனித உரிமை என்பதோடு அதுவே ஜனநாயகத்தின் சிறந்த பண்பாகவும் கொள்ளப்படுகின்றது.

**யாரெல்லாம் போட்டியிட விரும்புகின்றார்களோ அவர்கள் எல்லாம் வேட்பாளர்களாகலாம் என்பதும் அந்த பண்பின் வழிவரும் சிறப்புரிமை.**

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் பிரததான கட்சிகளின் சார்பில் தமிழர்கள் முன்னிறுத்தப்பட்ட போதிலும் இது வரை எவரும் ஒன்ராறியோ மாகாண சபைக்கு தெரிவாகவில்லை என்பது கசப்பான உண்மை தான்.

கனேடியப் பாராளுமன்றத்திற்கே இரண்டு தமிழர்கள் தெரிவாகி வரலாறு படைத்துள்ள நிலையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் ஒரு மாகாண சபைக்கு தமிழர்கள் இதுவரை தெரிவாகமால் இருப்பது துரதிஸ்டவசமானது.


இதற்கான காரணங்களை ஆராய்வதை விடவும் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தை உருவாக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி இப்போதாவது எழுப்பப்படுவது அவசியமாகின்றது.

ஸ்காபுரோ ரூட்ஜ் ரிவர் தொகுதியில் இந்த ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் லிபரல் கட்சியும், புதிய ஜனநாயக் கட்சியும் தமிழர்களை வேட்பாளர்களாக நிறுத்திய போது தமது கட்சியின் வெற்றிக்காக தமிழர் அல்லாத மாற்றின சமூகத்தை சேர்ந்த ரேமண்ட சோ அவர்களை நிறுத்தி அவரை வெற்றியடைச் செய்தது பற்றிக் பிரவுணின் கொன்சவேற்றிக் கட்சி.

**தமிழ் மக்களின் அதிகளவான ஆதரவுடன் கட்சியின் தலைமையை வெற்றி கொண்ட பற்றிக் பிரவுண் ஸ்காபுரோ ரூட்ஜ் ரிவர் தொகுதியில் போட்டியிடுவதற்கு தமிழ் வேட்பாளர் ஒருவரை நியமிக்காமல் தமிழர்களை ஏமாற்றி விட்டார் என்ற ஆதங்க குரல்கள் பலமாக எழுந்த போது நடைபெறவுள்ள தேர்லில் போட்டியிடுவதற்கு குறைந்தது மூன்று வேட்பாளர்களுக்காவது வாய்ப்பு வழங்குவதாக அவர் உறுதியளித்திருந்தார்.**

தனது உறுதி மொழியை அவர் காப்பாற்றப் போகின்றாரார அல்லது ஒன்ராறியோவில் ஆட்சி மாற்றத்தை நோக்கிய நகர்வில் இந்த உறுதி மொழிகள் காற்றாகப் போகின்றனவா என்பதை காலம் தன் பதிலாக விரைவில் எமக்குச் சொல்லும்.

ஆனால் பற்றிக் பிரவுண் அவர்கள் உறுதியளித்தவாறு மூன்று தமிழ் வேட்பாளர்கள் கொன்சவேற்றிக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட வேண்டுமானால் அதற்கான தயார் படுத்தல்கள் இப்போதே மேற்கொள்ளப்பட வேண்டியவது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானது.

ஆனால் போட்டிக்களத்தில் உள்ள தமிழர்களை போட்டியை விட்டு வெளியேற்றுவதில் கொன்சவேற்றிக் கட்சியின் தமிழ் தலைமைகள் அல்லது பற்றிக் பிரவுணுக்கு "நெருக்கமான" தமிழர்கள் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

அவர்களுக்கு நெருக்கமானவர்களை வேட்பாளர்களாக நியமிப்பதற்காக பல தகிடு தத்தங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இரு ஜனநாயக நாட்டில் பிரதான கட்சி ஒன்றில் வேட்பாளர் நியமனத்தில் இடம்பெறும் இது போன்ற குழறுபடிகளுக்கும் பக்கச்சார்பு செயல்பாடுகளுக்கும் காரணம் தமது இந்த செயல்பாட்டை யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள் என்கின்ற ஒரு பயமற்ற பந்தா தவிர வேறெதுவும் இல்லை.

ஏற்கனவே ரேமண் ட் சோவின் நியமனத்தின் போதும் வேட்பாளர் தேர்தலை நடத்தாமால் அவரை வேட்பாளராக நியமித்து தனது "ஜனநாயக" பண்பை காற்றில் பறக்க விட் கொன்சவேற்றிக் கட்சியினர் மீண்டும் அதே பாணியிலான "நியமன" வேட்பாளர்களை தமது சொல் கேட்கும் கனவான்களை களமிறக்கும் கனவு நிறைவேறுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**மறுபுறம் இடைத் தேர்தலில் தெரிவான ரேமண்ட் சோ " போலவே" ஏற்கவே வேறு ஒரு கட்சியின் வேட்பாளர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வி அடைந்தவரை இந்த தேர்தலுக்கு பின்கதவால் அழைத்து வருவதில் உள்ள சூட்சுமத்தை தான் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது.**

இவற்றின் பின்னால் கட்சி நலனோ தமிழ் தேசிய நலனோ இல்லை என்பது மட்டும் நூறுவீதம் உண்மை.ஆனால் அடுத்த முறை ஆட்சியமைக்கும் என்று பலராலும் எதிர்பார்க்கப்டும் கொன்சவேற்றிக் கட்சியின் தமது சொல் கேட்டு ஆடும் பொம்மைகளை தமிழ் வேட்பாளராக்கி வெற்றி பெற வைத்து எதையோ சாதிப்பதற்கு "அவர்கள்" தீர்மானித்துள்ளார்கள் என்பதை மட்டும் உறுதியாக நம்பலாம்.

மறுபுறம் ஏற்கனவே தேர்தல் களங்களில் நின்ற லிபரல் கட்சி மற்றும் புதிய ஜனநாயக் கட்சியின் வேட்பாளர்களுடன் இன்னும் சில புதிய மற்றும் பழைய முகங்களும் அந்த கட்சிகளின் சார்பில் போட்டியிடக் கூடும் என்று சொல்லப்படுகின்றது.

லிபரல் கட்சியின் சார்பில் ஒரு தொகுதிக்கான வேட்பாளர் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஏனைய தொகுதிகளுக்கு யாரை நியமிக்கலாம் என்பதை எப்போதும் லிபரலுக்கு "ஆள்" பிடிக்கும் அமைப்பினர் தீர்மானிப்பார்கள். அவர்களை தாண்டி யாரும் லிபரலுக்குள்ள நுழைய முடியாதென்பதால் "அவர்களுக்குள்" இருந்து சில முக்கிய " பிரமுகர்களே" வேட்பாளர்களாக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது.

அதற்கான ஆயத்தங்களை உலகப் புகழ் பெற்ற ஹவார்ட் பல்கலைக்கழகத்திற்கான தமிழ் இருக்கையை ஏற்படுத்துவதற்கான முனைப்புகளில் இருந்தும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

தாம் வாழும் கனடாவில் தமிழ் மொழியில் தமது அமைப்பின் நிகழ்வுகளை நடத்த முடியாதவர்கள் ஹவார்ட் இருக்கைக்கு நிதி சேகரிப்பில் காட்டும் ஆர்வம் கண்டு புல்லரிப்பதை தவிர நாமென்ன செய்ய. இன்னும் வெளிவரக் காத்திருக்கும் "வேட்பாளர்களின்" முகப்புத்தக அறிவுப்புகளின் ஊடாக இந்த அரசியலையும் நாம் புரிந்து கொள்ளலாம் கடந்தும் செல்லலாம்.

மறுபுறம் புதிய ஜனநாயக் கட்சியின் "தேர்தல் நாயகனோடு " ஏனைய தொகுதிகளுக்கு யார் யார் தெரிவாகப் போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். துரதிஸ்ட வசமான தேர்தலில் போட்டியிட்டு பிரபல்யம் அடைய வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் அரவணைத்து அவர்களை தேர்தல் கால பிரபலங்களாக மாற்றும் நிலையினை புதிய ஜனநாயக் கட்சி மாற்றா விட்டால் "பிரபலம் தேடும்" பிரமுகர்கள் பலரை ஜனநாயக் கட்சியின் வேட்பாளர்கான நாம் தரிசிக்க முடியும்.

ஒன்ராறியயோ பாராளுமன்றத்திற்கு செல்லும் முதல் தமிழ் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் யார் என்பதை அறிவதில் தமிழ் மக்கள் ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

மக்கள் பிரதிநிதிகளாக விரும்புகின்றவர்களுக்கு சிலபல அடிப்படைத் தகுதிகளும் தகைமைகளும் இருக்க வேண்டும்.

மக்களின் பிரதிநிதியாக தெரிவு செய்வதற்கு முன்னர் அவர்கள் தாம் சார்ந்த சமூகத்திற்கு ஏதாவது நன்மைகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஸ்காபுரோ ரூட்ஜ் ரிவர் தொகுதியில் ரேமண்ட சோ அவர்கள் வெற்றி பெற்ற போது அவர் மண் வழங்கி மக்கள் மனங்களை வென்று விட்டார் என்று பலரும் பேசிக் கொண்டார்கள். ஒரு நகர சபை உறுப்பினராக தனக்கிருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தி அந்த மக்களுக்கு அவர் "மண்ணாவது" வழங்கினாரே என்று சிலர் ஆதங்கதப் பட்டதன் பின்னால் இருக்கும் உள்ளார்ந்த வலி என்ன என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகின்றேன்.

2009ம் ஆண்டு முள்ளிவாய்கால் நந்திக் கடலோரத்தில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மௌனித்த போது அதன் அடுத்த கட்டம் புலம்பெயர் தேசங்களில் தொடரும் என்று எல்லோரும் நம்பினோம்.

மக்கள் அவைகள் நாடு கடந்த தமிழீழ அரசு என தமிழ் மக்களின் போராட்ட வடிவம் புதிய பரிமாணத்தை எடுத்துள்ளது நடைபெற்று முடிந்த இன அழிப்பிற்கும் போர்க்குற்றங்களுக்கும் எதிரான நகர்வுகளின் ஊடாக தமிழினத்தின் அரசியல் எதிர்பார்ப்புகளை சர்வதே சமூகத்திற்கு தெளிவு படுத்தும் வேலைத் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் நாம் நம்பினோம்.

ஆனால் முள்ளிவாய்கால் முடிந்து இரண்டாவது ஆண்டே இன அழிப்பை கூட ஒன்று பட்டு நினைவு கூர முடியாமால் திசைக் கொன்றாய் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி நம்பிக்கைகளை கசக்கி எறிந்தோம்.

**தேசியத்தின் குரலாக ஓங்கி ஒலித்த குரல்கள் மெல்ல மெல்ல அடங்கி ஒடுங்கி [illegible] அரசியல் கட்டமைப்புகளுக்குள் தங்களை மெல்ல மெல்ல உட்புகுத்த தொடங்கிய போது இதற்குத் தானா ஆசைப்பட்டாய் ? என்று புலம் பெயர் தமிழனை பார்த்து தீயாகிப் போனவர்களின் ஆன்மா கேள்வி கேட்டது.**

காலம் உருண்டோடிக் கொண்டிருக்கின்றது மாற்றங்களை அவர்களும் விரும்பக் கூடும் அல்லது எப்போதும் ஒரே தரப்பினர் தான் தேசியம் விடுதலை என்று தமது நேரத்தையும் காலத்தையும் ஒதுக்கி உழைத்துக் கொள்ளவதாக ஏனையவர்களும் வரலாம் தானே நாம் அடுத்த கட்டம் நோக்கி நகர்வதில் தறென்ன என்ற கேள்விகளை சம்பந்தப்பட்டவர்கள் எழுப்பக் கூடும்.

இவை ஏற்றுக் கொள்ளக் கூடிய விளக்கங்களாகவும் நியாயப்படுத்தல்களாகவும் கூட சிலருக்கு இருக்கலாம்.

ஆனால் உங்கள் இந்த தீடிர் நிலை மாற்றம் குறித்து உங்களை நம்பி உங்கள் பின்னால் அணி திரண்ட அப்பாவி மக்களுக்கு ஒரு தெளிவு படுத்தலையாவது வழங்கியிருக்க வேண்டுமல்லவா ? அவர்கள் அழைத்த போதெல்லாம் ஓடிவந்தவர்களுக்கும் உங்கள் நிகழ்வுகள் சிறக்க அனுசரணை வழங்கியவர்களுக்கும் அவர்கள் நடத்திய நிகழ்வுகளை காவித் திரிந்த ஊடகங்களுக்கும் அவர்கள் தமது நிலைப்பாட்டு மாற்றத்தை தெளிவு படுத்தியிருக்க வேண்டும் அல்லவா ? இல்லாவிட்டால் அவர்கள் இதுவரை செய்தவை எல்லாம் இந்த "அறுவடைக்காகத்" தான் என்றாகிவிடும் என்பதை அவர்களால் ஏன் புரிந்து கொள்ளமுடியாமல் இருக்கின்றது.

**ஒரு காலத்தின் தமிழ் தேசியத்தை குத்தகைகு எடுத்தவர்கள் எல்லாம் இந்த நாட்டில் மீண்டும் அரசியல் கட்சிகளிடம் அரசியல் தஞ்சம் கோரியதன் விளைவையே இந்த தேர்தலில் தமிழ் சமூகம் அறுவடை செய்யப் போகின்றது என்பதே யதார்த்தம்.**

எப்போதும் தாம் வாழும் சமூகத்தை தமது ஆளுகைக்குள் வைத்திருக்க நினைக்கும் ஆதிக்க சக்திகளால் எந்த ஒரு நன்மையும் விளையாது என்பதை மீண்டும் நாம் உணர ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

**மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கும் சமூக செயற்பாட்டளார்கள் தேர்தல் களங்களில் இருந்து வெளியேற்றப்படும் நிலை அல்லது பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என அவர்களாகவே தம்மை விடுவித்துக் கொள்ளும் நிலையினை இது தோற்றுவித்துள்ளது.**

இதனை விடவும் கட்சியின் தலைமையோடு விசுவாசத்தையும் நெருக்கமான நட்பினனையும் ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலமாக கிடைக்கும் வரப்பிரசாதங்களை தமது சொந்தங்களுக்கும் நண்பர்களுக்கும் வேட்பாளர் நியமனங்களாக பெற்றுக் கொடுக்கும் நிலைமை மாறும் வரை நல்ல தமிழ் வேட்பாளர்களை பிரதான கட்சிகளில் நாம் காண்பதற்கு கன காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

மறுபுறம் சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் தேசியம்,இன விடுதலை, போரக்குற்றம், நா விசாரணை, சர்வ சன வாக்கெடுப்பு என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்த ஒருவர் தீடீரெ தன்னை ஒரு கனேடிய அரசியல் கட்சியின் வேட்பாளராகவும் அரசில்வாதியாகவும் காண்பிக்க முனைவதில் உள்ள ஆபத்துக்களும் அபத்தங்களும் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

**உண்மையில் இன உணர்வோடும் நியாயமான ஆர்வத்தோடும் இயங்கும் செயற்பாட்டாளர்களையும் அவர்கள் மூலமாக முன்னெடுக்கப்படும் முயற்சிகளையும் அவை தேர்தலுக்கான தாயரிப்புகள் தான் என தமிழ் மக்கள் கருதுவதற்கும் அதில் ஈடுபடாமல் அவற்றை புறக்கணிப்பதற்குமான ஏது நிலைகளை இந்த நகர்வுகள் ஏற்படுத்தி விடும்.**

ஏற்கனவே விடுதலைப் போராட்டத்திற்கு என்று சேர்த்த நிதியை மோசடி செய்த ஒரு சிலரின் செயல்பாடுகள் காரணமாக தாயகத்தில் வாழும் அப்பாவி மக்களுக்கும் முன்னளாள் போராளிகளுக்கும் வினைத்திறன் மிக்க செயல்பாடுகளை புலம்பெயர் தேசங்களில் இருந்து மேற்கொள்ளவதற்கான நிதிப் பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியாத அவலங்கள் தொடர்கின்ற நிலையில் அடுத்த கட்டமாக நிதி சாரா செயல்பாடுகள் மீதும் நம்பிக்கையீனங்கள் ஏற்பட இவர்கள் காரணமாகி விடுவார்களோ என்று அச்சம் படர்கின்றது.

மீண்டும் இந்த கட்டுரையின் முதல் பகுதிக்கே சென்று வர விரும்பிகின்றேன். இது ஒரு ஜனநாயக நாடு யாரும் தேர்தல்களில் போட்டியிடலாம் ஆனால் அது தான் உங்கள் இறுதி இலக்கு என்றால் அதனை நோக்கியே நீங்கள் பயணிக்கலாம் அதில் தவறொன்றுமில்லை. எதற்காக தமிழ, தேசியம். இன விடுதலை என்ற சாகசங்கள் ?

இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட கதையின் தொடர்ச்சியுடன் இந்த கட்டுரை முற்றுப் பெறுகின்றது

.........

ஆற்றின் நடுவே கம்பளி மூட்டை ஒன்று மிதந்து செல்கிறது. உள்ளே ஏதாவது பொருள் இருக்கும் என்கிற ஆசையில் ஒருத்தன் நீந்திச்சென்று அதைப் பற்றுகிறான்.

நீண்ட நேரம் ஆகியும் கரை திரும்பவில்லை. நடு ஆற்றில் போராடிக் கொண்டிருக்கிறான்.

கரையில் நின்று கொண்டிருக்கிற நண்பர்கள் கத்துகிறார்கள்... "நண்பா... கம்பளி மூட்டையை இழுத்துக் கொண்டு உன்னால் வர முடியவில்லை என்றால் பரவாயில்லை... அதை விட்டுவிடு!" ஆற்றின் நடுவே இருந்து அவன் அலறுகிறான்: "நான் இதை எப்பவோ விட்டுட்டேன்... இப்ப இதுதான் என்னை விடமாட்டேங்குது . ஏன்னா, இது கம்பளி மூட்டை இல்லே. கரடிக் குட்டி!" தவறாகப் பற்றுகிறவர்கள் தடுமாறிப் போகிறார்கள்.

சரியாகப் பற்றுகிறவர்கள் கரையேறி விடுகிறார்கள். ●

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கனடாவிற்கு வர விரும்புபவர்களுக்கு

# பத்து வழிகள்!



காலத்துக்கு காலம் கனடிய அரசுகள் இறுக்கங்கள், தளர்வுகள் என மாறுபட்ட சூழ்நிலைகளை, கனடாவிற்கு வரும் பாதைகளின் ஒவ்வொரு வழியிலும் சாதகமாகவும், பாதகமாகவும், சட்டங்களிலும் செயற்பாடுகளிலும் உருவாக்குகின்றன.

கனடிய அரச குடிவரவுத் துறையின் இணையத்தள தகவல்கள், குடிவரவு சட்டத்துறை நிபுணர்களின் ஆய்வு கட்டுரைகள், கருத்தரங்குகளில் அறிந்துகொண்ட விடயங்கள் ஆகியவற்றை, உசாத்துணையாக கொண்டு பின்வரும் பத்து விடயங்களை சுருக்கமாக குறிப்பிடுகின்றேன்.

காலத்துக்கு காலம் கனடிய அரசுகள் இறுக்கங்கள், தளர்வுகள் என மாறுபட்ட சூழ்நிலைகளை, கனடாவிற்கு வரும் பாதைகளின் ஒவ்வொரு வழியிலும் சாதகமாகவும், பாதகமாகவும், சட்டங்களிலும் செயற்பாடுகளிலும் உருவாக்குகின்றன.

தகவல்களையும் விண்ணப்பங்கள் போன்ற விடயங்களையும் இணையத்தளத்தினூடாகவும், மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கனடிய அரசின் பிரதிநிதித்துவ காரியாலயமாகவுள்ள கனடிய தூதரகங்கள் மூலமாகவும் விபரமாக பெற்றுக் கொள்ளலாம்.

### 1] தற்காலிக விசாப்பெற்று உல்லாசப் பிரயாணியாக பிரவேசித்தல்(Visiting by tourist Visa )

சில குறிப்பிட்ட, கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட நாட்டு மக்கள் தங்கள் நாட்டு கடவுச்சீட்டுடன் கனடாவிற்கு பிரயாணம் செய்வதற்கு எதுவிதமான விசாவும் முன்கூட்டியே பெறவேண்டிய அவசியம் இல்லை. கனடாவிற்கு வந்திறங்கிய இடத்தில் வைத்து ஆறு மாதத்திற்கு தற்காலிகமான விசா வழங்குவார்கள்.

உதாரணமாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள், அவுஸ்திரேலியா, கொங்கொங், ஜப்பான், நியூசிலாந்து, சிங்கப்பூர், தாய்வான், என 51 நாடுகளை குறிப்பிடலாம்.

இலங்கை இந்தியா உட்பட ஏனைய நாட்டு மக்கள் இந்த வழியில் கனடாவிற்கு வர வேண்டுமானால், முற்கூட்டியே தமது நாட்டில் உள்ள கனேடிய தூதராலயத்திற்கு விண்ணப்பித்து தற்காலிக விசா பெற்றுக் கொள்ளவேண்டும்.

விசா வழங்க முன்பு கனேடிய தூதராலயம் பின்வரும் விடயங்களை கூர்ந்து பரிசீலனை செய்து கொள்ளும்

தற்போது மின்னஞ்சல் மூலமாகவும் விசாவிற்கு விண்ணப்பிக்கலாம். (ETA – Electronic Travel Authorization )

* தமது சொந்த நாட்டில் தொழில், வீடு, நிதியியல் ரீதியான சொத்துக்கள் குடும்ப உறவுகள் யாவற்றினையும் வைத்திருக்கும் ஒருவர் தற்காலிகமாக கனடாவிற்கு போய் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பி வருவதே நோக்கம் என்பது நம்பக்கூடிய அளவிற்கு தூதராலய விசா அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
* ஆரோக்கியமான உடல் நிலை, குற்றவியல் பதிவு எவையும் இல்லாதிருத்தல் நிரூபிக்கப்படல் வேண்டும்.
* கனடாவில் தங்கப் போகும் இடம் அதற்குரிய நிதி நிலைமைகள் காட்டப்பட வேண்டும்.

உறவினர்கள், நண்பர்களுடன் தங்குவதாக இருந்தால் அவர்களின் விபரங்கள், நிதி நிலைமைகள், அவர்களின் ஆதரவுப் பத்திரம், மற்றும் அழைப்புக்கு கடிதம் (Letter of Invitation ) என்பன தேவை.

இங்கு இருவகையான விசாக்கள் வழங்கப்படும்.

1) ஒருமுறை மட்டும் பிரவேசிக்கும் விசா (Single Entry Visa) இது குறிப்பிட்ட ஆறு மாதங்களுடன் நிறைவடைந்து விடும்.

2) பலமுறை பிரவேசிக்கும் விசா (Multiple entry visa ) சுமார் பத்து வருடங்களுு பலமுறை போய் வரலாம்.

ஒருமுறை சென்றால் ஆறு மாதங்களுக்கு மட்டுமே கனடாவில் தங்கி நிற்கலாம்.

### 2)கல்வி, தொழில் துறைகளின் திறமைசாலிகளுக்கு வழங்கும் விசா (Federal Skill worker visa )

பல்கலைப்பட்டப்படிப்புகளுடன் சேர்ந்த தொழித்துறை சார்ந்த புலமையாளர்களை ஏனைய உலக நாடுகளில் இருந்து கனடாவிற்கு குடிவருவதற்கான வழங்கப்படும் நிரந்தர குடியுரிமை விசாவே இதுவாகும்.

இங்கு கனேடிய குடிவரவு அமைச்சு பின்வரும் ஆறு விடயங்களை கருத்தில் கொண்டு, ஒரு புள்ளி விபர மதிப்பீட்டின் அடிப்படையில் நிரந்தர குடியுரிமை விசா வழங்குவது பற்றி முடிவு செய்கின்றது.

* கல்வி Maximum 25%

* கனேடிய மொழிகளில் ஒன்றில் திறமை (Skill in English or french )16-18%

* தொழில் அனுபவம் 9-15%

* வயது (Age) Maximum 12% 18-35 வயதிற்கு இடைப்பட்டோர். மேலதிக ஒவ்வொரு வயதிற்கு ஒவ்வொரு புள்ளி 47 வயது வரை குறைக்கப்படும்.

* கனடாவில் உடனடியாக உகந்த தொழில்வாய்ப்பு 0-10%

* கிடைக்கும் ஆதரவுகள் & வாய்ப்புக்கள் மற்றும் ஆரம்ப நிலையில் பண வசதி

தற்போது உள்ள குடிவரவு ஒழுங்கு விதிகளின் படி 67% புள்ளிகள் கிடைத்தால் சாதகமான முடிவு கிடைக்கும்.

இவற்றில் இறுக்கங்கள் பல்வேறு காலங்களிலும் ஏற்படுவது வழமையாகும்.

### 3] துறை சார்ந்த சிறப்பு தொழில் திறமையுள்ளவர்களுக்கு வழங்கும் நிரந்தர குடியுரிமை விசா

கல்வி தொழில் துறைகளில் திறமைசாலிகளுக்கு வழங்கும் நிரந்தர குடியுரிமை விசாவில் இருந்து இக் குடியுரிமை விசா சற்று வேறுபட்டது. அதாவது கல்வித் தகமை என்பது இங்கு பெரிதாக கருத்தில் கொள்வது இல்லை.

இங்கு குடியுரிமை விசாவினைப் பெறுவதற்கு பின்வரும் தகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

* கைத்தொழில், மின்னியல், இயந்திரவியல், கட்டிட துறைகள், சமையல்துறை, வேளாண்மைத்துறை, போன்ற துறைகளில் இரு வருடங்களிற்கு மேலாக முழுநேரமாக தொழில் செய்த அனுபவம் இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தொழில் துறை என்பது அரச துறை சார்ந்த நிறுவனங்களின் சான்றிதழ் பெற்ற தொழில் சார்ந்த நிபுணராக இருத்தல் வேண்டும்.

கனேடிய மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிகளில் ஓரளவேனும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

* கனடாவில் வந்து சேர்வதற்கும் கால்ஊன்றுவதற்கும் ஓரளவிற்கேனும் ஆரம்பகட்ட நிதி வசதி இருக்க வேண்டும்.

### 4]கனடாவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விசா

ஒவ்வொரு வருடமும் சுமார் 200,000 மாணவர்கள் உலகின் பல பாகங்களிலும் இருந்தும் கனடாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்காக வருகின்றனர் என்பது புள்ளிவிபர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவின் பல பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் உட்பட பல்வேறு வகையான கல்வி நிறுவனங்கள் சர்வதேச மாணவர்களை அனுமதிக்கின்றன.

முதலில் இந்தக் கல்வி நிறுவனத்தில்? எந்த துறையில்? கல்வி பயில விரும்புகின்றீகளோ அந்த நிறுவனத்தில் அதற்குரிய கட்டணங்களை செலுத்தி அனுமதி பெறுதல் வேண்டும். அனுமதி அவரவர் நாடுகளின் கனேடிய தூதராலயங்களினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கனடாவில் வாழ்பவரின் உதவி மூலமும் பெற்றுக்கொள்ளலாம். அனுமதியின் பின் அவர்களின் நாடுகளில் உள்ள கனேடிய தூதராலயத்தில் விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கனேடிய தூதராலயம், விசாவுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் குறிப்பிட்ட துறையில் கல்வி பயில தகுதி, ஆர்வம் உட்பட, கல்வி கற்பதற்கு தான் செல்கின்றாரா? அவருக்குள்ள நிதி வசதிகள் என்பவற்றினை பரிசீலனை செய்து அவர்களின் நேர்முகப் பரீட்சையில் கனடா பாதுகாப்புக்கு ஆபத்து இல்லாதவர் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் விசா வழங்குவார்கள். கற்கை நெறியினை கனடாவில் முடித்தவர் அதே துறையில் தொழில் செய்யும் அனுமதி பத்திரம் பெற்று தாற்காலிகமாக தொழில் கிடைத்தால் தொழிலும் செய்யலாம்.

இரு வருடங்கள் கனடாவில் தொழில் செய்த பின்னர் நிரந்தர பதிவுரிமைக்கும் விண்ணப்பிக்கலாம். மூன்று வருட நிரந்தர வதியுரிமைக்கு பின்பு கனேடிய குடியுரிமைக்கும் விண்ணப்பிக்கலாம்.

### 5] கனடாவின் மாகாண அரச வதிவிட நியமனங்களினூடாக பெரும் நிரந்தர வதியுரிமை

கனடாவுக்கு நிரந்தர வதியுரிமை பெற்று குடியேறும் வெளிநாட்டவர் எவரும் பொதுவாக தத்தமது வசதிகள் வாய்ப்புக்களுக்கு ஏற்றமாதிரி கனடாவின் எந்தவொரு மாகாணத்திலும் குடியேறலாம். மத்திய அரசு என்ற பேரரசின் கீழ் உள்ள சிற்றரசுகள் போல் பத்து மாகாணங்களும் மூன்று பிரதேசங்களும் தங்களுக்குரிய இறைமைகளுடன் ஆட்சி செய்கின்றன. இங்கு ஏனைய நாடு ஒன்றிலிருந்து குறிப்பிட்ட ஒரு மாகாணத்தில் தொழில் செய்து அந்த மாகாணத்திலேயே நிரந்தரமாக குடியேறுவேன் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கும் நிரந்தர வதியுரிமை விசாவே இதுவாகும்.

ஒவ்வொரு மாகாண அரசும் இந்தப் பிற நாட்டவர்கள் குடியுரிமை விடயங்களில் தங்களுக்குரிய கொள்கை, திட்டங்களை தங்களின் தேவைகளுக்கு ஏற்றமாதிரி தாங்களே வகுக்கின்றன.

மாகாணங்களின் பொருளாதார வளர்சிக்காக வெளிநாட்டிலிருந்து குடியேறுபவர்களை பரவலாக்கம் செய்வதற்காக இத்தகைய வதிவுரிமை விசாக்களை கனேடிய அரசு வழங்குகின்றது. இங்கு முதலில் குறிப்பிட்ட மாகாண அரசிற்கு நேரடியாக விண்ணப்பித்து தங்களின் கல்வித் தராதரம், தொழித் திறமைகள் அனுபவங்களிற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். குடியேறப் போகும் மாகாணத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்பு பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பபங்களை அனுப்புதல் வேண்டும்.

citizenship &immigration Canada
provincial Nominee Program
Centralized Intake Office

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P.O .Box. 1450
Sydney, NS, B1P 6k5
Canada

அவருடைய நாட்டில் உள்ள கனேடிய தூதராலயத்தின் இறுதி பரிசீலனையில் பின்பு குடியுரிமை விசா வழங்கப்படும்.

கனடாவில் எந்த மாநிலத்தில் குடியேறலாம் என அங்கீகாரம் கிடைத்ததோ அந்த மாகாணத்தில் குடியேறி அவரின் வாழ்வினை ஆரம்பிக்கலாம்.

### 6) தனியார் வீடுகளில் தங்கி இருந்து தொழில் செய்யும் பணியாளர்களுக்குரிய விசா

கனடாவில் பல்வேறு வகையான வசதிகளோடு வாழ்பவர்கள் தங்கள் வீடுகளில் தங்கியிருந்து, விட்டு வேலைகளுடன், குழந்தைகளை பராமரிப்பது, முதியோரை பராமரிப்பது, உடல் இயங்க முடியாதவர்களுக்கு உதவுவது போன்ற தொழில்களுக்கு எவராவது தேவைப்பட்டால் வழங்கப் போகும் சம்பளங்கள், சலுகைகள் எவ்வளவு என்ற சட்டரீதியான ஒப்பந்தங்களுடன் ஏனைய நாடு ஒன்றிலிருந்து வருவித்து இரு வருடங்களிற்கு கனடாவில் நியமனம் வழங்கிக் கொள்ளலாம்.

இரு வருடங்கள் தொடர்ந்து ஒரு வீட்டில் பணிபுரிந்தவர் இரு வருடங்களின் பின்பு நிரந்தர வதிவுரிமைக்கு விண்ணப்பிக்கலாம். தொடர்ந்து சில வருடங்களின் பின்பு நிரந்தர குடியுரிமையும் பெறலாம்.

குறிப்பிட்ட வேலைக்குகனடாவில் இருந்து எவரையும் நியமனம் செய்ய முடியாதுள்ளது என்பதை மத்திய அரசிற்கு விண்ணப்பித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதற்குரிய உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டே ஏனைய நாட்டில் இருந்து பணியாளரை வருவிக்க முயற்சிக்கலாம்.

தொடர்ந்து ஏனைய நாடு ஒன்றிலிருந்து ஊதியம் வழங்கிப் பணியாளரை நியமனம் செய்யும் அளவிற்கு வலிமை உடையவர் என்பதும் அவருக்கு பணியாளர் ஒருவர் தேவை என்பதும் கனேடிய குடிவரவுத்துறை அமைச்சுக்கு விண்ணப்பித்து நிரூபிக்கும் போது தொழில் அனுமதி வழங்குவார்கள்.

தொடர்ந்து விண்ணப்பங்களை முன்னெடுக்கும் போது குறிப்பிட்ட தொழிலை கனடாவிற்கு சென்று பணியாற்றுவதற்கு பணியாளராக செல்பவர் தகுதியானவரா என்பதனை நேர்முகப் பரீட்சையின் போது அந்தந்த நாடுகளில் கனேடிய அரசின் பிரதிநிதியாக உள்ள தூதராலயங்கள் முடிவுபண்ணி விசாவினை வழங்கும்.

### 7) இன்னொரு நாட்டில் இருந்து பிள்ளைகளை சட்டரீதியாக தத்தெடுத்தல் .

சர்வதேச ரீதியாக தங்களின் பிள்ளைகளை போன்று இன்னொரு பிள்ளையை தத்தெடுத்து, அந்தப் பிள்ளையை கனடாவுக்கு எடுப்பது இன்னொரு வழியாகும். கனடாவில் வாழும் ஒருவர் இன்னொரு நாட்டில் இருந்து பிள்ளை ஒன்றினை சட்டரீதியாக தத்து எடுப்பது என்பது இன்னொரு கட்டம்.

கனேடிய மத்திய அரசு தத்து எடுப்பவர் குடியிருக்கும் மாகாண அரசு தத்து எடுக்கப் போகும் பிள்ளை பிறந்த நாட்டின் சட்ட திட்டங்கள், அவர்களின் நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள் எனப் பல படிமுறைகளில் அங்கீகாரங்களை பல்வேறு வகையான நிலைப்பாடுகளில் இருந்து இவ் விடயத்தில் பூரணமான வெற்றியினை அடையலாம்.

### 8) கனடாவில் அகதி அந்தஸ்து கோரல்

தமது சொந்த நாட்டில் போர் கால சூழல்களால் கொடுமைகள், துன்பங்கள், துயரங்களை எதிர்கொண்டு உயிர் வாழ அச்சமாக உள்ளவர் என்பது நிரூபிக்கப்பட்டு கனடாவில் அகதி நிலை கோரலாம்.

இவ்வாறு அகதி நிலை கூறுபவர்களை இரு வகையாக பிரிக்கலாம்.

1. கனடாவுக்கு வெளியே இன்னொரு நாட்டில் இருந்து கொண்டு கனடாவில் புகலிடம் கோருவது.

உதாரணமாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்

1. சிரியா போன்ற நாட்டில் உள்ள அகதிகளை கனேடிய அரசே பொறுப்பேற்று புகலிடம் வழங்கியது.

2. ஐந்துபேர் இணைந்து குழுவாக ஒரு அகதியின் புகலிடத்திற்கு ஸ்பொன்சர் செய்வது.

3. ஒரு நிறுவனம் அல்லது சமூகம் ஒரு அகதியின் புகலிடத்திற்காக ஸ்பொன்சர் செய்வது

2) கனடாவில் இருந்துகொண்டு அகதி நிலை கோருவது.

எதோஒரு வழியில் கனடாவிற்குள் வந்து சேர்ந்த தமிழர் பலர் கனடாவில் நிரந்தர வாழ்வினை அமைத்துக் கொண்டதனை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

### 9) குடும்ப ஸ்பான்சர்

கனடாவில் நிரந்தரமாக குடியேறி தமக்கென ஒரு வாழ்வினை உருவாக்கிக் கொண்ட ஒருவர், ஏனைய நாடுகளில் இருக்கும் தங்கள் குடும்ப உறவுகளுக்கு பொன்சர் பண்ணி கனடாவிற்குள் அழைக்கும் முறையே இதுவாகும்.

குடும்ப உறவுகளுக்கு பின்வருவோருக்கு ஸ்பொன்சர் செய்யலாம்

1. மனைவி அல்லது கணவன், பிள்ளைகளுக்கு செய்யும் ஸ்பொன்சர்

2.பெற்றோர் பேரன்மார்க்கு ஸ்பொன்சர் செய்தல்

3.தற்காலிகமாக பெற்றோர், பேரன்மார் சேர்ந்து வாழ வழங்கும் விரைவான சுப்பர் விசா

4. தகுதியான உறவினர்களுக்கு ஸ்பொன்சர். உதாரணமாக 1983 ஆம் ஆண்டு இலங்கையில் உருவான பாரிய இனக்கலவரம் உட்பட பல உள்நாட்டு கலவரங்கள், பாதிப்புக்குட்பட்டவர்களுக்கு இந்த வலியின் மூலம் மேற்கொண்ட ஸ்பொன்சர் பலருக்கு வெற்றியினை தந்தது.

### 10) வர்த்தகர்கள் முதலீட்டாளர்களுக்கு வழங்கும் விசா

கனடாவில் குடியேறும் உலகம் எங்கும் வாழும் மிகப் பெரும் செல்வந்தர்களுக்கே இம்முறை சாதகமாக அமையலாம்.

வர்த்தக முதலீடு செய்பவர் குறைந்தது இரண்டு கனேடிய மில்லியன் டொலர் பணத்தினை கனடாவிற்குள் கொண்டுவர வேண்டும்.

குடியேற விரும்புபவரின் தெரிய வருமானம் பத்து மில்லியனாக இருக்க வேண்டும் என்பது இவை தொடர்பான சட்டப்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அண்மையில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற சட்டமூலம் (Bill C -31) இந்த விசாவுக்கு தடை விதித்துள்ளது. ●

சிவ பஞ்சலிங்கம்



"When it comes to lending, we make it happen"
• 2nd Mortgages
• Bad Credit, No Problem
• No Income, No Problem
• Consolidate Debts
• Tax & Mortgage Arrears
• Pay Off High Interest Credit Cards
• Renovations
• Private Mortgages
We specializes in private mortgage lending with unlimited funds. Satisfaction is guaranteed and we will get you on the road of financial freedom and peace of mind.
GGC Good Grade Capital Incorporated
FSCO Admin. Lic. #:12577
www.ggcapitalinc.com
akila@ggcapitalinc.com

• New Immigrants Welcome
• Bad Credit
• Self Employed
• Open Mortgage
• Pre Approval
• Non-residents

MORTGAGE APPROVED... I AM HERE TO FIND THE RIGHT PRODUCT FOR YOU....
• 1ST AND 2ND MORTGAGES
• PURCHASES, REFINANCES AND RENEWALS
• COMMERCIAL LOAN
• BUSINESS OPERATING LINE
• CONSTRUCTION LOAN
• OWN PRIVATE FUNDING
• EQUIPMENT LEASING & FINANCING
• WE OFFER CONSTRUCTION DRAW MORTGAGES...
• CONSUMER PROPOSALS AND BANKRUPTCIES
• HOME EQUITY TAKE OUT
• CREDIT SETTLEMENTS

GOOD GRADE MORTGAGES
Your Mortgage Architects
www.goodgrademortgages.ca
Akila@goodgrademortgages.com

Akila Senthil, AMP
CEO, Principal Broker
Broker Licence #: M08002166
C: 416-895-4321
T: 905-366-4322, F: 905-366-4326
2600 Skymark Ave, Building 10, Unit 104A, Mississauga ON L4W 5B2
2761 Markham Road, Unit A3, Toronto ON M1X 0A4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE

**Residential / Commercial / Industrial / Investment Properties**

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment
- Home Equity Loan



**Mortgage In Any Situations**

We Deal with all banks

MORTGAGE ALLIANCE

Thavanesan Subra

Independently Owned and Operated

| Category | Starting Rate |
|---|---|
| 5 Years Variable | 2.2% |
| 3 Years Variable | 2.25% |
| 5 Years Fixed Rate | 2.69% |
| 3 Years Fixed Rate | 2.25% |
| 2nd Mortgage | 6.99% |

**416-908-5656**

Lic# M15001465, Brokerage # 10530

mortgage@nesan.ca www.nesan.ca

**NESAN**

SUBRA MORTGAGE SOLUTIONS INC.

Office: 647-351-0399

Toll: 1-844-878-2721 Fax: 647-351-3099

---

SUBRA ACCOUNTING & TAX SOLUTIONS INC.

Bus: 416-660-5656

Our Off: 1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1

**INCOME TAX SERVICES:**

Personal Tax Returns (T1)

Corporate Tax Return (T2)

**ACCOUNTING SERVICES:**

Bookkeeping, Business Registration

Payroll & Many More...

www.subra.com solutions@subra.com

# வீடு வாங்க, விற்க அழையுங்கள்!









**Mohan PANCHALINGAM**

Sales Representative

RE/MAX COMMUNITY Realty Inc, Brokerage

1265 Morningside Ave., # 203

Toronto ON M1B 3V9

Dir: 647.321.7575

Bus: 416.287.2222

Fax: 416.282.4488

E: mohan_panch@hotmail.com

Each Office Independently Owned and Operated

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shan Thayaparan




RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

www.shan123.com
1265 Morningside Ave, Suite 203
Toronto , ON M1B 3V9

Dir : 416 567 7675
Office : 416 287 2222
Fax : 416 282 4488


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி இப்படித்தான் யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணத்துக்குள் பீஜிங் (Beijing) நுழைகிறதா?

உலகில் மாற்றங்கள் என்பது இயல்பானதும் எதிர்பார்க்கப்படவும் வேண்டியதுதான். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அது ஓர் இரவில் எல்லாம் மாறிப்போகும் என்கிற நிலையில் இருப்பதுதான் கவனிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

நாங்கள் நேற்றுப் பார்த்த யாழ்ப்பாணம் இன்று இல்லை என்றும் இன்று பார்க்கும் யாழ்ப்பாணம் நாளை இருக்கப்போவதில்லை என்றும் எதிர்பாராத மிகப்பெரும் மாற்றங்களிற்கு உட்படக்கூடிய ஆபத்தான நிலையில் அது எப்போதும் இருக்கின்றமை பற்றி மக்கள் எந்த




அளவிற்கு விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள் என்று சரிபார்த்துக்கொள்வது அவசியம்.

இவ்வாறான விரைவு மாற்றமும் உறுதியற்றதுமான நிலைக்குரிய காரணங்கள் பற்றிய தெளிந்த பார்வை மிகவும் முக்கியமானது குறிப்பாக இன்றைய காலத்தில் மிகவும் அவசியமானது என்பதைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

*2009* மே மாதத்தின் பின்னர் ஈழத்தீவு தொடர்பான தங்களது மூலோபாய மற்றும் தந்திரோபாய நடவடிக்கைகளை மாற்றி அமைக்கவேண்டிய அவசியம் மேற்குலகிற்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்டிருந்தது. அத்துடன் தமிழ் மக்கள் தொடர்பான தங்களது மூலோபாய மற்றும் தந்திரோபாய திட்டங்களின் புது நடவடிக்கைகளை சிங்கள தேசமும் நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருந்தது. இவர்கள் எல்லோருடைய பலப்பரீட்சைக்கும் பிரதான களமாக யாழ்ப்பாணம்தான் தெரிந்தெடுக்கப்பட்டது.

இதற்கு அதன் புவியியல் அமைவிடம், இலகுவில் முனைவாக்கம் அடையக்கூடிய அம் மக்கள், இதை மாற்றினால் ஏனையவை தானாக மாறும் என்ற யதார்த்தம் ஆகிய மூன்று காரணங்கள் முக்கியமானவை. அதன்படி யாழ்ப்பாணக் களத்தில் நேரடியாக மேற்குலகம், இந்தியா, சிங்களதேசம் ஆகிய மூன்று தரப்புக்களும் தங்களது மூலோபாய நலனை முன்னிறுத்தி களப்பணியாற்ற ஆரம்பித்தன.

தங்களது மூலோபாய தேவைகளுக்காக தமிழ் மக்களின் இருப்பு அங்கு உறுதிப்படுத்தப் படவேண்டும் என்பது மேற்குலக நடிவடிக்கைகளின் முக்கிய களப்பணி..

தமிழ் மக்கள் இருப்பு உறுதிப்படுத்தப் படவேண்டும் ஆனால் அவர்கள் இதுவரை இருந்த ஈழத்தமிழ் மக்களாக இல்லாமல் இலகுவில் கையாளக் கூடியவர்களாக பிரித்தாளக் கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பது இந்திய நடவடிக்கைகளின் முக்கிய களப்பணி. தமிழ்மக்களை எப்படியோ ஈழத் தீவில் இருந்து துடைத்து அகற்றிவிடவேண்டும் என்பது மகாவம்ச மனநிலையில் இருக்கும் சிங்களதேசத்தின் முக்கிய களப்பணி அவரவர் தங்களது திட்டங்களின்படி களத்தில் குதித்து செயல்லாற்ற ஆரம்பித்தனர்.

அதன்படி தீவிர கிறிஸ்தவ மதமாற்றம் மற்றும் கரையோரப் பகுதியில் இருக்கும் நிலங்களில் இருந்து படையினரை வெளியேற்றல் மற்றும் அங்கு தமிழ்மக்களின் இருப்பினை உறுதிப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளால் மேற்குலகம் தான் விரும்பியதைச் செய்ய ஆரம்பித்தது.

அதிகரித்த சாதியப் பிரச்சனை, நுட்பமான புலியெதிர்ப்புக் கருத்துருவாக்கம், இந்துத்துவத் தோற்றம்போன்றசெயல்ப்பாடுகளால் இந்தியா தான் விரும்பியதைச் செய்துகொண்டிருக்கிறது. வழக்கம் போல பௌத்த சிங்களமயமாக்கல் ஏமாற்றும் தந்திரோபாயம் போதைப்பாவனை சமூகச்சீர்கேடுகள் என அத்தனை நவதந்திரங்களையும் பாவித்து ஒரு நுட்பமான இனச்சுத்திகரிப்பை சிங்களதேசம் செய்துகொண்டிருக்கிறது.

இந்த எதிரும் புதிருமான தங்கள் தங்கள் மூலோபாய நலனுக்கான போட்டியில் சிக்கிச் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணச் சமூகத்தையும் செய்திகளையும் தான் நாம் தினசரி பார்த்துக் கொண்டிருக் கிறோம்.

அண்மைய நாட்களில் நடைபெறும் சம்பவங் களினதும் செய்திகளினதும் மூலத்தை நம்மால் உடனடியாக கண்டடைய முடியவில்லை அல்லது அவ்வளவு மேலெழுந்தவாரியாக கறுப்பு வெள்ளையாக சொல்லிவிடக்கூடாது.

அதேசமயம் சில சந்தேகங்களை முன்வைக்கலாம் அதாவது இம்மூன்று சக்திகளும் தாங்கள் கடந்த ஏழுவருடங்களிற்கு மேலாக நடாத்திக்கொண்டிருந்த மும்முனை மூலோபாய தந்திரோபாய போரை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச்செல்கிறார்களா? அல்லது காட்சிக்குள் நேரடியாக இல்லாமல் இருந்த பீஜிங் இப்போது காட்சிக்குள் நுளைய ஆரம்பித்திருக்கிறதா? என யோசிக்க வேண்டும்.

உதாரணமாக முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவடைந்தபின்னர் அந்தக்கடற்கரைகளில் புதைத்துவைக்கப்பட்டிருந்த புலிகளின் ஆட்லறி பீரங்கிகள் தோண்டியெடுக்கப்பட்டிருந்தன. அவை சீனத்தயாரிப்பாய் இருந்தது கண்டு சிறீலங்காப்படைகள் அதிர்ச்சியடைந்ததோடு விசாரணை மேற்கொள்ளப்போவதாகவும் தெரிவித்திருந்தனர்.

ஆனால் உண்மையில் நடந்த தென்னவென்றால் போர்நிறுத்த காலத்தில் நிலவிய மேற்குலக கையாளுகையில் இருந்து ஈழத்தீவை தன்பக்கம் எடுக்க இருபக்கமும் போரை ஊக்குவித்து புலிகளை அழிக்கவேண்டும் என சீன மூலோபாயம் வகுத்தது.

அதேசமயம் போரைத் தொடர்வதற்கு புலிகளுக்கு இருக்கவேண்டிய ஆயுதபலத்தை மேற்குலகமும் இந்தியாவும் வேறு மூலோபாய அடிப்படையில் தடுத்துவைத்திருந்தது. இந்நிலையை அறிந்த சீனா தன்னுடைய கறுப்புச்சந்தையை புலிகளுக்காகத் திறந்து போரைத் தூண்ட உதவியது. அது நினைத்ததன்படியே சீனா முள்ளிவாய்க்காலுக்குக் கொண்டுவந்திருந்தது. (சீனாவின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக தகவல்களை Peter Popham எழுதிய How Beijing won the Srilanka's Civil War என்ற நூலில் காணலாம்.

அந்தச் சீனத்தயாரிப்பு ஆட்லறிகள்தான் முள்ளிவாய்க் கால் கடல்கரைகளில் தோண்டி யெடுக்கப் பட்டிருந்தன.

இவ்வாறு நடக்கும் சம்பவங்கள் எல்லாம் வெறும் தற்செயலானவை அல்ல. அவை மிக நன்கு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுபவை. வெளிவரும் செய்திகள் அல்லது கசியவிடப்படும் செய்திகளும் அப்படித்தான் அவை எந்த வடிவத்தில் எப்படி நம்மை வந்து சேரவேண்டு மென்று எதிர்பார்க் கிறார்களோ அப்படி உருவாக்கப்பட்டு நம்மிடம் கொண்டுவந்து சேர்க்கப்படு பவைதான். அதன் உண்மைத் தன்மையை நாம் வெறும் கண்களால் பார்க்கமுடியாத அளவுக்கு கலங்கடிக்கப்பட்டிருக்கும்.

நம் ஆறாம் அறிவால் இலகுவில் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு குழப்பப்பட்டிருக்கும். ஆகையால் ஒரு எதிர்பாராத அல்லது அவ்வாறு தோற்றம் அளிக்கும் சம்பவத்தில் இருந்து சமூகம் தூண்டப்படுவது என்பது யதார்த்தமாக இருந்தாலும் நிச்சயமாக அது நம்முடைய நிகழ்ச்சிநிரலாகஇருக்கவாய்ப்பில்லை. அதே சமயம் அவ்வாறான சம்பவங்களை நம்முடைய நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டுவந்து சாதகமாக கையாளும் அனுபவமும் பக்குவமும் தலமைத்துவமும் தமிழ்தரப்பிடம் தற்போது இருக்கிறதா என்பது சந்தேகமே.

ஆகையால் யாழ்ப்பாணம் எந்தெந்தச் சக்திகளின் களமாக இருக்கின்றது அல்லது இருக்க வாய்ப்பிருக்கின்றது என்ற புரிதல் நம் ஒவ்வொருவருக்கும் வேண்டும். அத்துடன் வரலாற்றில் எப்போதும் நாம் முன்னோக்கிச் செல்லவேண்டுமே தவிர எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வரலாற்றை நாம் மீண்டும் பின்னிருந்து ஆரம்பிக்கும் படியாய் இருந்துவிடக்கூடாது.

இக்கட்டுரையில் முன் சொன்னதன்படி யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைவிடம், இலகுவில் முனைவாக்கம் அடையக்கூடிய அம் மக்கள்,இதை மாற்றினால் ஏனையவை தானாக மாறும் என்ற யதார்த்தம் ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் ஊடாக நமக்கிருக்கும் வாய்ப்பையும் பொறுப்பையும் பலவீனத்தையும் சரியாக மதிப்பீடும் மீள் மதிப்பீடும் செய்தபடியே ஒவ்வொரு பேச்சும் செயலும் இருக்கவேண்டும்.

இனி இப்படித்தான் இருக்கவேண்டும் யாழ்ப்பாணம் என ஒவ்வொரு சக்தியும் திட்டமிட்டு செயலாற்றுவதுபோல நாமும் செயலாற்றவேண்டியதன் அவசியத்தை கவனத்தில் எடுக்கவேண்டும்.

இல்லையெனில் யாழ்ப்பாணம் வெகு விரைவாக ஒரு சிரியாவாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. ●

**இந்திரன் ரவீந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் - இஸிஸ் முறுகல்
# எழுச்சி பெறும் போராட்டம்

க.பிரசன்னா

இஸிஸ் தீவிரவாதிகளினுடைய இஸ்லாமிய அரசுக்கெதிரான போராட்டங்களில் கடந்த 5 வருட காலமாக சர்வதேச நாடுகளின் பங்குபற்றலும் இருந்து வருகின்ற நிலையிலும தீவிரவாதிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதிலும் அவர்களுடைய கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை கையப்படுத்துவதிலும் பெருமளவான முன்னேற்றங்கள் இன்னும் ஏற்படவில்லை. ஈராக் மற்றும் சிரியாவின் நிலப்பகுதிகளை கைப்பற்றி இஸ்லாமிய அரசாக மாற்றிக் கொண்டுள்ள இஸிஸ் தீவிரவாதிகளிடமிருந்து மீண்டும் அப்பகுதிகளை கைப்பற்றும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக எழுச்சிபெற தொடங்கியுள்ளன. இதனொரு பகுதியாக ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மொசூலை கைப்பற்றுவதற்கு கடந்த வாரம் முதல் கடுமையான படை நடவடிக்கைகளை ஈராக் அரசு முன்னெடுத்துள்ளது.

ஆனால் மொசூல் நகரில் 100,000 பொது மக்கள் நிலை கொண்டிருப்பதால் அவர்களை இஸ்லாமிய அரசின் தீவிரவாதிகள் மனித கேடயமாக பயன்படுத்தி விடலாமென்ற அச்சநிலையும் தோன்றியிருக்கிறது. பெண்டகனின் பேச்சாளர் கடற்படை தளபதி ஜெப்டே விஸ், பொதுமக்களை இஸிஸ் தீவிரவாதிகள் மனித கேடயங்களாக பயன்படுத்துவார்களெனவும் அவர்களுடைய வாழ்க்கையையும் எதிர்பார்ப்பையும் அவர்கள் கருத்தில் கொள்வதில்லையெனவும் தெரிவித்துள்ளார். மொசூல் நகரிலிருந்து 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஈராக்கின் மிகப்பெரிய கிறிஸ்துவ நகரான குவாரகொஸில் யுத்தம் தொடங்கியுள்ளது. இப்பகுதிகளிலேயே இரவில் தீவிரவாதிகளின் முகாம்கள் அமைந்திருப்பதுடன் இராணுவ வாகனங்களிலிருந்து அவர்கள் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த புதன்கிழமை முதல் மோதலானது புதிய எதிர்பார்ப்பை தோற்றுவித்திருக்கிறது. ஈராக் இராணுவம், குர்திஷ் பெஷ்மர்கா போராளிகள் மற்றும் சுன்னி பழங்குடி போராளிகள் என்று இப்படை நடவடிக்கையில் 34,000 துருப்புகள் பங்கேற்றுள்ளன.

மிக நீண்ட காலமாக திட்டமிடப்பட்டு வந்த இந்த தாக்குதல் நடவடிக்கையினை கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதாக ஈராக் பிரதமர் ஹைதர் அல்அபதி அறிவித்திருந்தார். இஸிஸ் தீவிரவாதிகளின் இறுதிக் கோட்டையாக கருதப்படும் மொசூல் நகரைக் கைப்பற்றவே இப்படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஈராக்கின் வடக்கு நகரான மொசூல் தாக்குதல் 2003ஆம் ஆண்டு ஈராக்கில் அமெரிக்க படையெடுப்புக்குப் பின்னர் பிராந்தியத்தில் இடம்பெறும் மிகப்பெரும் படை நடவடிக்கையான கருதப்படுகிறது. இத்தாக்குதல் இஸிஸ் தீவிரவாதிகளின் தோல்விக்கான தருணமென அமெரிக்கா சுட்டிக்காட்டியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இந்நகரில் 3000—5000 வரையான இஸிஸ் தீவிரவாதிகள் நிலைகொண்டிருப்பதாக அறிய முடிகிறது. ஈராக்கின் இரண்டாவது மிகப்பெரிய நகரமாக மொசூல் காணப்படுவதுடன், இந்நகர் மீதான தாக்குதல்கள் பலவாரங்கள் தொடருமெனவும் அல்லது அதற்கு நீண்டதாகவும் காணப்படுமெனவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. மொசூல் நகரமானது இஸிஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பிரதான நகரமாக இருப்பதுடன் ஈராக்கில் அதன் கடைசி அரணாகவும் நோக்கப்படுகின்றது. ஈராக் மற்றும் சிரியாவில் கணிசமான பகுதிகளை கைப்பற்றிய நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இஸிஸ் தீவிரவாதிகளின் தலைவரான அபூபக்கள் அல் பகாதி, மொசூல் நகரிலிருந்தே தமக்கான இஸ்லாமிய கலிபாத் அரசை தோற்றுவித்துக கொண்டார். மொசூல் நகரமானது ஈராக்கிய அரச படைகளுக்கு பிரதான இலக்காக இருப்பதற்கான காரணம் என்ன? நினேவெஹ் மாகாணத்தின் எண்ணெய் வள தலைநகராகவும் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகராகவும் இருந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு இஸிஸ் தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்டிருந்தது. சுன்னி முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த இப்பகுதியில் இஸிஸ் தீவிரவாதிகள் பிரதான படையான உருவெடுக்கத் தொடங்கியிருந்தனர்.

மொசூல்நகரிலிருந்துவெளியேறும் ஜிகாதிகள் ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரஜைகளாவதுடன் மீண்டும் இவர்கள் ஐரோப்பாவுக்குள் நுழைவதால் பாரிய பாதுகாப்பு பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் பாரிஸில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் இஸிஸ் போராளிகளும் தொடர்புபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஈராக்கில் மிகவும் மாறுபட்ட ஒரெயொரு நகரமாக மொசூல் இருக்கின்றது. மத ரீதியில் சிறுபான்மையினரான அருபு, குர்துஸ், அஸ்ரியன்ஸ் மற்றும் துர்க்மன்ஸ் போன்ற வெவ்வேறு மதத்தவரை கொண்டுள்ளது. ஷியா முஸ்லிம்களின் குழுவை ஆத்திரமூட்டுகின்ற ஜாக்கிரதையான நடவடிக்கையுடன் சுன்னி முஸ்லிம்கள் தொடர்புபட்டுள்ளனர்.

இந்த பிரதான குழுவின் கட்டளை அதிகாரியான ஹாடி அல்அமெரி, ஈராக்கிய இராணுவ படைகளை மாத்திரமே நகரின் உட்பகுதியினுள் போராட அனுமதிப்பதாக கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தார். எவ்வாறெனினும் சுன்னி பெரும்பான்மையினர் வசிக்கும் மொசூலுக்கு அரச படைகள் மாத்திரமே நுழையுமென ஈராக் பிரதமர் தெரிவித்துள்ளார். மொசூலுக்குள் ஷியா போராளிகளை அனுமதிப்பது மத வன்முறைகளுக்கு வழிவகுக்குமென உள்நாட்டு சுன்னி அரசியல்வாதிகளும், பிராந்திய சுன்னி பெரும்பான்மையின நாடுகளான சவூதி அரேபியா மற்றும் துருக்கி என்பன எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த படை நடவடிக்கையானது பாரியதொரு மக்கள் வெளியேற்றத்துக்கு வழிவகுக்குமென எச்சரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. வின் கணிப்பின்படி மொசூல் நகரிலிருந்து 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வெளியேறும் வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக்கின் தற்போதைய நிலையை உலகின் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக ஐ நா. கணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு வருடங்களாக சுன்னி அரபுகளின் வாழ்விடமாக மொசூல் இருந்திருந்தது. இந்நிலையில் எதிர் தரப்பினருக்கு இஸிஸ் தீவிரவாதிகளின் கட்டுபபாடுகளான பொதுவிடங்களில் தலையை துண்டித்தல் மற்றும் உடல் உறுப்புகளை துண்டித்தல், புகைத்தலுக்கான தடை, பெண்கள் பொது இடங்களுக்கு செல்வதற்கான தடை, தீவிரவாதிகளின் கண்காணிப்பு, மிரட்டிப் பணம் பறித்தல் என்பவற்றோடு நீர், மின்சாரம், எரிபொருள் என்பவற்றில் தட்டுப்பாடு என பல இன்னல்களை இவர்களை அனுபவித்திருந்தனர்.

மேலும் மொசூலில் இருந்த பல கலாசார மரபுச் சின்னங்களையும் இஸிஸ் தீவிரவாதிகள் தகர்த்தெறிந்திருந்தலை குறிப்பிடத்தக்கது. தற்போதைய சூழலில் மத்திய கிழக்குப் பகுதியிலிருள்ள குர்திஸ்களுக்கு துருக்கி பலமான உதவியாக இருக்கிறது. மொசூல் பகுதியினை மீட்டெடுப்பதற்கு 150,00 குர்திஸ் பேஷ்மெர் காப் போராளிகள் தேவையாகவுள்ள நிலையில் 2500 பயிற்றப்பட்ட வீர்களே போருக்கு தயாராகவுள்ளனர். அமெரிக்கா சமீபத்தில் பேஷ்மெர்காப்புகளுக்கு எரிபொருள், உணவு, யுத்த தளவாடங்களை கொள்வனவு செய்யவும். வீரர்களுக்கு வழங்கவும் 41.5 மில்லியன் அ.டொலர்களை வழங்கியிருந்தது. ஏற்கனவே கனரக ஆயுதங்களை வழங்கியிருந்தும் அவை போதியதாக இருக்கவில்லை.

இவ்வாறு பல குறைபாடுகளுடனேயே மொசூல் நகரை கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. தீவிரவாதிகளின் கோட்டையாகவிருக்கின்ற மொசூல் நகரை கைப்பற்றுவதற்கு தேவையான பலத்தை இவர்கள் கொண்டிருக்கிறார்களா என்பதில் அதிகம் சந்தேகமிருப்பதால் மொசூல் நகரை கைப்பற்ற பல நாட்களை இழக்க வேண்டியிருக்கலாம். ●



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனடிய பணத்தாள்களில் பெண்கள்

கனடாவின் பணத்தாள்களில் அச்சிடப்படவிருக்கும் பெண்களின் இறுதிப்பட்டியல் வெளியாகியுள்ளது. கடந்த மார்ச் மாதம் மகளிர் தினத்தை முன்னிட்டு கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பெண்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக, அவர்களின் முகம் பொறிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகள் அச்சிடப்படும் என அறிவித்திருந்தது பலருக்கும் நினைவில் இருக்கலாம். இதற்குபெயர்களை பரிந்துரை செய்யுமாறும் அதன் அடிப்படையில் இறுதி பட்டியல் தயாராகும் எனவும் இந்தப் புதிய பணத்தாள்கள் 2018 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரும் எனவும் பிரதமர் ரூடோ தனது அறிவித்தலில் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பின்னணியில் ரூபாய் நோட்டுகளில் பொறிக்கப்படவிருக்கும் 12 பெண்மணிகளின் பெயர்கள் அடங்கிய இறுதிப்பட்டியல் வெளியாகியுள்ளது.



**பிட்சியோலாக் அஸ்ஹூனா**
(Pitseolak Ashoona)
1904-1983 - ஓவியக் கலைஞர்

ஒரு புராதானமான ஓவிய கலைஞரான இவர், பல்வேறு வடிவங்களைக் கொண்ட ஓவியங்களுக்காக அறியப்படுகிறார். இவர் 1974 ஆம் ஆண்டு Royal Canadian Academy of Arts உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.



**எமிலி கார்** (Emily Carr)
1871-1945 - ஓவியக் கலைஞர்

20ம் நூற்றாண்டின் முதல் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இருந்த ஒரு சில முக்கிய பெண் ஓவியர்களில் ஒருவராக இருந்தவர் இவர். தனது முதல் சிறுகதை புத்தகமான Klee Wyck (1941) புத்தகத்திற்கு ஆளுநர் நாயகத்தின் விருது பெற்றார்.



**தெரேசா கேஸ்கிரெய்ன்** (Thérèse Casgrain)
1896-1981 - சமூக சீர்திருத்தவாதி மற்றும் அரசியல்வாதி

கியூபெக்கில் உள்ள பெண்களுக்கான வாக்குரிமை பிரச்சாரத்தைமுன்னின்று நடத்தியவர் என்பதற்காக நினைவுகூறப்படுபவர் இவர். கனடாவில் ஒரு அரசியல் கட்சியை தலைமை தாங்கும் முதல் கனடிய பெண் என்னும் பெருமையையும் பெறுகின்றார். இன்று புதிய ஜனநாயகக் கட்சி என்று அறியப்படும் கட்சியின் கியூபெக் பிரிவிற்கு தலைமை தாங்கிய இவர், 1970ஆம் ஆண்டு செனட்டராக நியமிக்கப்பட்டவர்.



**வயோலா டெஸ்மாண்ட்** (Viola Desmond)
1914-1965 - செயல்வீரர்

ஒரு தொழிலதிபராக இருந்து சிவில் தாராளவாதியான இவர், தனது அழகு பள்ளி மூலம் நோவா ஸ்கோட்டியாவில் இருந்த இளம் கறுப்பினப் பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். 1946ல் திரையரங்கில் வெள்ளையினத்தவர்கள் மட்டும் அமர வேண்டிய பிரிவில் அமர மறுத்து இன பாகுபாட்டை ஏற்க மறுத்த அவரது தைரியமான செயலுக்காக பெரிதும் அறியப்படுகிறார்.



**லோட்டா ஹிட்ஷ்மனோவா**
1909-1990 - மனிதாபிமானி

வைத்தியரான இவர் இரண்டாம் உலகப் போரின் போது செக் நாட்டு அகதியாக கனடாவுக்கு வந்தவர். 1945ம் ஆண்டில் போருக்கு பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கு உதவ, கனடாவின் ஒருமைப்பட்ட சேவை குழுவை (USC கனடா) நிறுவினார். USC கனடாவின் பணி இன்றும் தொடர்கின்றது.



**ஈ. பவுலின் ஜான்சன்** E. Pauline Johnson
1861-1913 - கவிஞர்

தனதுபூர்வீகக்குடிபாரம்பரியத்தை கொண்டாடும் வகையில் எழுதிய கவிதைகளுக்காக அறியப்பட்டார் இவர். தனது படைப்புக்கள் மூலம் கனேடிய கலாச்சாரம் இடம்பெறும் நாட்டுப்பற்று கவிதைகள் மற்றும் சிறுகதைகள், அவரை ஒரு பிரபலமான கனடிய கதாநாயகியாக்கியது.



**எலிசபெத் (எல்சி) மெக்கில்**
Elizabeth (Elsie) MacGill
1905-1980 - பொறியாளர்

இவர் மின் பொறியியலில் இளங்கலைபட்டம்பெற்றகனடாவின் முதல் பெண் (டொராண்டோ பல்கலைக்கழகம், 1927) மற்றும் விமான பொறியியலில் முதுகலை பட்டம் (மிச்சிகன் பல்கலைக்கழகம், 1929) பெற்ற கனடாவின் முதல் பெண் ஆவார். உலகின் முதல் பெண் விமான வடிவமைப்பாளரும் இவரே. இவரது தலைமையின் கீழ் 1,400 க்கும் மேற்பட்ட விமானங்கள் கட்டப்பட்டது.



**நெல்லி மெக்லங்** — Nellie McClung
1873-1951 - பெண் வாக்குரிமை ஆதரவாளர்

பெண்களை செனட் சபையில் நியமிக்கப்பட வேண்டும் என்னும் உரிமையை நிறுவும் அரசியலமைப்பு சட்டம் குறித்த வழக்கில் புகழ் பெற்றவர் இவர். ஒரு அரசியல்வாதி மற்றும் பொது விரிவுரையாளராக, சமூக சீர்திருத்தம் மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றி தீவிரமாக பிரச்சாரம் செய்தார். ஆல்பர்ட்டா சட்டமன்றத்தில் எட்மன்டன் பகுதியின் லிபரல் உறுப்பினர் (1921—26) மற்றும் ஆளுநர்களின் சிபிசி வாரியத்தின் முதல் பெண் உறுப்பினராக (1936—42) இருந்தார்.



**லூசி மாட் மாண்ட்கோமெரி**
Lucy Maud Montgomery
1874-1942 - எழுத்தாளர்

1908 ஆம் ஆண்டில் இவரது முதல் நாவல், கனடா மற்றும் அமெரிக்காவில் நன்கு விற்பனையாகும் ஒரு புத்தகமாக அமைந்தது மட்டுமல்லாமல், 100க்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு பின்னர் கூட ஆங்கிலம் மற்றும் பல மொழிகளில் அச்சில் நிலைத்துள்ளது. , 22 நாவல்கள் மற்றும் சிறுகதை புத்தகங்கள், ஒரு சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள், மற்றும் எண்ணற்ற கவிதைகள், கதைகள் மற்றும் பத்திரிகை கட்டுரைகள் போன்றவற்றை வெளியிட்டுள்ளார். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளராகவும் இருந்துள்ளார்.



**ஃபேனி (பாபி) ரோசன்ஃபெல்ட்**
Fanny (Bobbie) Rosenfeld
1904-1969 - தடகள வீராங்கனை

ஒரு தடகள வீரரான இவர், பல கனடிய சாதனை பதிவுகளை செய்தார். 1928 ஆம்ஸ்டெர்டாம் ஒலிம்பிக் போட்டியில், வெள்ளிப் பதக்கம் தங்கப் பதக்கத்தையும் வெற்றி கொண்டவர். 1950ல் 20 ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் கனடாவின் பெண் தடகள வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1955ல் கனடாவின் விளையாட்டு ஹால் ஆஃப் ஃபேமில் நியமிக்கப்பட்டார்.



**கேப்ரியல்லி ராய்** — Gabrielle Roy
1909-1983 - எழுத்தாளர்

பிரஞ்சு—கனடியராக மானிட்டோபா பகுதியில் வறுமையில் வளர்ந்த இவர், அந்த அனுபவம் மற்றும் அத்துடன் மாண்ட்ரியல் பத்திரிக்கையாளராக தனது ஆய்வுகள் ஆகியவற்றைக் கொண்டு, நகர்ப்புற துயரத்தின் தெளிவான சித்தரிப்புகளை எழுதினார். 1947ம் ஆண்டு முதல் கனடா ராயல் சொசைட்டியின் உறுப்பினராக இருந்த இவர், கவர்னர் ஜெனரல் விருது உட்பட மிக உயர்ந்த இலக்கிய விருதுகளை பெற்றார்.



**இடோலா செயிண்ட்-ஜீன்** Idola Saint-Jean
1880-1945 - பெண் வாக்குரிமை ஆதரவாளர் மற்றும் செயல்வீரர்

கியூபெக் நகரில் நடந்த பெண் வாக்குரிமைக்கான போராட்டத்தில் ஒரு பெண்ணியவாதி முன்னோடியாக அறியப்படுகிறார். மத்தியத் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்ட கியூபெக்கின் முதல் பெண்மணியாவார். 1991ல் இருந்து, கியூபெக்கின் பல பெண்கள் அமைப்புக்கள் இவரது பெயரில் விருதுகளை வழங்கிவருகின்றன. ●

எஸ் ஆர் ராஜபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் கொலைகளைக் கண்டிப்பதோடு நின்றுவிடாமல் எம்மிடம் காணப்படும் குறைகளையும் நாம் களைய வேண்டும்

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் காவல்துறையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் வடக்கில் மட்டுமல்ல அதற்கு வெளியிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஒக்தோபர் மாதம் 20 ஆம் திகதி (வியாழக்கிழமை) நள்ளிரவு 11.30 மணியளவில் கந்தரோடையில் இருந்து சகுந்தராசா சுலக்சன் மற்றும் நடராசா கஜன் (அகவை 23) ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்ததாகவும் காவல்துறையினர் மறித்த போது நிற்காமல்போனதாகவும் அதையடுத்து அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிகிறது.


காவல்துறையினர் மறித்த போது அந்த மாணவர்கள் நின்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் நிற்கவில்லை. அதன்பின் காவல்துறை அவர்களைத் துரத்திப் பிடித்திருக்க வேண்டும். அல்லது அந்த வீதியின் மறுபக்கம் கடமையில் இருந்த காவலர்களுக்கு அவர்களைப் பிடிக்குமாறு செய்தி அனுப்பியிருக்கலாம். அதைச் செய்யாமல் எடுத்த எடுப்பில் துப்பாக்கிப் பிரயோசம் செய்ததை யாரும் நியாயப்படுத்த முடியாது. இதனால் இரண்டு உயிர்கள் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளன.

முதலில் சுலக்சன் மற்றும் கஜன் இருவரது மரணமும் விபத்து என கொழும்பில் உள்ள காவல்துறை தலைமையகம் சொல்லியது. இது வழக்கமாகச் சொல்லப்படும் காரணம்தான்.

மகிந்த இராஜபக்சா ஆட்சியில் நாரன்பிட்டியாவில் வைத்து றக்பி யூனியன் விளையாட்டு வீரர் தசீம் தாயுதீன் மே 17, 2007 அன்று திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டார். ஆனால் அது விபத்து என்று சொல்லி காவல்துறை சம்பவத்தை முடித்துவிட்டது. மூன்று ஆண்டுகள் கழித்து நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக தெகிவளை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட தசீம் தாயுதீன் உடல் தோண்டி எடுக்கப்பட்டு மீள்பிரேத பரிசோதனை செய்தபோது தசீம் விபத்தில் இறக்கவில்லை கொலை செய்யப்பட்டார் என மருத்துவ அதிகாரி அறிக்கை கொடுத்தார். இதனை அடுத்து தசீம் தாயுதீன் கொலையில் சம்பந்தப்பட்ட முன்னாள் உதவி காவல்துறை அதிபர் அனுரா சேனநாயக்கா கடந்த மே மாதம் கைது செய்யப்பட்டார். தாயுதீனின் கொலைக்குப் பின்னால் மகிந்த இராஜபக்சாவின் மகன்மார் நாமல் மற்றும் யோஷிதா இருந்தார்கள் என புலனாய்வுத்துறை நம்பப்படுகிறது.

நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் சுலக்சன் மற்றும் கஜன் கொலைகள் மூடிமறைக்கப்பட்டு திசை திருப்பப் பட்டிருக்கும். நல்லகாலமாக சனாதிபதி சிறிசேனா தலையிட்டு சம்பந்தப்பட்ட 5 காவலர்களையும் கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.





அதோடு நின்றுவிடாது காவல்துறை தலைமையகம் முன்னர் விடுத்த அறிக்கையை மறுத்து சரியான தகவல்களைக் கொண்ட அறிக்கையை விடுமாறு பணித்தார். "ஐந்து காவலர்கள் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்டதோடு அவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்" என இரண்டாவது அறிக்கை தெரிவித்தது.

மிக அண்மையில்தான் இலங்கைக்கு வருகைதந்த ஐக்கிய நாடுகள் சபை சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் நாடியா (Ms. Izsak-Ndiaye, UN Rapporteur) கொழும்பு சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை நடைமுறையில் செய்து காட்ட வேண்டும் என்று கேட்டிருந்தார்.

இந்தக் கொலைகளுக்கு பொறுப்பான காவலர்கள் தண்டிக்கப் பட வேண்டும். இப்படியான கொலைகள் மீண்டும் இடம்பெறுவது தடுக்கப்பட வேண்டும்.

இந்தக் கொலைச் சம்பவத்தை அடுத்து ஒக்தோபர் 23 பிப 2.00 மணியளவில் சுன்னாகம் பல்பொருள் அங்காடியொன்றுக்கு முன்னால் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த வாள்வெட்டுக் கும்பல் இரண்டு தேசிய புலனாய்வு அதிகாரிகளை வெட்டியது. காயப்பட்ட அந்த அதிகாரிகள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். இதற்கு ஆவா என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது. கிளிநொச்சியிலும் கடமையில் இருந்த காவலர் ஒருவர் தாக்கப்பட்டார். தாக்கப்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உணர்ச்சி அரசியலுக்கு பெயர் போன வடமாகாண சபை முதல்வர் விக்னேஸ்வரன் இலண்டனிலிருந்தபடி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலை தொடர்பில் வருத்தம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இளைஞர் யுவதிகள் உள்ளடங்கலான அனைவரும் பொறுமை காக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார். இது வரவேற்கப்பட வேண்டிய செய்தி. இந்தக் கொலைகளுக்கு படையினருக்கும் தமிழ்மக்களுக்கும் இடையிலான நீண்டகால பகைமை, ஐயுறவு, வெறுப்பு முக்கிய காரணிகளாகும். ஆனால் நாங்கள் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என நாம் நடந்துகொண்டால் அது அழிவிலேயே போய் முடியும்.

நாங்களும் இந்த சம்பவத்தின் மறுபக்கத்தையும் பார்க்க வேண்டும். பல்கலைக் கழக விடுதியில் வசித்து வந்த இந்த இரண்டு இளைஞர்களும் நள்ளிரவில் எதற்காக வெளியில் திரிய வேண்டும்? ஒரு குறித்த நேரத்துக்குள் விடுதிக்கு திரும்பவேண்டும் என்ற விதி பல்கல்கலைக் கழகத்தில் இருக்கவில்லையா? காவல்துறை மறித்தபோது ஏன் அவர்கள் நிற்கவில்லை? ஏன் வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்ட வேண்டும்? சம்பவம் நடந்த இடம் வாள்வெட்டுச் சம்பவங்களுக்கு பெயர் போன கொக்குவில் குளப்பிட்டி பகுதியாகும். குறித்த மாணவர்களை ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என காவலர்கள் பிழையாக நினைத்திருக்கலாம் அல்லவா?

காவல்துறை பணி என்பது மிகவும் உன்னதமானது. இப்பணியில் இருப்பவர்கள் நேர்மையோடு பணியாற்ற வேண்டும். பலர் நேர்மையுடன் செயற்பட்டாலும் சிலரின் நேர்மையீனத்தால் ஒட்டுமொத்த காவல்துறைக்கும் களங்கம் ஏற்பட்டு விடுகின்றது.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கையூட்டு, போதை மருந்து கடத்தல், சாராய விற்பனை, வாள்வெட்டு கலாசாரம் நிலவுகிறது. காவல்துறை கையூட்டு வாங்கிக் கொண்டு குற்றவாளிகளை தப்பிக்க விடுகிறது என்ற குற்ற சாட்டும் பரவலாக இருக்கிறது.

முப்பது ஆண்டு காலப் போரின் வடுக்களை சுமந்து கொண்டிருக்கும் ஒரு இனம் ஏன் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்பது புதிராக இருக்கிறது.

போர்க்காலத்தில் வடக்கில் கண்ட இடங்களில் எல்லாம் சாராய விற்பனைக் கடைகள் திறக்கப்பட்டன. ஒரு காலத்தில் கல்வியில் முதலிடத்தில் இருந்த யாழ்ப்பாண மாவட்டம் இன்று சாராய விற்பனையில் முதலிடம் வகிக்கிறது. அரசே சாராய விற்பனையை ஊக்குவிக்கிறது. சாராயத்தை அரசே உற்பத்தி செய்கிறது! சாராயத்தைக் குடித்துவிட்டுத்தான் பலர் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். இந்த சாராய விற்பனைக் கடைகளில் பாதியை அரசு மூடினால் என்ன?

கல்லூரி வாசல்களிலேயே பகிரங்கமாகப் போதைப் பொருள் விற்பனை நடைபெறுகிறது. தமிழர்களே கேரளாவில் இருந்து கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான கஞ்சாவை தமிழ்நாடு ஊடாக குடாநாட்டுக்கு நாளும் கடத்துகிறார்கள்.

ஊருக்கு ஊர் சண்டியர் குழுக்கள். பட்டப் பகலில் வீடு புகுந்து இளம் பெண்களைக் கடத்துகிறார்கள். எங்கும் ஒரு பாதுகாப்பற்ற நிலை காணப்படுகிறது. புலிகள் மீண்டும் வந்தால் நல்லது என்று மக்கள் நினைக்கிறார்கள்.

ஊர்க் கோயில்கள் யாவும் பல்லாயிரம் கோடி செலவில் புதிப்பிக்கப்படுகின்றன. பழைய சுண்ணாம்பு கோயில்களை இடித்து விட்டு புதிதாக கருங்கல்லில் கட்டுகிறார்கள். பெருத்த பொருட் செலவில் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இதில் முக்கால்வாசி வெளிநாட்டுப் பணம் ஆகும். அதே சமயம் பல பாடசாலைகள் மரத்துக்குக் கீழே பாடங்களை நடத்துகின்றன. பாடசாலைக் கூரை வேயப்படாமல் மழைக்கு ஒழுகுகின்றன.

வட மாகாண சபை, அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், சிவில் அமைப்புக்கள் வடக்கில் இடம்பெறும் போதை மருந்து, சாராய விற்பனை, வாள்வெட்டு கலாசாரம் போன்றவற்றுக்கு முள்ளிப் புள்ளி வைக்க முன்வரவேண்டும். உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எமது சமூகம் எமது கண் முன்னாலேயே சீரழிவது எமக்கு கவலை அளிக்கிறது.

இந்தக் கொலைகளைக் கண்டிப்பதோடு நின்றுவிடாமல் எம்மிடம் காணப்படும் குறைகளையும் நாம் களைய வேண்டும். ●

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியிலிருந்து தப்பிக்க முயலும் டொனால்ட் ட்ரம்ப்



அமெரிக்காவின் தேர்தல் ஜனநாயகம் என்பது முக்கியமானது. இந்தத் தேர்தல் ஜனநாயகத்தின் வயது இரண்டரை நூற்றாண்டுகளை எட்டுகிறது. இதனூடாக 57 தடவைகள் ஜனாதிபதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், அமெரிக்காவில் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறையும் வித்தியாசமானது. இராஜ்ஜியத் தலைவர், அரசாங்கத் தலைவர், முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் முக்கியமான அதிகாரங்களைக் கொண்ட பதவி ஜனாதிபதி பதவியாகும். இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் ஆகக் கூடுதலான தகுதி உடையவராக இருக்க வேண்டும் என்பது அமெரிக்க யாப்பை வகுத்தவர்களின் அபிலாசை. இந்த அபிலாசையை நிறைவேற்றுவதற்காக தேர்தல் நடைமுறையில் பல சோதனைகள் உள்ளன.

ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடும் ஒருவர் அனைத்து சோதனைகளையும் கடக்க வேண்டும். பல சவால்களை சந்திப்பது அவசியம். சோதனைகளும், சவால்களும் ஜனாதிபதி வேட்பாளரைப் புடம்போடும். அவரது மனோதிடம், பொறுமை, சகிப்புத் தன்மை முதலான குணங்களை உலகறியச் செய்யும். தமது கொள்கைகள், கோட்பாடுகள், நம்பிக்கைகள், திட்டங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைக்காத எந்தவொரு வேட்பாளரும் ஜனாதிபதித் தேர்தல் என்ற பயணத்தில் தமது இலக்கை அடைய முடியாது.

இந்தத் தேர்தலில் பல சுவாராஸ்யங்கள் அடங்கியுள்ளன.. வரலாற்றில் முதற்தடவையாக பெண்ணொருவர் பிரதான வேட்பாளராக தெரிவாகியிருப்பது முதல் சுவராஸ்யம். ஆளுநராகவோ, மக்களவையின் பிரதிநிதியாகவோ கடமையாற்றிய அரசியல் அனுபவம் இல்லாத கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் போட்டியிடுவது இரண்டாவது சுவராஸ்யம். அமெரிக்காவின் ஜனநாயகத் தேர்தல் கட்டமைப்பிற்குள் இவ்விருவருக்கும் இடையிலான பிரசாரப் போர் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் இன்னொரு சுவராஸ்யம். இவ்விளைவுகள் ஏற்படுத்தியிருக்கும் கேள்விகள் சுவராஸ்யத்தை விடவும், எதிர்காலம் குறித்த கடுமையான கேள்விகளை எழுப்பியிருக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் என்ற ஓட்டப் போட்டியில் பல குதிரைகள் ஓடினாலும், இது வரலாற்றுக் காலம் தொட்டு பொதுவாக இரட்டைக் குதிரைப் போட்டியாக இருப்பது வழமை. ஒரு குதிரை ஜனநாயகக் கட்சி என்ற இலாயத்தில் இருந்து வரும். மற்றைய குதிரைய குடியரசுக் கட்சி என்ற இலாயத்தைச் சேர்ந்ததாக இருக்கும். இம்முறை முன்னையதன் சார்பில் ஹிலாரி கிளிண்டனும் (Hillary Clinton), பின்னையதன் சார்பாக டொனால்ட் ட்ரம்பும்(Donald Trump) களமிறங்கி இருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலில் ஹிலாரி கிளிண்டனுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமெனத் தெரிவதாக ஆய்வு அமைப்புகள் கூறுகின்றன. இதற்குக் காரணம் இருக்கிறது. இதுவரை காலமும் இடம்பெற்ற பிரசாரத்தின் போது இருவருக்கு இடையில் நிகழ்ந்த போட்டியில் எவர் சிறந்தவர் என்பதை எடைபோடுவதில் அமெரிக்கர்கள் சற்று சிரமப்பட்டார்கள் என்றே தெரிந்தது. இரு வேட்பாளர்களினதும் கொள்கைகள், கோட்பாடுகள், தனிநபர் ஆளுமைகள், அரசியல் பின்புலம் முதலான விடயங்களின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்த்தால், டொனால்ட் ட்ரம்பை விடவும் ஹிலாரி கிளிண்டன் கூடுதல் தகுதிகளைக் கொண்டவராக இருந்தார். இருந்த போதிலும், ஈமெயில் சேர்வர் சர்ச்சையும், முக்கியமான பொதுக் கூட்டமொன்றில் நிலைதடுமாற வழிவகுத்த நலிவான உடல்நிலை பற்றிய செய்திகளும் அந்தத் தகுதியின் மீது கேள்வியை எழுப்பியிருந்தன.

இருந்தபோதிலும்,நேரடித் தொலைக்காட்சி விவாதத்தின் விளைவுகளைத் தொடர்ந்து, அமெரிக்க மக்களின் ஆதரவு கிளிண்டனை நோக்கி நகர்ந்துள்ளதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் போரில் இரு பிரதான வேட்பாளர்களுக்கு இடையிலான நேரடி தொலைக்காட்சி விவாதம் முககியமானது. இங்கு இரு வேட்பாளர்களும் தமது கொள்கைகளையும், கோட்பாடுகளையும்,திட்டங்களையும் விளக்கி, நேருக்கு நேர் தர்க்கம் புரிய வாய்ப்பளிக்கப்படும். இந்த வாதப் பிரதிவாதங்களைக் கையாளும் விதத்தின் அடிப்படையில் இருவரையும் ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்த்து, யார் சிறந்தவர் என்பதைத் தீர்மானிக்கும் அமெரிக்கர்கள் ஏராளம்.

குடியரசுக் கட்சியின் பிரதம வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவர் மீது தீவிர விமர்சனங்கள் எழுந்தன. இவர் இனவாதி, ஆணாதிக்க சிந்தனையாளர், பேசத் தெரியாதவர், சண்டைக்காரர் என்ற விமர்சனங்கள் முக்கியமானவை. இனிமேலும், அமெரிக்காவிற்குள் முஸ்லீம்களை அனுமதிக்கக் கூடாதென்ற கருத்தின் மூலம் தமது இனவாதச் சிந்தனையை அவர் உலகறிய பறைசாற்றினார். ஆப்பிரிக்க குடியேறிகளும், லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களுமே அமெரிக்காவில் அதிகமாக குற்றச்செயல்களைப் புரிகிறார்கள் என்றும் அவர் கூறினார். இந்தக் கருத்து பரவலாக வெறுக்கப்பட்டாலும், இதற்கு ஆதரவாகப் பேசிய தீவிர வலதுசாரிகளும் இருந்தார்கள் என்பதை மறந்து விட முடியாது. பெண்களைப் பொறுத்தவரையில், அவர் எந்தளவு இழிவான கொள்கைகளைக் கொண்டிருந்தார் என்பதை ஒரு வீடியோ ஒளிப்பதிவு தெளிவுப்படுத்தியது. இந்த வீடியோ வெளியானதைத் தொடர்ந்து, குடியரசுக் கட்சியின் பாசறையில் இருந்து கண்டனக் கருத்துக்கள் வெளியாகியிருந்தன. இருந்த போதிலும், தமது கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் தகுதி ட்ரம்பிற்கு இல்லையென கட்சி அறிவிக்கவில்லை. அதேபோல் டொனால்ட் ட்ரம்ப் குறித்த விமர்சனங்கள் பற்றியெல்லாம் அமெரிக்கர்கள் அவ்வளவாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. ஹிலாரி கிளிண்டன் என்ற மோசமான வேட்பாளரை விடவும் ட்ரம்ப் என்ற ஆண் சிறந்தவராக இருக்கக் கூடுமென குடியரசுக் கட்சி வேட்பாளர்கள் கருதியிருக்கலாம்.

இருந்த போதிலும், இறுதித் தொலைக்காட்சி விவாதத்தில் தேர்தல் பெறுபேறு குறித்து டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்த கருத்து, அமெரிக்காவின் மனசாட்சியை ஆட்டிப் போட்டுள்ளது என்றால், அதற்குக் காரணம் உண்டு. தேர்தல் பெறுபேறுகளை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம் என்று கூறியதன் மூலம், அவர் தன் தோல்வியை முன்கூட்டி அறிந்து கொண்டு கடந்த காலத் தவறுகளின் பாதிப்பில் இருந்து தப்பித்துக் கொள்ள வழி தேடுகிறார் என்று எவரும் கருதலாம். எனினும், இந்தக் கருத்தின் மூலம் அமெரிக்காவின் ஜனநாயக தேர்தல் நடைமுறையை கேள்விக்கு உள்ளாக்க முனைந்திருக்கிறார் என்று தோன்றுகிறது.

தேர்தல் பெறுபேறுகள் சட்டபூர்வமானவையான இருக்கும் பட்சத்தில், தான் பெறுபேற்றை ஏற்கப் போவதாக கூறுவதன் மூலம், தேர்தல் சட்டவிரோதமானதாக இருக்கும் என்ற தொனிப்படும் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். இருந்தபோதிலும், இந்தத் தேர்தல் எந்த வகையில் சட்டவிரோதமானதாக இருக்கும் என்பதை விவாதத்தில் தெளிவுபடுத்தவில்லை. இதற்கு முன்னர் ட்ரம்ப் அளித்த விளக்கங்களும், முழுமையானவையாக இருக்கவில்லை. ஒரு நடைமுறையின் மூலம் இலக்கை அடையும் முயற்சியில் தான் தோல்வி கண்டால் அது நடைமுறையின் தோல்வியெனக் கூறி தப்பிக்கப் பார்ப்பதை வேறு எங்கும் பிரயோகிக்கலாம். அதனை அமெரிக்காவின் ஜனநாயக தேர்தல் முறைமை என்ற கூட்டமைப்பிற்குள் பிரயோகிக்க முடியாது. ஏனெனில், எந்தவொரு விடயத்தை விடவும் அமெரிக்கர்கள் தமது ஜனாநாயகத்த்ன் மீது அபார நம்பிக்கை வைத்துள்ளார்கள். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகுருவியின் கார்டூன் வரைனர்

# அஸ்வின் சுதர்ஷனுக்கு அஞ்சலி



அஸ்வின் சுதர்ஷன்! தாயகத்திலிருந்து எம்மோடு இணைந்து பணியாற்றி சகோதரர் அஸ்வின் சுதர்ஷனின் மரணச் செய்தி 'eகுருவி' குழுவினரான எம்மை பெரும் வருத்தம் கொள்ள வைக்கின்றது. அஸிவின், தமிழ் ஊடகத்துறையில் 'கேலிச்சித்திரம்' எனும் களத்தில் மிகவும் உச்சபட்சத் திறைமையோடு வளர்ந்து வந்தவர். எமது சஞ்சிகையில் அடிக்கடி தனது பங்களிப்பினை வழங்கி வந்தவர். தொழில்முறை நேர்த்தியோடு தொடர்ந்தும் பணியாற்றுவதற்கான ஆர்வத்தினை வெளிப்படுத்தி வந்தவர்.

தமிழ் இனமே தொடர் இழப்புக்களினால் அல்லாடிக் கொண்டிருக்கின்ற தருணத்தில், மற்றொரு திறைமையான இளைஞனின் இழப்பு ஏற்றுக்கொள்ள முடியாத வலியை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் ஊடகப் பரப்பு மாத்திரமின்றி, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பும் அவரது இழப்பினால் ஆரோக்கியமான கருத்தாளன் ஒருவனின் இழப்பை சந்தித்து நிற்கின்றது. அஸ்வினின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் eகுருவி குழுவினரின் ஆழ்ந்த அனுதாபங்கள். சகோதரர் அஸ்வினின் ஆன்மா அமைதியடையட்டும்.

-eகுருவி குழு




( கடந்த வருடம் டிசம்பர் மாதம் eகுருவி பத்திரிகையின் அட்டைப் பட அஸ்வினின் கார்டுன்)

The Scarborough Hospital FOUNDATION

ஸ்காபுறோ வைத்தியசாலைக்கான நிதி சேகரிப்பு

YOGI & PARTNERS PRODUCTION · IDEAL DEVELOPMENTS ஆதரவில்

பிரணவன், பிரம்யா வழங்கும்

கலை மாலை

கனடா கந்தசாமி கோவில் மண்டபம்
1380 Birchmount Rd, Scarborough, M1P 2E3

Saturday
Dec 3rd
5:00 p.m









ஸ்காபுறோ வைத்தியசாலைக்கான நிதிசேகரிப்பு கலை மாலையில்
கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு: 416-267-6741

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசம் 5 ஆண்டுகளில் இன்னொரு சிங்கப்பூர் ஆகும் - பொப் ரே

என்ன வாசிக்கும் போது கண்ணை கட்டுகிறதா?? வாருங்கள் நடந்துவந்த தடங்களுக்குள் அழைத்துச்செல்கிறேன். பலவற்றை வரலாறாக பகிர்ந்து கொள்ளவேண்டும் பதிவுசெய்துவிட வேண்டும் என எழுத ஆரம்பித்து பல முற்றுப்பெறாமலே பாதியில் நிற்கின்றன. நான் நினைக்கும் வேகத்தில் முடித்துவிட் உடல்நிலை இடம் கொடுக்கிறதில்லை. இருந்தாலும் முடிந்தவரை ஒவ்வொன்றாக எடுத்துவரப் பார்க்கிறேன்.

2000 ஆண்டுகளில் பாலா அண்ணா லண்டன் திரும்பிதும் தொடர்புகளை மீண்டும் எடுபடுத்திக் கொண்ட காலம். 2001 முகமாலை இறுதிச்சமருக்கு பின்னர் சர்வதேச சமாதான முயற்சிகள் முனைப்புப்பெற அம்முயற்சியில் புலம்பெயர் தமிழர்களையும் இணைத்துக் கொள்ள தீர்மானிப்பபட அதில் இணைந்து கொள்ளுமாறு பாலா அண்ணா அழைப்பு விடுத்தார். அச்செயற்பாடுகளை முன்னெடுக்க ஒரு அரசியல் விவகாரக்குழு அமைந்ததும் அதில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 16 முதன்மை போராளிகள் தாயகத்தில் இருந்து இணைத்துக் கொள்ளப்பட்டதும் வரலாறாயின.

இக்குழு சர்வதேச பயணங்களை



செய்வதற்கு முன்னேடியாக 2003 மார்ச் மாதம் தாயகத்தில் ஒரு சந்திப்பு ஏற்பாடாகிற்று. அதில் கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. 19 ஆண்டுகளின் பின் தாயகம் திரும்புவதில் எனக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. அதில் ஒரு கொடூர திருப்தி கூட இருந்தது.

1995இல் மாணிக்கவாசகம் சுரேஸ் கனடாவில் கைதானதும் அவரை நாடுகடத்துவதற்கு எதிரான வழக்குகள் கனடிய நீதிமன்றங்களில் தொடர்ந்து கொண்டிருந்த காலம் அது. அது குறித்த பத்திரிகை செய்திகளில் 1997இல் குளோப் அன்ட் மெயில் பத்திரிகையில் வெளியான ஒரு செய்திக்கட்டுரையில் நானும் அன்றைய சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்மன் கதிர்காமரும் மோதிக் கொண்டோம. அதில் முடிந்தால் சிறீலங்காவிற்கு வந்து பார்க்குமாறு திமிருடன் சவால் விடுத்திருந்தாலீ அவர். சற்று நிதானம் இழந்து பெரிய மீனின் வருகைக்காக தாங்கள் காத்துக் கொண்டிருப்பதாக வேறு போட்டுத் தள்ளினார். அதுவும் சுரேஸ் தொடர்ந்தும் கனடாவில் தங்குவதற்கு வலிகோலியது.

முடிந்தால் வந்துபார் என சவால் விடுத்த இடத்தில் கால் பதிப்பதில் எனக்கு அவ்வளவு ஆனந்தம் அப்போது. தாயகம் திரும்பி வன்னி சென்றடைந்தபோது பாலா அண்ணா ஏற்கனவே அங்கு சென்றடைந்திருந்தார். சமாதான செயலகத்திற்கு அருகில் தங்கவைக்கப்பட்டிருந்த என்னை ஒரு நாள் காலை பாலா அண்ணாவுடன் தமிழ் செல்வன் ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றார். இரணைமடு குளத்திற்கு முன்பாக அமைந்திருந்த இடம் புதிதாக புனரமைக்கப்பட்டு விடுதிபோல் இருந்தது. டாங் வியூ விடுதி என அழைக்கப்பட்ட அந்த இடத்திற்கு அன்று திறப்புவிழா.

பாலா அண்ணா நாடா வெட்டி திறந்து வைத்தார். 23 அறைகளைக் கொண்டிருந்த அந்த விடுதியை வடிவமைத்து உருவாக்கியவர் தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் தங்கன்; தங்கன் ஒரு பொறியிலாளர் என்பது பலருக்கு தெரியயாத விடயம்.

அதில் முதலாவதாக முடியமர்த்தப்பட்ட எனக்கு தங்கன் ஒரு பணி தந்தார். அண்ணை மற்றவை வருவதற்கு முன்னர் நீங்கள் இதில் உள்ள குறைகளை கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும் என்றார். நட்சத்திர் விடுதிபோல் அனைத்து வசதிகளுடனும் அது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இரு நாட்களிலேயே அவ்விடுதி நிறைந்து வழிந்தது. ஒரு நாள் காலை தமிழ்ச் செல்வன் உடன்வருமாறு கூறியதாகக்கூறி வண்டி வந்தது. உடன் சமாதன செயலகத்தை சென்றடைந்தேன். என்னைப் பார்த்து சிரித்த தமிழ்செல்வன் அண்ணை இன்டைக்கு உங்கன்டை ஆக்கள் வருகின்ம் என்றார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. யார் எண்டு யோசிச்சுக் கொண்டே இருங்கோ வந்திடுவினம் என்றார்.


சற்று நேரத்தில் வாகனங்கள் வந்து நின்றன. இருவர் இறங்கி வந்தனர். நானும் ஆவலுடன் யார் என்று பார்த்தால் முன்னாள் ஒன்ராரியோ முதல்வரும் பின்னாள் லிபரல் கட்சித்தலைவருமான பொப் ரேயும் ரொரன்ரோ பல்கலைக்கழக அரசியல் துறைப்பேராசிரியர் டேவிட் கமரனும் வந்தனர். பொப்பை எனக்கு முன்பே பரிச்சயம் என்றாலும் பொப் என்னை அங்கு எதிர்பார்க்கவில்லவீ என்பது அவர் முகத்தில் புரிந்தது.

பின்னர் தான் புரிந்து கொண்டேன் அரசியல் விவகாரக்குழுவின் அலோசகர்களாக இருவரும் இணைந்து கொண்டிருப்பதும் அதன் ஒரு அங்கமாகவே அவர்கள் அங்கு வந்திருக்கின்றார்கள் என்பதும். இரண்டு நாட்கள் நாங்கள் மூவரும் டாங் வியூ விடுதியிலேயே தங்கினோம். காலை உணவருந்தியதும் அங்கு அமைக்கப்பட்டிருந்த வாடிகளில் சென்றமர்வோம். மரங்கள் எதனையும் வெட்டாது அவற்றை பாதுகாத்தவாறே அவற்றின் கீழ் அவற்றை சுற்றி அவ்வாடிகள் அமைக்கப்பட்டிருந்தன. கொடுமையான பங்குனி வெப்பநிலையிலும் அது மிகக்குளி;லீமையாக அமைந்திருந்தது.

இரண்டு நாட்களாக வன்னியில் பல்வேறு கட்டுமானங்களையும் பார்த்த பொப் ரே ஒன்றை தன் ஆழ்மனதில் இருந்து சொன்னார். உங்களுக்கு 5 வருடம் தந்தால் போதும் இன்னொரு சிங்கப்பூரை உருவாக்கி விடுவீர்கள் என்றார். கொடூர போருக்கு முகம் கொடுத்த ஒரு காட்டுப்பகுதியில் அலைந்து திரியும் விலங்குகளை மட்டுமே பார்க்கலாம் என்ற எண்ணத்தில் வந்தவர்களுக்கு அந்த குறுகிய காலத்தில் எழுந்தது மட்டுமன்ற ஒரு அதிசயக்கத்தக்க நிழல் அரசை பார்த்தபோது அவ்வாறான உணர்வே ஏற்பட்டது.

இன்று திரும்பிப் பார்க்கிறேன் ஒரு அரசு எமது கையில் இருந்தும் எதனையும் செய்யமுடியாதவர்களாக ஏனையவர்கள் எம்மை பார்த்து கேலி செய்ம் நிலையில் ஒரு ஆட்சிமுறைமைக் கொண்டிருக்கின்றோமே? அப்போது முடிந்தது இப்பொது ஏன் முடியவில்லை? ஒரு அர்பணிப்புள்ள தன் மக்களை நேசிக்கின்ற ஒரு தலைமையும் அதன் எண்ணக்கருக்களுக்கு வடிவம் கொடுக்கின்ற செயற்பாட்டாளர்களுமே அன்றைய அச்சாதனைக்கு காரணம். அன்று இன்னொரு சிங்கப்பூராகும் என எதிர்பார்க்கப்பட்ட தமிழர் தேசம் இன்று சிறீலங்காவிலேயே ஒரு சாபக்கேடாகியுள்ளது... நல்லவற்றில் இறுதியாகவும்.. கழியப்படவேண்டியவற்றில் முதன்மையாகவும் உள்ளது. ●

நேரு குணரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறண்டோ புளூஸும் 30வது ஆண்டும்

## மண்ணிற்காக மடிந்தவர்களை மறந்து வாழ்வதில் அர்த்தமில்லை



வீரத்தில் புதிய புறநானூற்றை படைத்த தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகள் பேரினவாதத்தினதும், மேலாதிக்கத்தினதும் கூட்டுசதியால் மரணத்தை தழுவிய பொழுதில், அங்கிருந்து பல ஆயிரம் கிமீ தூரத்தில் கனடாவில் அவர்களின் நினைவாக ஆரம்பிக்கப்பட்டதுதான் தியாகதீபங்கள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி.

தீருவில் மைதானத்தில் பன்னிரு வேங்கைகளினதும் உடல்கள் தீக்கு இரையாகி மெல்ல மெல்ல சாம்பலான பொழுதில் எதிரியும் அவனுக்கு துணையான பிராந்திய வல்லாதிக்கமும் நினைத்திருப்பார்கள் எல்லாம் முடிந்தது என.இதோ அவர்களின் நினைவு சுமந்துதான் இனி தமிழினம் எழும் என்ற செய்தியை ஒரு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி மூலம் சொல்லி நின்றது றொரண்டோ புளூஸ் கழகம். அது மெல்ல மெல்ல பெரிதாகி,ஒவ்வொரு வருடமும் புதிய புதிய பரிணாம வளர்ச்சி கண்டு இன்று தாயக விடுதலைக்காக தம்மை ஈகம் செய்த அனைவரதும் நினைவு சுமந்து பெரும் ஒளியாக திகழ்கிறது.இன்று அணுஆயுத



Scarborourgh Rangers

2015ம் ஆண்டு Seaways அணிக்கும் Toronto Blues அணிக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் Toronto Blues வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது

2016ம் ஆண்டு Scarborourgh Rangers அணிக்கும் Toronto Blues அணிக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் Toronto Blues வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது



Toronto Blues

வளர்ச்சியிலும், கண்டம் விட்டு கண்டம்பாயும் ஏவுகணைகளைகளின் துல்லிய இலக்குகளிலும், பிரபஞ்சத்தின் ரகசியங்களை அண்டவெளியில் செயற்கை கோள்களை அனுப்பி ஆய்வு செய்யும் அறிவிலும் விண்ணை தொட்டு நிற்கும் நாடுகள்கூட தமது தேசத்தின் இறையாண்மை, விடுதலை என்பனவற்றுக்கு உயிரை ஈகம் செய்த வீரர்களின் நினைவாக எத்தனையோ நினைவுகளை, தூபிகளை, நிகழ்வுகளை நடாத்திய வண்ணமே இருக்கிறார்கள். ஒரு தேசியஇனம் என்ற முறையில் எமது தேசியஅடையாளம், தேசிய இறையாண்மை என்பனவற்றுக்காக தம் வாழ்வை,உயிரை அர்ப்பணித்து போராடிய அனைத்து மாவீரர்களையும் நினைவு கொள்வது எமது தார்மீக உரிமை. கடமையும்கூட..



நேர்த்தியான ஒழுங்கமைப்பு,தமிழர்களுக்கே உரிய விருந்தோம்பல் நிறைந்த வரவேற்பு, மைதான நிகழ்வுகள் மிகவும் கட்டுப்பாடான நேர அமைப்பு,அதிகமான மக்கள் கலந்து கொள்ளும் ஒரு வெளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மைதானவிளையாட்டு நிகழ்வு என்ற பல அதி முக்கியபெருமைகள் இந்த றொரண்டோ புளூஸ் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு இருந்தாலும்கூட இந்த வருடத்தில் ஒரு புதுமை, ஒரு பிரமாண்டம் ஒன்றும் இதற்குள் சேர்ந்துள்ளது.. அதுதான் தங்க கிண்ணம். ஒரு கிலோ நிறையிலான தங்ககிண்ணம். தமிழர்களின் நீண்டவரலாற்றில் ஒரு மகத்தான எழுச்சியை, ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை, உலகமே வியந்து பார்த்த ஒரு அற்புதமான வரலாற்றை படைத்த தேசியதலைவர் பிரபாகரனின் உருவம் செதுக்கப்பட்ட ஒரு கிலோ நிறையிலான தங்ககிண்ணம் புலம்பெயர் நாடுகளில் புதிய ஒரு வரவு.வித்தியாசமானவரவு. 27.08.2016 அன்று கனடாவில் நடைபெற்ற றொரண்டோ புளூஸ்கழகத்தின் தியாகதீபம் உதைபந்தாட்ட போட்டி என்பது வெளித்தெரியும் பௌதீக பொருட்களின்,மகத்தான ஏற்பாடுகளின் உச்சத்தை தொட்டு நின்றாலும்கூட அவை எல்லாவற்றையும் தாண்டி இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஏற்படுத்தும் மனஉறுதி அதிகரிப்பு என்பது எழுத்தால் வடித்துவிட முடியாதது ஆகும்.

இறுதிப்போர் நடைபெற்ற 2009ற்கு பின்னர் மாவீரர்களை மேலும் ஒரு படி அதிகமாக நேசிக்கும் வீரியத்தை றொறன்டோ புளூஸ் பெற்றதென்றே நிகழ்வு பறைசாற்றுகிறது. அரசியல், போராட்ட கள நிலவரங்களில் மாறுதல்கள் ஏற்பட்டாலும் ஆதரித்த இலட்சியத்தில் இருந்து கடுகளவும் பின்வாங்காமல் தமது பணியை முன்னெடுப்பது யார் என்பதே இன்று நம்முன் நிற்கும் முக்கிய கேள்வி.



பின்னடைவுகள் வரலாம் போகலாம் நாம் நமது கடமையை தொடர வேண்டும் என்ற வீறும் வலுவும் கொண்ட நோக்கத்துடன் நடத்தப்படும் உறுதியான, தளம்பலற்ற ஓர் உணர்வுபூர்வமான நிகழ்வு இது என்பதில் இனி ஐயம் இல்லை என்று பங்கேற்ற கழகங்கள் எல்லாம் மகிழ்வு தெரிவிக்கும் அளவிற்கு தன்னை நிலைநிறுத்தியுள்ளது இந்தப் போட்டி.

மைதானத்தில் நுழைந்த உடனேயே ஒரு உதைபந்தாட்ட நிகழ்வு என்பதைவிடவீரமும், தியாகமும் நிறைந்த மகத்தான மனிதர்களின் நினைவை வரவழைக்கும் விதமாக பதாகைகளும், கொடிகளும் பாடல்களும் என்று அற்புத உணர்வு அது. அத்துடன் களமாடும் வீரர்களை காவிச்செல்லும் வாகனம் ஒன்றின் அதே உருமறைப்பு நிறத்துடன் தேசிய கொடியை வாகனத்தின் முன் பகுதியில் பொறித்து தமிழர்களின் வீரத்தின் இன்னொரு உச்சத்தை நினைவு படுத்தி நின்றிருந்தது. மிக நுட்பமான ஒரு முயற்சி இது. மக்களை ஒன்று கூட்டுவதற்கான ஒரு உதைபந்தாட்ட போட்டி.அவர்கள் ஒன்றுகூடும் இடத்தில் அவர்களின் தாயக விடுதலையை,அதற்காக உயிர் தந்து களமாடியவர்களை நன்றியுடன் நினைவு கொள்ள வைத்தல் என்று ஒரு நன்முயற்சி. இதற்காக உழைத்த றொரண்டோ புளூஸ் ஒருங்கிணைப்பாளர்களை காலம் எப்போதும் நன்றியுடன் தலைவணங்கி நிற்கும்.

வெற்றி கிண்ணங்களில் எல்லாம் தமிழினத்தின் தவப்புதல்வர்களின் முகங்களே. வெற்றி கழகத்துக்கு வழங்கப்பட்ட ஒரு கிலோ தங்க கிண்ணத்தில் பத்துக்கோடி தமிழர்களின் ஒற்றை முகவரியான எங்கள் தேசியதலைவனின் உருவம். முப்பது வருடங்கள் தமிழர் புலம்பெயர் வாழ்வின் முழு வருடங்கள் அத்தனை வருடங்களாக ஒரு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எந்தவொரு தளர்ச்சியும், சோர்வுமின்றி தொடர்ச்சியாக அதே நோக்கத்துடன் நடாத்தப்படுகின்றது என்றால் அது கனடா றொரண்டோ புளூஸ் கழகம் நடாத்தும்தியாகதீபங்கள் சுற்றுப்போட்டிதான்.



எடுத்த காரியத்தை மிகச் சிறப்பாக செய்து முடிப்பதற்கும், ஒவ்வொரு முறையும் புதிய புதிய வடிவங்களை புகுத்தி மக்களை ஒருங்கிணைப்பதிலும் இந்த தியாகதீபங்கள் சுற்றுப்போட்டி வெற்றிகரமாக நடைபோடுகின்றது என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே இருக்க முடியும். அது என்னவென்றால் இந்த சுற்றுப்போட்டியை நடாத்தும் றொரண்டோ புளூஸ்கழகத்தினர் தமது அனைத்து முயற்சிகளுக்கும் தேசியதலைவரையே முன்மாதிரியாக எடுத்து செயற்படுவதாலேயே ஆகும். ஒரு



கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த இந்த விடுதலைப்போராட்டம் கடற்படை, வான்படை என்று வானமளந்து நின்று உலகத்தின் விழிகளை வியப்பால் விரியவைத்தது என்றால் அந்த ஒற்றை மனிதனின் ஆளுமையும்,ஓய்வறியாத முயற்சிகளும்,மலையளவு உயர்ந்த தன்னம்பிக்கையும் மட்டுமே ஆகும்.அதனையே றொரண்டோ புளூஸ்கழகமும் வழிகாட்டும் விளக்காக எடுத்துள்ளனர். அந்த அதிமானுடனின் மௌனம் கூட ஆயிரம் வாசல்களை திறந்து வைக்கும். அதில் ஒன்றுதான் மைதானத்திலும் தேசிய உணர்வை வளர்த்தல்.றொரண்டோ புளூஸின் தாரகமந்திரமும் அதுவே றொரண்டோ புளூஸ் கழகம் அதனை இம்முறையும் (27.08.2016-சனிக்கிமை)செய்து காட்டி இருக்கிறார்கள்.

கனேடிய தமிழர்களின் நாட்காட்டியில் என்றும் நிரந்தர இடம் இந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு இருக்கும். எவராலும் தவிர்த்துவிட்டு போய்விட முடியாதவாறு றொரண்டோ புளூஸ் கழகம் நடாத்தும் தியாகதீபங்கள் உதைபந்தாட்ட போட்டி கனேடிய தமிழர்களின் வருடாந்த முக்கிய நிகழ்வுகளில் முன்னணியில் இனிவரும் காலங்களிலும் நிலைத்து நிற்கும்.

- வித்தனையான்



**30 வருட வரலாற்றில்**
**21 வருடங்கள் பங்கேற்ற வீரர்**

Digitized by Noolaham Foundation

# புதிய வெளிச்சம் கருத்துப் பகிர்வும் , மக்கள் சந்திப்பும்

பேராசிரியர் Dr ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் பங்குகொண்டு இலங்கைத்தீவின் தமிழர் வாழும் பல்வேறு பகுதிகளிலும் 20 நாட்கள் 18 பெரு நிகழ்வுகளாக நடைபெற்ற புதிய வெளிச்சம் நிகழ்வு குறித்த கருத்துப் பகிர்வும் மக்கள் சந்திப்பும் 17 Oct 2016 மாலை 7.00 PM அன்று கனடா ,ஸ்காபோரோவில் அமைந்துள்ள Estate banquet hall இல் நடைபெற்றது




















Home Life Future நிறுவன அதிபர் திரு செல்வா வெற்றிவேல் அவர்களின் புதல்வி செல்வி நிசானி வெற்றிவேல் அவர்களின் "Vettyvel Law Professional Corporation " எனும் புதிய சட்ட நிறுவனத்தின் அங்குரார்ப்பண விழாவும் அவரது சட்டத்துறை நுழைவைக் கொண்டாடும் வைபவமும் oct 12 ,2016 மாலை ஸ்காபுரோவில் அமைந்துள்ள மார்க்கம் கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



"கனடியத் தமிழர்கள் தான் எனது வழிகாட்டிகள்"சுவிஸ் நாட்டின் தூண் நகர சபை உறுப்பினர் திருமதி: தர்சிக்கா ஜெ வடிவேலு (Darshikka Jey Vadivelu ) அவர்களின் பிரதம விருந்தினர் உரை..... " பூவரசம் பொழுது 2016" நிகழ்வில் இகுருவி ஐயாவின் புகைபடத்தொகுப்பை பார்வையிட www.ekuruvi.com









Super Leads 8th Annual Guitar Recital.





நியு ஸ்பைஸ்லான்ட் சுப்பர் மார்க்கட்" தனது மூன்றாவது கிளையை oct 19 2016 அன்று காலை 10.00 ஏஜெக்ஸ் ( AJAX ) நகரில் திறந்து வைத்தது. கிளையை ஏஜெக்ஸ் நகரின் மேயர் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.. 1801 Harwood Avenue North . Units 21 , 22, 23, 24 என்னும் விலாசத்தில் இந்நிறுவனம் அமைந்துள்ளது




கல்வி Connections 5th Annual Moonlight Dinner & Dance 2016. கல்வி Connections தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்டு தமது குடும்ப உறுப்பினர்களை இழந்து வறுமையில் வாழும் குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவென ஆண்டு தோறும் நடைபெறும் நிதி சேர் விருந்து விழா 15 oct 2016 அன்று நடைபெற்றது. பிரபல வீடு விற்பனை முகவர் தீபன் ராஜ் அவர்கள் 10,000 டொலர்களை அன்பளிப்பு செய்வதை படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கில் குவியும் கேரளா கஞ்சா

வடபகுதியில் தற்போது தான் கேரளா கஞ்சாவின் வருகை அதிகரித்து இருக்கிறது இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லையை தாண்டுகின்ற போதும் , இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லையை தாண்டுகின்ற போதும் கைது செய்யும் இரு நாட்டு கடற்படைகளும் கேரளா கஞ்சாவை பெரியளவில் பிடிப்பதாக தெரியவில்லை . இந்திய கடற்படை , இந்திய கடலோர ரோந்துப்படை , இலங்கை கடற்படை ஆகியவற்றின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டே கேரளா கஞ்சா வடக்கின் கரையை அடைகின்றது . 30 வருட யுத்தகாலத்தில் இல்லாத விடயம் , புலிகளின் கடற் போக்குவரத்தை முடிவுக்கு கொண்டுவந்த இலங்கை கடற்படையால் கேரளா கஞ்சாவின் வருகையை கட்டுப்படுத்த முடியவில்லை எனறால் கொஞ்சம் சித்திக்க வேண்டிய விடயம்தான்

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் வடக்கிற்கான பொருளாதர தடைகள் ஏற்பட்ட போது இந்தியாவில் இருந்தே பெருமளவான பொருட்கள் கடல் வழியாக கொண்டு வரப்பட்டன. மண்ணெண்ணெய், கோதுமை மா, பற்றரிகள், பெற்றோல் என பல பொருட்கள் கடல் ஊடாகவே பரிமாற்றப்பட்டன. கடல் வழியாக பலர் இந்தியாவுக்கு சென்று வருவதும், இடம்பெயர்ந்து செல்வது என்பதும் சர்வ சாதாரணமாக இடம்பெற்றது. ஆனால் அந்தக் காலப்பகுதியில் கூட வடகிழக்கு போதைப் பொருளை கஞ்சா கொண்டு வரப்படவில்லை. அதனை பயன்படுத்துபவர்களும் சொல்லக் கூடிய வகையில் வடக்கில் இருக்கவில்லை. இறுக்கமாகவும் கட்டுக்கோப்புடனும் இருந்த தமிழ் சமூகம் இன்று என்ன நிலையில் நிற்கின்றது என்ற கேள்வி எழுகிறது. தமிழ் மக்களின் கலாச்சார பூமியாக கருதப்படுகின்ற யாழ்பபாணத்தில் நாளாந்தம் கேரளா கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்படுவது என்பது தினமும் பத்திரிகைச் செய்திகளாகி விட்டன.

வடபகுதியில் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய கடற்பகுதிகளூடாக கேரளா கஞ்சா வந்து சேருகின்றது. அங்கிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அவை வியாபாரத்திற்காக கொண்டு செல்லப்படுகின்றது. கேரளா கஞ்ச பாவனை மற்றும் போதைவஸ்து பாவனைக என்பது இலங்கையில் தற்போது ஏற்பட்டதொன்றல்ல. நீண்ட காலமாக இதனுடன் தொடர்பு பட்ட குழுக்கள் தென்பகுதியில் இயங்கி வருகின்றன. ஆனால் வடகுதியில் தற்போது தான் கேரளா கஞ்சாவின் வருகை அதிகரித்து இருக்கின்றது. இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லையை தாண்டுகின்ற போதும், இந்திய மீனவர்கள் கடல் எல்லையை தாண்டுகின்ற போதும் கைது செய்யும் இரு நாட்டு கடற்படைகளும் கேரள கஞ்சாவை பெரியளவில் பிடிப்பதாக தெரியவில்லை. இந்திய கடலோர காவல்படை, இந்திய கடற்படை, இலங்கை கடற்படை ஆகியவற்றின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டே கேரளா கஞ்சா வடக்கின் கரையை அடைகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் 30 வருட யுத்தகாலத்தில் இல்லாத விடயம் , புலிகளின் கடற் போக்குவரத்தை முடிவுக்கு கொண்டுவந்த இலங்கை கடற்படையால் கேரளா கஞ்சாவின் வருகையை கட்டுப்படுத்த முடியவில்லை எனறால் கொஞ்சம் சித்திக்க வேண்டிய விடயம்தான்

இந்தியாவில் இருந்து வருகின்ற போது ஒரு கிலோ அளவில் கேரளா கஞ்சாவை பிரித்து எடுத்து நீர் புகாத பொலித்தீன் பைகளில் போட்டு பொதி செய்து படகுகளின் அடிப்பகுதியுடன் நீருக்குள் மறைத்துக் கொண்டு வருகிறார்கள். வடக்கின் கரையை குறித்த படகு அடைவதற்கு முன்னர் மோட்டார் சைக்கிளில் வலம் வரும் சில இளைஞர்கள் கடற்கரை மற்றும் அதனையண்டிய பகுதியின் பாதுகாப்பை கண்காணித்து தகவல் வழங்க கரையை அடையும் படகில் இருந்து கேரளா கஞ்சா பொதிகள் கரையை நோக்கி வீசப்படுகின்றன. அதன் பின் அந்த படகு சென்று விட அதனை பெறுவதற்காக தயாராக இருந்த குழு அதனை எடுத்து வாய்க்கால்கள், புதர்கள் என எவரும் இலகுவில் சந்தேகம் அடையாத மற்றும் செல்லாத பகுதிகளில் மறைத்து வைத்து விட்டு கட்டம் கட்டமாக எடுதது வாகனங்களில் வேறு பகுதிகளுக்கு அனுப்புகின்றனர். இதற்கு மோட்டார் சைக்கிள் தொடக்கம் சொகுசு வாகனங்கள் வரை பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

2009 மே மாதத்துடன் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் கேரளா கஞ்சாவின் வருகை என்பது வடக்கில் அதிகரித்துள்ளது. நாட்டின் ஜனாதிபதி தொடக்கம் சாதாரண பொதுமக்கள் வரை வடக்கில் போதைப்பொருள் பாவனை மற்றும் வருகை தொடர்பில் பேசும் அளவிற்கு இந்த நிலைமை காணப்படுகின்றது. உரிமைக்காக போராடிய இனம் இன்று ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்ட நிலையில் அந்த இனத்தின் இளைஞர்கள் மத்தியில் மீண்டும் போராடட எண்ணம் ஏற்படக்கூடாது என்பதற்கான ஒரு திசை திருப்பல் முயற்சியாகவே கேரளா கஞ்சா பாவனையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் திரைமறைவில் நடைபெறுவதாக பலரும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளுக்கு இந்திய கடற்படையும் துணை போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையில் வடக்கைப் பொறுத்தவரை ஏனைய மாகாணங்களை விட பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார் இது தவிர, முழத்திற்கு முழம் பொலிஸ், புலனாய்வுப் பிரிவு என வடபகுதியில் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் நிலை கொண்டுள்ள போதும் கேரளா கஞ்சாவை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பொலிஸாரால் அவ்வப்போது கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டாலும் நாளாந்தம் அது இந்தியாவில் இருந்து வந்து கொண்டே இருக்கிறது. போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் பேச்சுவார்த்தைகளை நடத்திய போதும் அதனை கட்டுப்படுத்த முடியாத நிலையே தொடர்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் இதன் பின்னணியில் பலமானதொரு சக்தி உள்ளது என்ற சந்தேகம் எல்லோர் மனங்களிலும் எழுகிறத. அது தவிர்க்க முடியாததும் கூட. இது தவிர வடக்கு இளைஞர்கள் மத்தியில் உள்ள சில பிரச்சினைகளும், வசதி வாய்ப்புக்களும் கேரளா கஞ்சா பாவனையை தூண்டுவதாக அமைகின்றன. அதிநவீனதொடர்பு சாதனங்களின் வருகை, வெளிநாடுகளில் இருந்து வீட்டில் இருக்கும் இளைஞர்களுக்கு வழங்கப்படும் அளவுக்கதிகமான பணம், அதிகரித்த வேலை இல்லாப்பிரச்சினை, வேலைக்கு போவதற்க்கான நாட்டமின்மை என்பன இளைஞர்களை தவறான வழியில் இட்டுச் செல்கின்றன. இவ்வாறான இளைஞர்களே கேரளா கஞ்சா விற்பனையிலும் பாவனையிலும் ஈடுபடுகின்றனர். வடக்கைப் பொறுத்தவரை போதைப் பொருள் பாவனை இளைஞர்கள் மத்தியில் பெருமளவில் இருப்பதாக தெரியவில்லை. மதுபாவனை என்பது அதிகமாக உள்ள போதும், தென்பகுதியுடன் ஒப்பிடுகின்ற போது கேரளா கஞ்சா பாவனை அதிகம் என கூறமுடியாது. இருப்பினும் வடக்கிற்கு வந்து ஏனைய பகுதிகளுக்கு அது பரிமாறப்படுகின்றது.

வட மாகாணத்தைப் பொறுததவரை கல்விப் பொது சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் யுத்தம் முடிவடைந்த 2009 தொடக்கம் 2015 வரை முறையே 55.71, 56.93, 54.26,, 59.99, 65.33, 64.19, 60.38 வீதமான மாணவர்களே சித்திபெறுகின்றனர்.


ஏனைய மாணவர்கள் பாடசாலை கல்வியை இடைநிறுததியவர்களாக வீடுகளிலேயே நிற்கின்றனர். அதேபோல் உயர்தரம் கற்கும் மாணவர்களில் கற்கும் மாணவர்களில் நாடாளவிய ரீதியில் சுமார் மூன்று இலட்சம் பேர் தோற்றுகின்ற போதும் 65 ஆயிரம் பேர் வரையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்து 28 ஆயிரம் வரையிலான மாணவர்களே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். ஏனைய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பு வசதி, தொழில்துறை என்பன வடக்கில் முறையாக இல்லாத நிலையே உள்ளது. இவ்வாறான மாணவர்களுக்கான தொழிற் பயிற்சிகள் அது சார்ந்த கல்லூரிகள், தொழிற் பயிற்சி அதிகார சபைகள் ஊடாக வழங்கப்படுகின்ற போதும் அதில் இளைஞர்கள் விரும்பிச் சென்று கற்கக் கூடிய நிலைமைகள் உருவாக்கப்படவில்லை. அரசாங்க வேலை வாயுப்பு மீது தேடலும் கூடுதலான எதிர் பார்ப்பும் அதிகரித்து போகின்றது .இதனால் பல இளைஞர்கள் சாதாரண தரம், உயர்தரத்தின் பின் என்ன செய்வது என்று தெரியாத நிலையிலேயே உள்ளனர். இதன் காரணமாக பல இளைஞர்கள் தவறான பழக்கங்களில் ஈடுபடக் கூடிய நிலமைகளும் தோன்றியுள்ளன. வடக்கில் கேரளா கஞ்சா கைப்பற்றப்படுவதற்கும், அதனை இளைஞர்கள் பயன்படுத்துவதற்கும் இந்த கல்விசார் பிரச்சினையும் ஒரு காரணம் என்பதை மறுத்து விட முடியாது.

வடபகுதியில் இடம்பெறுகின்ற பல வன்முறைகளுக்ம், விரும்பத் தகாத செயற்பாடுகளுக்கும் கேரளா கஞ்சாவின் பாவனையும் ஒரு காரணம் என்பதை எவரும் மறுதது விட முடியாது. இருப்பினும் கேரளா கஞ்சாவை கட்டுப்படுத்துவதற்கு நீதித்துறை மற்றும் பொலிஸார் மட்டும் நடவடிக்கை எடுப்பதால் வெற்றி பெறப்போவதில்லை. இளைஞர்களுக்கான முறையான கல்வி முறை, தொழில் வாய்ப்புக்கள் ஏறபடுத்திக் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமங்களும் அங்குள்ள கிராம மட்ட அமைப்புக்களம் தமது கிராமம் தொடர்பில் விழிப்படைய வேண்டும். போதை மூலம் ஒரு சமூகத்தை அழித்து இன்னொரு சமூகம் வாழலாம் என்பது தவறான சிந்தனையே. ஒவ்வொருவரும் தமது பிரதேசத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க முன்வருவதன் மூலமே கேரளா கஞ்சா பாவனையை கட்டுப்படுத்த முடியும் என்பதே உண்மை. ●

கே.வாசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஜோத்தமன் தங்கமயில்



# யாழ். மாணவர்களின் படுகொலையும், பின்னரான காட்சிகளும்!

இந்தக் கட்டுரை, வடக்கில் பதற்றமான சூழ்நிலை நீடிக்கும் நாட்களில் எழுதப்படுகின்றது. இன்றும் (ஒக்டோபர் 25, 2016) யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மற்றும் சுன்னாகம் கந்தரோடைப் பகுதிகளில் இலக்கத்தகடற்ற வாகனங்களில் வந்தவர்களினால் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் மற்றும் கூடிப் பேசிக்கொண்டிருந்தவர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

ஆனைக்கோட்டையில் இளைஞர்களைத் தாக்கியவர்கள், "தமிழர்கள் அனைவரும் ஒன்றிணையப் போகின்றீர்களா?" என்று கொச்சைத் தமிழில் எச்சரிக்கும் தொனியில் அச்சுறுத்தல் விடுத்ததாக தாக்குதலுக்கு உள்ளான இளைஞர்களில் ஒருவர் தெரிவிக்கின்றார். கந்தரோடைத் தாக்குதலானது, பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான விஜயகுமார் சுலக்சனின் வீட்டுக்கு அருகாமையில் கூடியிருந்த மாணவர்கள் மற்றும் உறவினர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த வாரம் (ஒக்டோபர் 20, 2016) நள்ளிரவொன்றில் யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் (விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன்) பொலிஸாரினால் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள். ஆரம்பத்தில் விபத்து என்று கூறிய பொலிஸார், மரண விசாரணைகளின் போது மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதை ஏற்றுக் கொண்டிருந்தனர். இதனையடுத்து, அன்றைய தினம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஐந்து பொலிஸாரையும் கைது செய்திருந்தனர்.

சில நாட்களின் பின்னர் (ஒக்டோபர் 23, 2016) சுன்னாகம் பகுதியில் வைத்து ஆயுதக் குழுவொன்றினால் சிவில் உடையிலிருந்த பொலிஸார் இருவர் தாக்குதலுக்கு உள்ளானார்கள். குறித்த தாக்குதலுக்கு தாமே பொறுப்பு என்று 'ஆவா குழு' என்கிற பெயரில் தமிழில் ஏகப்பட்ட பிழையுடன் துண்டுப்பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டிருந்தது. அந்தத் துண்டுப்பிரசுரத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைக்கு பழிவாங்குவதற்காகவே தாம் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியிருந்ததாகவும் கூறப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலை தமிழ் மக்களை பெரும் கவலைக்கும், பதற்றத்துக்கும் உள்ளாக்கியிருக்கின்றது. பொலிஸாரினால் எந்தவித பொறுப்புணர்வுமின்றி இரு உயிர்கள் மிலேச்சத்தனத்துடன் பறிக்கப்பட்டிருக்கின்றது என்கிற விடயமும் அச்சுறுத்தலான சூழ்நிலையொன்றின் நீட்சிக்கு காரணமானது. இலங்கையில் தமிழர்கள் அரச இயந்திரங்களினால் படுகொலை செய்யப்படுவது என்பது அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக சர்வ சாதாரணமாக இடம்பெற்று வந்திருக்கின்றது. அந்தப் படுகொலைகளுக்கான நீதியைக் கோரி தமிழ் மக்கள் உள்ளூர் நீதிமன்றங்களிலிருந்து சர்வதேசத்தின் கதவுகள் வரை பலமாக தட்டி ஓய்ந்துவிட்டார்கள். அவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தப் படுகொலைகளும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

இந்த இடத்தில், மிகவும் பொறுப்போடும் திட்டமிட்ட ரீதியிலும் செயற்பட வேண்டும் என்கிற விடயத்தினை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டிருந்தனர். தமது சகபாடிகளுக்கான படுகொலைக்கான நீதியை சட்ட வரைமுறைகளிலிருந்து ஆரம்பித்து இறுதி செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருந்தனர். படுகொலைகளை எதிர்த்து அவர்கள் நடத்திய கவனயீர்ப்பு போராட்டமும் மிக அமைதியான முறையில் நடந்து முடிந்தது. "போருக்குப் பிந்திய சூழலில் இடம்பெற்றுள்ள இக்கொலைகள் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தையும் முழுத் தமிழ் சமூகத்தையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இக்கொலைகள் தொடர்பான விசாரணைகள் முழுமையாக நடைபெற்று சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவது இயல்புநிலை மீளுருவாக்கத்திற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும்." என்கிற விடயத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கவனயீர்ப்பு போராட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட மகஜரின் ஒரு பகுதி வலியுறுத்துகின்றது. அத்தோடு, "மனித உரிமை ஆணைக்குழு, உள்ளூர், சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை இவ்வழக்கின் நீதி விசாரணையை முழுமையாக அவதானிக்க வேண்டும்." என்றும், "இறந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு முழுமையாக அரசால் வழங்கப்படும் இழப்பீடும், அக்குடும்பத்தின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும்." என்றும் கோரியிருக்கின்றது.

வடக்கு— கிழக்கிலுள்ள தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பெருமளவு உணர்ச்சிவசப்பட்டாலும், இந்தப் படுகொலைகளை முன்னிறுத்தி உசுப்பேற்றல்கள் நிகழ்ந்து மேலதிகமாக உயிரிழப்புக்கள் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். சில தரப்புக்களினால் மக்களை நோக்கி உசுப்பேற்றல்கள் செய்யப்பட்டாலும் மிகக் கவனமாக புறக்கணித்துவிட்டு யதார்த்த நடைமுறைகளின் மீது அக்கறை கொண்டு விடயங்களைக் கையாண்டார்கள். நீண்ட போராட்ட வரலாற்றில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை பறிகொடுத்துவிட்டவர்கள் என்கிற ரீதியில் ஒவ்வொரு உயிரின் பெறுமதியையும், அது இழக்கப்படுகின்ற போது சமூகத்தில் ஏற்படுகின்ற தாக்கத்தினையும் எதிர்கொண்டு வந்திருக்கின்றார்கள். ஒரு ஆயுதப் போராட்டத்தினை மிகவும் அர்ப்பணிப்பாக முன்னெடுத்த சமூகமென்கிற ரீதியில், போருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்திய சூழ்நிலைகள் என்பது எவ்வளவு தூரம் கடுமையானது என்பதை நடைமுறையில் சந்தித்து வந்திருக்கின்றார்கள். அப்படியான சூழ்நிலையில் பெரும் உணர்ச்சி நிலைகளைத் தாண்டி சிந்திக்க வேண்டிய பொறுப்புணர்வொன்றும், தாய்மார்களுக்கே உண்டான பிள்ளைகளைப் பாதுகாக்கும் உணர்வும் கோலொச்சி நிற்கின்றது. அதனை, புரிந்து கொண்டு விடயங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டிய தேவையொன்றின் நீட்சியை எல்லாத் தரப்புக்களும் புரிந்து கொள்ள வேண்டிய தருணம் இது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைகளை திட்டமிட்ட 'இன அழிப்பாக' முன்னிறுத்திக் கொண்டு விடயங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கைகளும் சமூக ஊடகங்களில் பரவலாக எழுந்தது. ஆனாலும், ஆரம்ப கட்ட நீதியை உறுதி செய்வதற்கு, சில அடையாளப்படுத்தல்கள் பிரதானப்படுத்தப்படாமல், அவை துணைக்கூறுகள் ஆக்கப்பட வேண்டிய தேவையொன்று அரசியல் சிந்தைகள் சார்ந்து முதன்மை பெற்றது. அதுதான், படுகொலை விசாரணைகள் முறையாக வழியின் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதனை முதலில் உறுதி செய்ய வேண்டும் என்கிற விடயம் பிரதான இடம் வகிக்கின்றது. அதனையே, பெருமளவு மக்களும் வலியுறுத்தியிருந்தனர். அதன்பின்னரே, இன அழிப்பின் வடிவங்களில் அந்தப் படுகொலைகளை எவ்வாறு ஆதாரபூர்வமாக உள்வாங்கிக் கொண்டு சர்வதேச ரீதியில் முன்வைக்க வேண்டும் என்கிற விடயமும் வருகின்றது. பல நேரங்களில் வரிசைக்கிரமங்களின்றி விடயங்களைக் கண்டு, பல விடயங்களை தமிழ் மக்கள் கைநழுவ விட்டிருக்கின்றார்கள். ஆக, சில நேரங்களில் நிதானமும், ஒருவிதமான கிரமமும் அவசியமாகின்றது. அந்த விடயத்தினை உறுதி செய்ய வேண்டும். அது, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலை விடயத்திலும் நிகழ்ந்திருக்கின்றது.

சரி இந்த இடத்தில் இன்னொரு விடயத்தை சற்று கவனிக்கலாம். ஆயுதப் போராட்ட காலம் நீடித்த முப்பதாண்டு காலத்திலும், அது முடிவுக்கு வந்துவிட்ட கடந்த ஏழரை ஆண்டுகளிலும் வடக்கு—கிழக்கு தென்னிலங்கை அரச இயந்திரத்தினால் எவ்வாறு கையாளப்பட்டது என்கிற விடயம். ஏனெனில், நாம் விடயமொன்றில் மாற்றமோ— தீர்வோ ஒரு சில நாட்களில் நிகழ்ந்துவிடும் என்று நம்புகின்றோம். அல்லது, அப்படி நினைத்து செயற்பட ஆரம்பிக்கின்றோம். ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த போதும், அது முடிந்துவிட்ட போதும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் குறிவைக்கப்பட்டு படுகொலைகளும், கடத்தல்களும், தாக்குதல்களும், வன்முறைகளும் நீடித்தன. அதன் வீரியம் பல நேரங்களில் அபரிமிதமாக எழுந்தும், சில தருணங்களில் குறைந்தும் இருந்தனவே அன்றி, அவை முற்றாக நிறுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனெனில், இந்த விடயங்களுக்குப் பின்னால் அரச இயந்திரத்தின் பிரதான கூறுகளும்,துணைக்கூறுகளும் சம்பந்தப்பட்டிருந்தன. அவை, அமைதியாக இருக்குமாறு கோரப்பட்ட தருணங்களில், மிகவும் கண்களை அகலத்திறந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தன. தங்களுக்கான தருணம் வரும் போது, கடந்த காலத்தில் பார்த்து குறிப்பெடுத்துக் கொண்ட விடயங்கள் தொடர்பில் அக்கறை செலுத்தி வேட்டையாடின. அப்படித்தான், நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பலிவாங்கப்பட்டார்கள். காணாமற்போனார்கள்.

அப்படியான தருணமொன்றே, 2015 ஜனவரிக்கு பின்னர் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரான இன்றை நாட்களில் இடம்பெறுகின்றன. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தோடு ஒப்பிடும்போது,படுகொலைகளும், கடத்தல்களும், தாக்குதல்களும் குறைந்திருக்கின்றதே அன்றி முற்றாக நீங்கிவிடவில்லை. ஏனெனில், ஆட்சி மாற்றம் என்பது அரசாங்கமொன்றின் மாற்றமேயன்றி, அரச இயந்திரத்தின் ஒட்டுமொத்தமான மாற்றம் இல்லை. அந்த இயந்திரத்தின்பிரதானகூறுகளான, தேசிய பாதுகாப்புத் தரப்பும், அதன் துணைப்படைகளும் தன்னுடைய நிலையிலிருந்து எந்தவொரு தருணத்திலும் கீழிறங்குவதில்லை. அதற்கு அனுமதிக்கப்படுவதுமில்லை. ஆக, அவர்களின் நிகழ்ச்சி நிரலில் எந்தவித மாற்றமும் ஏற்படாது. ஆனால், திட்டங்களை புதிய வடிவங்களில் அரங்கேற்றிக் கொண்டிருப்பார்கள். அப்படியான சூழலொன்றே தற்போது வடக்கு— கிழக்கில் நீடிக்கின்றது. அது, ஜனநாயக ரீதியாக— புத்திசாதுரியமாக தங்களுடைய அரசியலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்கிற தமிழ் மக்களின் நிலைப்பாட்டினை அனுமதிக்கானது. ஏனெனில், தமிழ் மக்களின் நிதானமாக— சிந்தனையேற்றமுள்ள அரசியல் என்பது தென்னிலங்கைக்கு அச்சுறுத்தலானது என்று அரச இயந்திரத்தின் கூறுகள் அனைத்தும் நம்புகின்றன. அப்படிப்பட்ட நிலையில்தான், யாழ்பாணத்தில் அதிகரித்திருக்கின்ற போதைப்பொருட் கடத்தல் மற்றும் பாவனையைக்கான ஊக்கப்படுத்தலையும், ரவுடிக்கும்பல்களின் பெருக்கத்தையும் கொள்ள முடியும்.

அப்படியான, நிலையில் பதற்றமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ் மக்கள் வீழ்ந்து மீண்டும் பாரிய இழப்புக்களை சந்தித்துவிட முடியாது. ஆக, எவ்வளவு திட்டமிட்ட சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றை பொறுமையாக— கவனமாக கடக்க வேண்டியதே அவசியம். அதுதான், புத்திசாதுரியமானதுமாகும். இப்போது, ஆரம்பத்திலிலுள்ள சம்பவங்களை மீண்டும் வாசியுங்கள். ●


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகள் பெரும்பாலானவற்றின் கூட்டமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை திகழ்கின்றது. உலக வல்லரசு நாடுகளினதும் அதன் ஆதரவு நாடுகளிடையேயும் காணப்படும் போட்டித் தன்மையால் இன்று ஐ.நா. வின் அதிகாரங்கள் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளன. கடந்த அக்டோபர் 24 ஆம் திகதியுடன் ஐ.நா. 71 வயதை எட்டியிருக்கின்றது. 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் திகதி இரண்டாம் உலகப்போர் இடம்பெற்று நிறைவடைந்த தறுவாயில் ஏற்பட்ட மனித மற்றும் உடைமை சேதங்களுக்குப் பின்னர் ஐ.நா. வின் தோற்றம் ஆரம்பமானது. உலக நாடுகளின் பொதுவான அபிப்பிராயத்தின் படியும் மூன்றாம் உலகப்போர் ஏற்படாமலிருக்கவும் சமாதானத்தை கட்டியெழுப்பவும் புதிய ஒன்றியத்தின் தேவை



# 71 வருடங்களில் ஐ.நா. சாதித்தது என்ன?


கடந்த 71 வருடங்களுக்கு முன்பே ஏற்பட்டிருந்தது.

இதன் விளைவாகவே உலகத்தை சமாதானத்தின் உறைவிடமாகவும், நிலையான அபிவிருத்தி தளமாகவும் மாற்றியமைக்கக்கூடிய வகையில் ஐ.நா. தோற்றம் பெற்றது. இந்த 71 வருட பயணத்தில் மூன்றாம் உலகப் போர் சாத்தியமற்றதாகவே இருந்திருக்கின்றது. ஆனால் உலகளவில் அதிகமான வன்முறைகள் நடைபெற்று முடிந்ததோடு, இன்னும் பல நீடித்து கொண்டிருக்கின்றன. சிரியா — ஈராக் யுத்தம், இஸ்ரேல் — பாலஸ்தீன பிணக்கு, ருவாண்டா இனப்படுகொலை, அமெரிக்க — ரஷ்ய மோதல், பாகிஸ்தான் — இந்திய எல்லைப் பிரச்சினை, தென்சீனக்கடல் விவகாரம், வட கொரிய அணுவாயுத பரிசோதனை என முற்றுப்பெறாத பிரச்சினைகள் அதிகமாகவே மூன்றாம் உலக மகா யுத்தத்துக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் சாத்தியக் கூறுகளை தோற்றுவித்துள்ளன.

சமீபத்தில் ஒரு பில்லியன் மக்கள் நிலையான அதிவறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் பெரும்பாலானோர் உண்பதற்கே உணவில்லாமல் இருக்கின்றனர். இலகுவாக குணப்படுத்தக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய நோய்களுடன் மில்லியன் கணக்கான மக்கள் வாழ்கின்றனர். மில்லியன்களுக்கும் அதிகமான மக்கள் குடிநீரில்லாமலும் போஷாக்கு வசதியில்லாமலும் வாழ்ந்து வருகின்றனர். அபிவிருத்தியடைந்த இந்த உலகத்திலும் பெரும்பாலான சிறுவர்கள் கல்வி கற்பதற்கான வசதியற்றவர்களாக இருக்கின்றனர். இந்த இடைவெளியினை இன்னும் அதிகரிப்பதாக வசதியான மற்றும் வறுமையான நாடுகள் இருக்கின்றன.

இந்த அவசியமான விடயங்கள், ஐ.நா. தனது இலக்குகளில் தோல்வி அடைந்திருப்பதையே சுட்டிக்காட்டுகிறது. ஐ.நா. மற்றும் அதன் பல்வேறு முகவரமைப்புகள் உலகம் முழுவதும் பரந்துபட்டு காணப்படுகின்றன. அதிகமான நாடுகளில் ஐ.நா. வின் சுகாதாரம் மற்றும் கல்விப்பிரிவு கிளைகளால் சில நோய்களை தடுப்பதில் பரந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதிக நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் நிலவிய கட்டுப்பாடற்ற வன்முறைகள் மற்றும் யுத்தங்களை தடுப்பதற்கு சமாதானத் தூதுவராகவும் ஐ.நா. செயற்பட்டிருக்கிறது. இறுதியாக கொலம்பிய அரசுக்கும் பார்க் போராளிகளுக்குமிடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு மத்தியஸ்தம் வகித்திருந்தமையை குறிப்பிடலாம்.

ஐ.நா. வின் மிகப்பெரிய உதவி நிகழ்ச்சித் திட்டமாக 'நிலையான அபிவிருத்தி இலக்குகள்' காணப்படுகின்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் சுகாதாரம், கல்வி,



சமாதானம், காலநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு, பட்டினி, பால் சமத்துவம், சுத்தமான நீர், சுத்தமான சக்தி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி, சட்டப்பூர்வ நகரங்கள், கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் வளங்கள், நிலவாழ் உயிரினங்கள் மற்றும் வளங்கள் போன்ற 17 இலக்குகள் உள்ளடங்கியுள்ளன. இவற்றை சர்வதேச ஒத்துழைப்புடன் 2030 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்ற அங்கத்துவ நாடுகள் வாக்குறுதி அளித்துள்ளன. இது மிகப்பாரிய சவாலாக ஐ.நா. வுக்கும் அடுத்து வரவுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகமான முன்னாள் போர்த்துக்கல் பிரதமர் அன்டோனியோ குட்டரெஸ்ஸுக்கும் இருக்கிறது.

ஐ.நா. பொதுச் செயலருக்கு கொடுக்கப்பட்ட வேலை அவ்வளவு இலகுவானதல்லவென ஐ.நா. வின் முதல் பொதுச் செயலரான நோர்வேயைச் சேர்ந்த ட்ரிக்வ் லீ தெரிவித்துள்ளார். அந்தளவில் உலகில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளில் ஒன்றாக இந்த பொதுச் செயலர் பதவி இருக்கின்றது. இருப்பினும் இதுவரையிலும் ஒரு பெண் பொதுச் செயலரை தேர்ந்தெடுப்பதில் ஐ.நா. தோல்வி கண்டிருக்கின்றது. ஆனால் புதிய செயலர் சவால்களை எதிர்கொள்ளுகின்ற தகுதியான நிலையிலேயே இருக்கின்றார். குட்டரெஸ் ஐ.நா. வின் அகதிகள் முகவரமைப்பில் 10 வருடகாலமாக தலைவராக பதவி வகித்த அனுபவமுடையவர். எதிர்வரும் 2017, ஜனவரி முதலாம் திகதியுடன் இவருடைய பதவிக்காலம் ஆரம்பமாகிறது.

இவ்வருடம் மிகவும் சவாலான ஆண்டாக காணப்படும். 71 (வருடம்) மற்றும் 17 (நிலையான அபிவிருத்தி இலக்குகள்) என்பன சவாலான விடயங்களாக இருக்கலாம். இதுவே இதற்கு முன்னரும் பதவி வகித்திருந்த பொதுச் செயலர்களுக்கும் சவாலாக இருந்திருந்தது. வன்முறைகளுக்கான ஐ.நா. வின் தீர்வு தொடர்பில், குட்டரெஸ் மற்றொரு பாரிய சவாலை எதிர்நோக்கவுள்ளார். சிரியாவில் இடம் பெற்றுவரும் மிகக் கொடூரமான நிகழ்வுகளை உலகம் அவதானித்து வருகிறது. இதே போன்றதொரு நிலைமையே யேமன், ஆப்கானிஸ்தான், லிபியா, தென்சூடான், சோமாலியாவிலும் காணப்படுகின்றது. நாம் வாழ்வதென்றாலும் சரி, பொதுமக்கள் வாழ்வதென்றாலும் சரி குறைந்தது உலகில் பாதுகாப்பையாவது விஸ்தரிக்க வேண்டுமென குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

எனவே இவருடைய பதவிக் காலத்திலாவது சிரிய போர் நிறுத்தம் சாத்தியமாகுமா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம். இவ்வாறான யுத்த நிலைமைகளால் புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகள் நெருக்கடி நிலைமைகளும் ஏற்பட்டுள்ளன. மற்றொரு முக்கிய சவாலாக காலநிலை மாற்றம் காணப்படுகின்றது. ஐ.நா.வின் காலநிலை மாற்றம் தொடர்பான உடன்படிக்கையானது ஜனவரி முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டாலும் சகல நாடுகளும் நச்சு வெளியீடுகளை குறைப்பது இலகுவான விடயமல்ல. இவ்விடயங்களில் ஐ.நா. எதிர்வரும் காலங்களில் நெருக்கடிகளை எதிர்நோக்கலாம். இவற்றை விடவும் ஐ.நா. வின் அதிகாரம் தொடர்பில் நீண்டகாலமாக சந்தேகம் நிலவி வருகின்றது. சில பலம் வாய்ந்த நாடுகளின் கைகளில் உலகம் தங்கியிருப்பதுவும் பாதுகாப்புச் சபையின் குறுக்குவழியும் இந்நிலையை தோற்றுவித்துள்ளது.


எனவே ஐ.நா.வின் கட்டமைப்புகள் மற்றும் நுட்பம் என்பவற்றால் மாத்திரம் சமாதானத்தால் உலகை மாற்றுவதற்கு வழியேற்படுத்தப்பட வேண்டும். 5 நிரந்தர நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டோ அதிகாரத்தை தவிர்த்து சகல நாடுகளுக்கும் சமமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும். ஆனால் இவற்றை நிறைவேற்றுவது இலகுவான விடயமல்ல. அவ்வாறு ஐ.நா.வால் சுயாதீனமாக இயங்க முடிகின்ற பட்சத்தில் உலக அரங்கில் தாக்கம் செலுத்துகின்ற ஸ்தாபனமாக தோற்றம் பெற முடியும். தற்போதைய ஐ.நா.வின் செயற்பாடுகள் பேச்சளவில் இருக்கின்றனவே தவிர, செயற்பாட்டில் அதிகம் குறைகள் இருக்கின்றன. பொருளாதார அபிவிருத்தி, மனித உரிமைகள், சமாதான நடவடிக்கைகளில் ஐ.நா. விட்டுக்கொடுப்புடனேயே செயற்பட்டு வருகிறது. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள 5 நிரந்தர உறுப்பு நாடுகளும் இரு பிரிவுகளாக காணப்படுகின்றது. இதனால் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் இந்நாடுகள் பக்கச் சார்பாகவே செயற்படுகின்றன. இந்நாடுகளை மீறி (சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரித்தானியா, அமெரிக்கா) ஐநா.வால் சுயாதீனமாக செயற்படக்கூடிய சூழல் இன்னும் உருவாகவில்லை.

இந்நாடுகளை ஒரு பாதையில் வழிநடத்தவும் ஐ.நா.வுக்கு முடியவில்லை. இதனால் ஐ.நா. என்ற உலக நிறுவனம் 5 நாடுகளின் கட்டுப்பாட்டில் இருப்பதான நிலைமையே வெளிப்படுகின்றது. எனவே இவற்றை தவிர்த்து சுயமாக இயங்கு திறனை ஐ.நா. கொண்டுவருவதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. தற்போது 71 வயதை நெருங்கிவிட்ட ஐ.நா.வால் இன்னும் கடக்கப் போகும் நாட்களில் உலக சமாதானத்துக்கான நிலையான அத்திவாரத்தை இடமுடியுமாவென பொறுத்திருந்து பார்ப்போம். ●

**க. பிரசன்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














## மீண்டும் தலைவராக அஜித் சபாரட்ணம் தெரிவு : ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெறும் ஒரே ஒரு தமிழ் அமைப்பாக கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம்:

கடந்த ஒரு மாத காலமாகவே கனடியத் தமிழ வர்த்தகர்களிடையே அதிகம் பேசப்படும் விடயமாகவும், ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெறும் ஒரே ஒரு ஜனநாயக அமைப்பாகவும் வர்த்தக சம்மேளன தேர்தல் விளங்குகின்றது.

கடந்த சனிக்கிழமையன்று கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்திர பொதுக்கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. புதிய நிர்வாக சபையினர் தெரிவு செய்ய காலை 8:30 - 12.30வரை தேர்தல் நடந்தது. இதில் 200றக்கு மேற்பட்ட தமிழ் வர்த்தகர்கள் பங்குகொண்டு வாக்களித்தனர்.

தலைவர் பதவிக்கு அஜித் சபாரட்ணம் டிலானி குணராஜா, சாந்தா பஞ்சலிங்கம் ஆகியோரும், உபதலைவர் Finance பதவிக்கு முகுந்தன் மகாலிங்கம், சின்னத்துரை மேகேந்திரநாதன், ஆகியோர் போட்டியிட்டனர்.

இதில் மீண்டும் அஜித் சபாரட்ணம் அவர்கள் தலைவராகவும், முகுந்தன் மகாலிங்கம் அவர்கள் உபதலைவர் Finance பதவிக்கும் தெரிவானார்கள்.

ஏனைய பதவிகளுக்கு போட்டியின்றி தெரிவானவர்கள் முறையே Executive VP – Ravi Kanagasabey, VP Internal Affairs – Shalini Sathya , VP Membership – Kubes Navaratnam , VP Committee Relations – Gnane Gnanendran, VP Finance – Moon Mahalingam ,Director – Roshan Thavaratnam , Director – Jey Jeyakanthan ,Director -Vilosan Sivatharman

நடைபெற்ற தேரதலில் தலைமைத்துவ போட்டியில் மூன்று பேர் களமிறங்கியும் அதிக வாக்குகளை பெற்று அஜித் சபாரட்ணம் அவர்கள் வெற்றிபெற்றிருந்தார். அவருக்கு எதிராக மற்றைய இரு வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் வர்த்தக சம்மெளனத்தில் அரைவாசி உறுப்பினர்களுக்கு மேல் தற்போதையை தலைவர் அஜித் சபாரட்ணம் அவர்களுக்கு எதிரான அல்லது அவர் மீது அதிருப்தி கொண்டவர்களாக உள்ளார்கள் என்பதையே காட்டுகின்றது

ஆனாலும் அதன் அதிர்ப்தியானவர்க்களில் பலர் கடந்த வருடம் அஜித் சப்பரட்ணம் அவர்களுக்கு சார்பாக வாக்கு அளித்திருந்தார்கள்.

இந்த நிலைமாற்றம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். அவர்களின் நிலை மாற்றத்துக்கான காரணிகள் ஆய்வு செய்வதன் மூலம், அஜித் சபாரட்ணம் அவர்கள் தன்னை சுய விமர்சனத்துக்கு உட்படுத்துவதன் மூலம் இனி வரும் காலங்களில் வர்த்தக சம்மேளனம் சில நல்ல முயற்சிகளை மேற்கொள்வதற்றகு தூண்டுகோலாய் அமையும்.

அதிகளவிலான புதிய உறுப்பினர்களின் வரவும், புதிய நிர்வாக சபைக்கான விறுவிறுப்பான போட்டியும் கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பை அளித்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாய் அமைந்திருந்தது.

கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அஜித் சபாரட்ணம் அவர்களையும், ஏனைய நிர்வாகிகளையும் இகுருவி பெருமையுடன் வாழ்த்துகின்றது. அதே வேளை கடந்த வெள்ளி விழாவில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விமர்சனங்களையும், எதிர்வினைகளையும் கருத்துக்களையும் புதிய நிர்வாக குழு மீள் ஆய்வு செய்ய வேண்டும்







## IBC தமிழ் தொலைக்காட்சி கனேடிய வருகை

கடந்த வெள்ளிக்கிழமை 29 அக்டோபர் 2016 அன்று ATN நிறுவனம் ஐக்கிய ராச்சியத்தை மையமாக கொண்ட மிபிசி தமிழ் தொலைக்காட்சியை கனடாவில் ஆரபித்துவைத்தது. இது ATN/IBC தமிழ் என Bell Channel# 2405 ஊடாக கனடிய தமிழரை சென்றடைகின்றது.

ATN தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைமை காரியாலயத்தில் நடைபெற்ற விழாவில் ATN அதிபர் திரு. சந்திரசேகர்,லிபரா நிறுவன அதிபர் திரு. பாஸ்கரன் கந்தையா மற்றும் IBC தமிழ் அதிபர் நிராஜ் டேவிட் இணைந்து இந்த அறிவிப்பை செய்தனர் வர்த்தக பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் என பலர் கலந்து கொண்டு IBC தமிழிற்கு வாழ்த்து கூறினார்கள்

IBC தமிழ் எமது சுய தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட ஊடகம் அல்ல எமது இனம் மொழி கலாச்சாரம் நாங்கள் அடையவேண்டிய இலக்கு இவற்றை மையமாக வைத்தே இந்த ஊடகம் உங்களோடு கனடாவில் ATN ஊடக நிறுவனத்தோடு இணைகின்றது என்று LEBARA நிறுவன தலைவர் தெரிவித்தார் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மந்திரத் தறி (The Enchanted Loom)

தனது 30ஆவது ஆண்டில் காலடி வைக்கும் கஹூட்ஸ் தியேட்டர் (Cahoots Theatre), ஃபக்டறி தியேட்டருடன் (Factory Theatre) இணைந்து 'மந்திரத் தறி" (The Enchanted Loom) நாடகத்தின் உலகளாவிய அரங்கேற்றத்தை தயாரித்து அளிக்கின்றது. நரம்பியல் நிபுணரான சுவேந்திரினி லேனாவின் (Suvendrini Lena) முதல் நாடக முயற்சியான இந்தப் பிரதியை கஹூட்ஸ் தியேட்டரின் கலைத்திறன் இயக்குநரும் விருதுபெற்ற பல் ஒழுக்கு அரங்கக் கலைஞருமான மாஜரி சான் (Marjorie Chan) நெறியாள்கை செய்கின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தங்கனின் மீதும் அவனின் குடும்பத்தின் மீதும் பல வடுக்களை விட்டுச் சென்றுள்ளது. யுத்த காலத்தில் அவன் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதால் தோன்றிய வலிப்பு நோயும், போருக்கு தம் மூத்தமகனை பலிகொடுத்த வேதனையும் இந்த வடுக்களில் முக்கியமானவை. இலங்கையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தின் இறுதி நாட்களை ரொறன்ரோவில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு, ஒரு மூளை அறுவைச்சிகிச்சை மூலம் தங்கனை குணப்படுத்தக்கூடிய சாத்தியம் இருப்பதாக கூறப்படுகின்றது. மருத்துவம் பாதி மாயை பாதியாய் அமைந்து இழப்புக்களையும் நம்பிக்கைகளையும் ஒருசேரப் பேசும் இந்த கவித்துவமான நாடகம், குடும்பத்தின் மீதும் சுதந்திரத்தின் மீதும் ஒருவர் செலுத்தும் நிபந்தனையற்ற அன்பின் வலிகளையும் ஆனந்தங்களையும் வேதனையின் விளிம்பில் நின்று பேசுகின்றது.

விருதுபெற்ற நடிகரும் எழுத்தாளரும் பல்வகைமைசார் தேசிய பேச்சாளருமான காவா ஆதா, பீற்றர் பெய்லி, சாம் கலிலியே, அலூனா தியேட்டரின் டோறா விருதுபெற்ற கலைத்திறன் இயக்குநர் பீற்ரிஸ் பைசானோ, பாடகர் சொறானா சாதிக், ஆஷா விஜயசிங்கம் ஆகியோர் பாத்திரங்களுக்கு உயிரூட்டுகின்றனர்.

1970ல் நிறுவப்பட்ட ஃபக்டறி தியேட்டர், கனேடிய நாடகங்களை மட்டுமே தயாரிப்பதற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட முதலாவது அரங்க நிறுவனம். 46 வருடங்களின் பின்னர், பல்வேறு பின்னணிகளைக்கொண்ட கனேடிய நாடகாசிரியர்களின் 300க்கும் மேற்பட்ட நாடகங்களை மேடேயேற்றியும், எண்ணிலடங்காத அரங்க ஆற்றுகையாளர்களை உருவாக்கியும் கனேடிய கதையாடல்களை உருவாக்குவதிலும் பகிர்வதிலும் முன்னணியில் திகழ்கின்றது. ●

**எழுத்து: சுவேந்திரினி லேனா (Suvendrini Lena)**

**இயக்கம்: மாஜரி சான் (Marjorie Chan)**

**நவம்பர் 5-27, 2016**

**முதற்காட்சி:** வியாழன் 10 நவம்பர் 2016 மாலை 8 மணி
(தொடர் காட்சிகள் நவம்பர் 27, 2016 வரை)

**காட்சி நேரங்கள்:** செவ்வாய் முதல் சனி வரை மாலை 8மணி,
ஞாயிறு பிற்பகல் 2 மணி
(ஞாயிறு முற்காட்சி நேரம் மாலை 7 மணி)

**இடம் :** ஃபக்டறி ஸ்ரூடியோ தியேட்டர் 125 பாத்தேஸ்ற் வீதி (125 Bathurst Street)

**நுழைவுச் சீட்டுகளை பெற்றுக்கொள்ள:**
நேரில் - 125 பாத்தேஸ்ற் வீதி,
**இணையத்தில் — factorytheatre.ca,**
**தொலைபேசியில் — 416.504.9971**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'media launch of Next Productions and the trailer release of two upcoming movies, 'Broken Dreams' and 'Kandam'. @ York Cinemas, 115 York Blvd, Richmond Hill, ON, - Oct14, 2016 .





**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்கெடுப்பில் "தமிழ் மரபுத் திங்கள் கனேடிய பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது "**

எம் அனைவரினதும் ஒருங்கிணைந்த ஒருமுகப்பட்ட முயற்சிக்கு இது சான்று' என பாராளமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்தார். ஜனவரி மாதம் இனி கனடாவில் தமிழ் மரபு மாதம் எனவும் அழைக்கப்படும்! கனடாவின் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சியினரும் இணைந்து Tamil Heritage Month; M-24 என அழைக்கப்பட்ட இந்தப் பிரேரனையை ஆதரித்திருக்கிறார்கள். ஒக்டோபர் 5 அன்று நாடாளுமன்றத்தில் சமுகமளித்திருந்த 283 உறுப்பினர்களும் M-24இனை ஆதரித்து வாக்களித்தார்கள்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம்:

# பழிவாங்கப்படும் ஆப்பிரிக்கா

எந்த அமைப்பும் அதன் பணியால் மட்டும் மதிப்பிடப்படுவதில்லை. அதன் உருவாக்கம் ஏன்? எப்போது நிகழ்ந்தது? என்பதும் அதை மதிப்பிடுவதில் முக்கியமானது. குறிப்பாகச் சர்வதேச அமைப்புகளை, அவை உருவாகுவதற்கு அடிப்படையான அரசியல் காரணிகளின் அடிப்படையிலேயே மதிப்பிடலாம். எந்த அமைப்பையும் அந்தக் கண்ணோட்டத்துடன் நோக்குவது தகும். ஓர் அமைப்பு செய்வது என்ன? செய்யாமல் விடுவது என்ன? என்பதை அவ்வமைப்பின் ஆணை தீர்மானிப்பது குறைவு. மாறாக அவ்வமைப்பை நடாத்துகின்ற அரசியலும் அவ்வரசியலில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல் கட்டமைப்புகளும் அது சார் சூழலுமே தீர்மானிக்கின்றன. இதற்கு எந்த அமைப்பும் விலக்கல்ல.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கிய ரோம் பட்டய உறுப்புரிமையிலிருந்து கடந்த வாரம் தென்னாபிரிக்கா விலகத் தீர்மானித்தமை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் குறித்துப் புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது. தென்னாபிரிக்காவின் இம்முடிவு இந்நீதிமன்றத்தின் மீதான ஆபிரிக்கக் கண்டத்தின் வெளிப்பாடாகக் கருதக்கூடியது. சில வாரங்களுக்கு முன் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற அங்கத்துவத்திலிருந்து புருண்டி வெளியேறியது. அதைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா இம்முடிவை எடுத்துள்ளதுடன் கென்யாவும் வெளியேறும் முடிவை நோக்கி நகர்வதாக அறிவித்துள்ளது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் உருவான காலந்தொட்டுப் பல்வேறு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் தொடர்ச்சியாக இந்நீதிமன்றத்தால் குறிவைக்கப்பட்டுள்ளனர். ஆபிரிக்கத் தலைவர்களுக்கான ஒரு பொறியாகச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் பயன்படுகிறதா என்ற கேள்வியை இது நீண்டகாலமாக எழுப்பியது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற வரலாறு சிறிது நீளமானது. சர்வதேசப் பிரச்சினைகளுக்குச் சட்டரீதியான தீர்வைப் பெறுவது சவாலாகவே இருந்தது. உலகில் அனைவருக்கும் பொதுவான சட்டங்களோ நீதிமன்றங்களோ இல்லாதபோது, முதலாம் உலக யுத்தம் நடைபெற்றது. யுத்தத்தின் முடிவில் பரிஸ் அமைதி மாநாட்டில் 'சர்வதேசத் தீர்ப்பாயத்தின்' தேவை குறித்து முதலில் பேசப்பட்டது. அவ்வாறானதொரு நீதிமன்றத்தை உருவாக்கும் தேவை தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதும் அது இயலவில்லை.

இரண்டாம் உலகப் போரின் நிறைவில் அப்போரில் நிகழ்ந்த குற்றங்களை விசாரிக்க உருவான நியூரெம்பேர்க், டோக்கியோத் தீர்ப்பாயங்கள் போரில் தோற்ற ஜேர்மனிய, ஜப்பானிய இராணுவ அதிகாரிகளையும் அரசாங்க அலுவலர்களையும் தண்டித்தன. இது, வென்றவர்கள் தோற்றவர்களைத் தண்டிக்க உருவான தீர்ப்பாயமாக இருந்ததேயன்றி இரண்டாம் உலகப் போர்க் குற்றங்களை விசாரிக்கும் சர்வதேச தீர்ப்பாயமாக அமையவில்லை. குறிப்பாகப், போர்க் குற்றங்களுக்காக ஜேர்மனியும் ஜப்பானும் தண்டிக்கப்பட்டபோதும், ஷிரோசிமா, நாகசாகி நகரங்களின் மீது அணுகுண்டுகளை வீசி அப்பாவிப் பொதுமக்களைக் கூண்டோடு அழித்த அமெரிக்காவின் யுத்த வெறி என்றும் கேள்விக்கு உட்படுத்தப்படவில்லை.

இவ்வாறு, சர்வதேச நீதியை வென்றவர்களின் நீதி, நிலைநிறுத்தப்பட்ட பின்னர் அனைவரும் ஏற்கக்கூடிய சர்வதேச நீதிமன்றத்தை உருவாக்குவது அசாத்தியமானது. குறிப்பாக, அத்தகைய அமைப்பை உருவாக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுதலில் சர்வதேச சட்ட ஆணைக்குழு முன்வைத்த வரைபுகள் அங்கிகாரம் பெறவில்லை. இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்த கெடுபிடிப் போர் சர்வதேச நீதிமன்ற உருவாக்கத்துக்கு வாய்ப்பாக இருக்கவில்லை. சோவியத் ஒன்றியத்தின் உடைவும் அமெரிக்கத் தலைமையிலான ஒரு மைய உலக அரசியலின் தோற்றமும் 'வல்லோர்களின் நீதி'யை இன்னொரு வகையில் நிலைநாட்டச் சர்வதேசச் சட்டத்தை பயன்படுத்தும் சூழலை உருவாக்கின.

இவ் வழியில் முன்னாள் யூகொஸ்லாவியாவுக்கான சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம் 1993 இல் உருவானது. அடுத்து ருவாண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலையைத் தொடர்ந்து ருவாண்டாவிற்கான சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம் 1994 இல் உருவானது. இவை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் பயனை ஒருபுறம் வலியுறுத்தினாலும் மறுபுறம் இந்நீதிமன்றங்களின் அரசியல் தன்மையும் பக்கச்சார்பும் நீதியின் பக்கம் சாராமையைக் கேள்விக்குட்படுத்தின.

யூகொஸ்லாவியாவிற்கான சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம், முன்னாள் ஜனாதிபதி ஸ்லொபொடான் மிலோஷெவிச் மீதான குற்றங்களை மட்டும் விசாரிக்கும் ஒரு தீர்ப்பாயமாகவே செயற்பட்டது. நடுநிலைத்தன்மையின்றி எதிர்த்தரப்பு இழைத்த பாரிய குற்றங்களைக் கண்டும் காணாமல் விட்டது. இவ்வாறான தீர்ப்பாயங்கள் 'வெற்றியாளர்களின் நீதி'யை மீள எடுத்தியம்பின.

1998இல் ரோம் மாநாட்டில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்குவதற்கான ரோம் பட்டயம் உருவானது. அதற்கான வாக்கெடுப்பில் 120 நாடுகள் ஆதரவாகவும் அமெரிக்கா, இஸ் ரேல், சீனா, ஈராக், லிபியா, யெமன், கட்டார் ஆகிய ஏழு நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 21 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்ட போது, இனக்கொலை, மனிதகுலத்துக்கு எதிராக குற்றங்கள், போர்க் குற்றங்கள் ஆகிய மூன்று பாரிய குற்றங்களை விசாரிப்பதற்கானதாக இருந்தது. பின்னர் ஆக்கிரமிப்புக் குற்றங்களும் விசாரிக்கக்கூடிய குற்றங்களாகின.

இதுவரை 124 நாடுகள் ரோம் பட்டயத்தில் ஒப்பமிட்டுள்ளன. உலகின் முதன்மையான சர்வதேச சக்திகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா, இஸ் ரேல் உட்பட்ட ஏனைய நாடுகள் அதை ஏற்கவில்லை. ஏற்காத நாடுகளுக்குச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற விதிகள் செல்லுபடியாகாது. உலகளாவிய நியாயாதிக்க அமைப்பாக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவிய போதும், உறுப்புரிமை பெறாத நாடுகளிலுள்ள குற்றவாளிகளை நீதிமன்றில் ஒப்படைக்கக் கோர முடியாது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் இதுவரை 10 நாடுகள் மீது குற்றவியல் விசாரணைகளை முன்னெடுத்தது. அவற்றில் ஜோர்ஜியா தவிர்ந்த அனைத்தும் ஆபிரிக்க நாடுகளே. நீதிமன்றம் குற்றவாளிகளாகத் தீர்த்த அனைவரும் ஆபிரிக்கர்களாவர். அவர்களுக்குள் முதன்மையானவர் சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷீர். அவருக்குப் பிடியாணை பிறப்பித்தபோது அது பல்வேறு கண்டனங்களுக்கு உள்ளானது. அதை வெளிப்பட எதிர்த்த ஆபிரிக்க ஒன்றியம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் ஆபிரிக்கத் தலைவர்களைத் திட்டமிட்டுக் குறிவைப்பதாகவும் குற்றம் சாட்டியது.

பிடியாணையைத் தொடர்ந்து ஓமர் அல் பஷீர் பல்வேறு நாடுகளுக்குப் போனார். ரோம் பட்டயத்தில் ஒப்பமிட்ட நாடுகள் பிடியாணைக்குட்பட்ட எவரும் தம் நாட்டுக்குள் வந்தால் கைது செய்து நீதிமன்றத்திடம் கையளிக்கக் கடமைப்பட்டவை. இந்நிலையில் சென்ற ஆண்டு ஓமர் அல் பஷீரின் தென்னாபிரிக்கப் பயணம் சர்ச்சைக்குள்ளானது. பிராந்திய உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றஅல்பஷீரைத்தென்னாபிரிக்கா கைது செய்து ஒப்படைக்கும் என நீதிமன்றம் எதிர்பார்த்தது. ஆனால் மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்களுக்குச் சிறப்பு விடுபாட்டுரிமை உள்ளது எனத் தெரிவித்த தென்னாபிரிக்கா, அவரைக் கைது செய்ய மறுத்தது. ரோம் பட்டயத்தைத் தோற்றுவித்த நாடுகளில் ஒன்றான தென்னாபிரிக்காவின் இம்முடிவைப் பல மேற்குலக நாடுகள் கண்டித்தன. அதற்குப் பதிலளித்த தென்னாபிரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியாயமற்ற முறையில் ஆபிரிக்கத் தலைவர்களைக் குறிவைப்பதை ஏற்க முடியாது என்றது. இச்சிக்கலின் அடுத்த கட்டமே இப்போது அரங்கேறியுள்ளது.

நீண்ட காலமாக பிரெஞ்சுக் கொலனியாக இருந்த ஐவரிகோஸ்ட் எனும் மேற்கு ஆபிரிக்க நாடு விடுதலையின் பின்னும் பிரான்ஸின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்தது. உலகின் முதன்மையான கொக்கோ உற்பத்தி செய்யும் நாடான ஐவரிகோஸ்ட்டில் 2000 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவான வரலாற்றுப் பேராசிரியர் லொரான் (க்)பாக்போ நாட்டை பிரான்ஸின் நிழலில் இருந்து அகற்றியதை பிரான்ஸ் விரும்பவில்லை. 2011 ஆம் ஆண்டு பிரான்ஸ் இராணுவம், ஐவரி கோஸ்ட்டில் நேரடியாகத் தலையிட்டு (க்)பாக்போவைப் பதவியிலிருந்து அகற்றியதோடல்லாமல் பிரெஞ்சுப் படைகள் அவரைக் கைதுசெய்து சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றிடம் ஒப்படைத்தன. நீதிமன்றிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்ட முதலாவது அரசாங்கமொன்றின் தலைவர் லொரான் (க்)பாக்போ ஆவார். அவரது வழக்கு இன்னமும் விசாரணையிலுள்ளது. நீதிமன்றின் அரசியல் சார்பை எடுத்துக் காட்ட இவ்வழக்குப் போதுமானது.

பிரான்ஸ் சர்வதேசச் சட்டங்களை மீறி, ஒரு சுதந்திர நாட்டிற்குள் படைகளை அனுப்பி, மக்களால் தெரிவுசெய்த ஜனாதிபதியை பதவிநீக்கியதோடல்லாமல் அவரைக் கைது செய்து சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றிடம் ஒப்படைத்தமை சகல சர்வதேசச் சட்டங்களுக்கும் முரணானது. இவ்வாறு சட்டவிரோதமாகக் கைதான ஒருவரைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் விசாரிப்பது பிரான்ஸின் செயலை அங்கிகரிப்பதாகும். எனவே சர்வதேசச் சட்டம் தொடர்பான நியாயமான வினாக்களை இது எழுப்புகிறது.

கென்ய ஜனாதிபதி உஹுரு கென்யாட்டா மனிதகுலத்துக்கு எதிராகக் குற்றமிழைத்தார் எனக் குற்றம்சாட்டிச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அவருக்கெதிராகப் பிடிவிறாந்து பிறப்பித்தது. அதைச் சவாலாக ஏற்ற கென்யாட்டா நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தில் தோன்றினார். குற்றம் நிறுவப்படாததால் அவர் விடுதலை பெற்றார். அதைத் தொடர்ந்து கருத்துரைத்த கென்யாட்டா "ஏகாதிபத்தியவாதிகளின் சரியும் செல்வாக்கின் இன்னொரு கருவியாக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் உள்ளது. எங்களை அவமானப்படுத்தித் தோற்கடிக்க முடியாது" எனத் தெரிவித்தார்.

பிடிவிறாந்திலிருந்து விடுக்கப்பட்ட இன்னொருவர் கொல்லப்பட்ட முன்னாள் லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபி. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பல ஆபிரிக்கத் தலைவர்களை இவ்வாறு குற்றவாளிகளாக்கியுள்ளது. ஆனால், அதே காலப்பகுதியில் உலகின் வலிய நாடுகள் பெருவாரியான குற்றங்களை வெளிப்படையாகச் செய்துள்ளன. அவை பற்றிச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் வாய் திறக்கவில்லை.

அண்மையில் வெளியான 'சில்கொட் அறிக்கை' ஈராக் யுத்தத்தில் பிரித்தானியாவின் பங்கை ஆராய்ந்து ஏலவே பலர் அறிந்த விடயங்களை உத்தியோகபூர்வமாகக் கூறியிருக்கிறது. அவ்வறிக்கை குறைபாடுடையபோதும் அது கூறும் விடயங்கள் பிரித்தானியா, ஈராக்கில் போர்க்குற்றங்களையும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களையும் இழைத்தமையை நிறுவுகிறது. இவை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தின் கீழ் உள்ள போதும், நீதிமன்றம் பிரித்தானியாவைக் குற்றவாளியாகக் காணவில்லை; அது பார்வைக் கோளாற்றின் விளைவல்ல.

இதேபோல பாலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் 2008 டிசெம்பரில் இஸ் ரேல் மேற்கொண்ட தாக்குதலை விசாரிக்கத் தென்னாபிரிக்க நீதிபதி ரிச்சட் கோல்ட்ஸ்டன் தலைமையில் ஐக்கிய நாடுகள் சபை நியமித்த குழுவின் அறிக்கை, இஸ் ரேல் இனப்படுகொலையும் போர்க்குற்றங்களும் உட்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்துள்ளது என ஆதாரங்களுடன் நிறுவியது. கோல்ட்ஸ்டன் அறிக்கை உலகளாவ 'நீதி'யின் பெறுமதியைக் கேள்விக்குட்படுத்திய முக்கிய ஆவணமாகும். இன்றுவரை அவ்வறிக்கை குற்றவாளியாகக் கண்ட எவருக்கும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் பிடிவிறாந்து அனுப்பவில்லை.

கடந்த இரு தசாப்தங்களில் அமெரிக்காவும் நேட்டோவும் எத்தனையோ நாடுகள் மீது போர்களை வலிந்து தொடங்கி நடாத்தியுள்ளன. ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா என அப்பட்டியல் மிக நீண்டது. ஆனால் இவற்றுள் எதுவும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் கண்களுக்குத் புலனாகவில்லை. அவர்கள் செய்யும் குற்றம் எதுவுமே குற்றமாகக் கருதப்படுவதில்லை. 'மனிதாபிமானத் தலையீடு', 'காக்கும் கடப்பாடு' என்ற சொல்லாடல்கள் அவற்றைக் காக்கின்றன. எனவே 'மனிதாபிமான யுத்தத்தின்' பெயரால் இலட்சக்கணக்கானோர் கொல்லப்படினும் மனிதாபிமானத்தின் பெயரால் அனைத்தும் மறக்கவும் மன்னிக்கவும் படுகின்றன.

ஆபிரிக்க நாடுகள் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் மீது முன்வைக்கும் விமர்சனம் கவனமாக நோக்கப்பட வேண்டியது. குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்புரிமையில் இருந்து தென்னாபிரிக்கா விலக எடுத்த முடிவு ஒரு வலிய செய்தியைச் சொல்கிறது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா ஒரு போரைத் தொடங்கி 15 ஆண்டுகள் முடிந்து விட்டன. லிபியாவில் முவம்மர் கடாபியின் ஆட்சியைக் கவிழ்த்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இவ்விரு நாடுகளும் இன்றும் அமைதியற்ற யுத்தப் பூமிகளாக, எதிர்காலமொன்றை நினைத்தும் பார்க்கமுடியாத நிலையில் அம்மக்களை வைத்துள்ளன. இதற்குப் பொறுப்புச் சொல்வது யார்? இவர்களுக்கு நீதி வழங்குவது யார்? உலகம் மெதுமெதுவாக மாறிவருகிறது. நீதி என்பது யாருடைய நீதி? யாருக்கான நீதி என்ற கேள்விகள் இப்போதும் மேலெழுகின்றன. அதிகாரத்துக்கும் அகங்காரத்துக்கும் மாற்றாகப் புதிய கூட்டணிகள் அமைகின்றன. நடப்பதைக் கைகட்டி வேடிக்கை பார்க்கும் பழக்கம் உலக அரசியலில் குறைந்து வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் போல தன்னிச்சையான தலையீடொன்றை இன்று மேற்கொள்ள இயலாது என ஆதிக்க சக்திகள் உணர்கின்றன; ஆதிக்க சக்திகளின் எடுபிடிகளும் உணர்கின்றன. உலகின் அனைத்து மூலைகளில் இருந்தும் ஒலிக்கும் நியாயத்திற்கான குரல்கள் அதிகார மையங்களை உலுப்புகின்றன.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் தனது காலம்கடந்து போகும் நாட்களுக்குள் மெதுமெதுவாகக் கால்பதிக்கிறது. காலவோட்டத்தில் தன்னை இறந்த காலத்துக்குரியதாய் மாற்றக்கூடிய செயல்களினூடு அது காலப்பொருத்தத்தில் இருந்து பெயர்கிறது. ●

**தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் விழிப்புணர்வு



Dicision making is very important.

don't say yes, when you want to say no

மகாத்மா காந்தியைப் பற்றி எல்லோரும் அறிந்திருக்கிறோம். திரைப்படத்தில் பார்த்திருக்கிறோம். காந்தி மீது குற்றம் சுமத்தப்பட்டு அவரை நீதிமன்றத்துக்கு அழைத்து வருகிறார்கள். நீதிமன்றத்தில் வெள்ளையரான நீதிபதி வழக்கறிஞர்கள் பார்வையாளர்கள் என திரளான கூட்டம். காந்தி நீதிமன்றத்தின் வாயிலில் நுழைகிறார். நீதிபதி உட்பட அத்தனை மக்களும் மரியாதையுடன் எழுந்து நிற்கிறார்கள். காந்தியிடம் பணமோ பதவியோ உடல் வலிமையோ பெரிதாக எதுவும் இல்லை. அவரை மதிக்க வேண்டும். மரியாதை தரவில்லையானால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சட்டமும் இல்லை. அவரும் தன்னை மற்றவர்கள் போற்ற வேண்டும் என எதிர்பார்க்கவில்லை. நிலைமை இப்படி இருக்க காந்தியைப்பார்த்ததும் அனைவரும் தங்களை அறியாமல் ஏன் எழுந்து நின்றார்கள். அதுதான் காந்தியின் மனவலிமை.

காந்தியைப் போன்று நம்மால் நடக்க முடியுமா? அது போன்ற மனவலிமையைப் பெறமுடியுமா?அதற்கு எவ்வளவு சிரத்தை வேண்டுமோ? இதெல்லாம் நடைமுறைக்கு சரிவருமா என்ற எண்ணம் நம் மனதில் தோன்றக்கூடும். மனவலிமை என்பதுமனிதனுக்கு கொடுத்த தனித்தன்மை.அதனால் தான் இன்றைய உலகத்தில் சாதனைகள் பெருகிக் கொண்டே செல்கின்றன. எல்லா மனிதர்களுக்கும் உள்ள பொதுவான அம்சம் மனம்.

**மனவலிமை மிக்கவர்களின் முக்கிய பண்புகள்.**

1.தாங்கள் தேர்ந்த செயலை வீட்டிலும் தொழிலும் சமுதாயத்திலும் தொடர்ந்து செயல்படுத்துகிறார்கள்.

2.தங்கள் செயல்கள், நேரம், மற்றும் விருப்பு வெறுப்புக்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளவர்கள்.


3. எந்த தடைகள் வந்தாலும் எதிர்ப்பு வந்தாலும் குழப்பமடையாமல் இயல்பாக செயற்படும் ஆற்றல் கொண்டவர்கள்.

இதுபோன்ற அடிப்படை ஆற்றல்களை கொண்டவர்களே மனவலிமை மிக்கவர்களாவர். இவர்களுடைய வயது, தொழில் படிப்பு, பணம் போன்றன எந்த நிலையில் இருநு;தாலும் உயர்வான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

**குழப்பங்கள் உண்டாகும் விதங்கள்**

உதாரணமாக மகாபாரதத்தில் பாரதப்போரை எடுத்துக்கொள்வோம். சூதாட்டத்தில் சூழ்ச்சியால் நாட்டை இழந்த அர்ச்சுனன் முதலான பாண்டவர்களுக்கும் அவர்களுடைய பெரியப்பாவின் பிள்ளைகளான துரியோதனன் முதலானோருக்கும் இடையே போர் நடக்க இருக்கிறது. போர் செய்து இழந்த நாட்டை பெற முடிவு செய்துவிட்டு போர்க்களத்தில் வந்த பிறகு அர்ச்சுனனுக்கு மாபெரும் குழப்பம். போர் செய்ய வந்தது சரியா? போர் செய்தால் பிற்காலத்தில் அவப்பெயர் வருமா? எதிரே உள்ளவர்களெல்லாம் நண்பர்கள் ஆசிரியர்கள் உறவினர்கள் அல்லவா? இவர்களை அழித்து பெறப்போகும் இந்த நாடு தமக்கு திருப்தியளிக்குமா? வருங்காலத்தில் இந்த உலகம் தன்னை தூற்றுமா? போரிலே பல உயிர்களை கொன்ற பாவம் வருமா? போர் செய்வது சரிதானா? தவறான முடிவில் வந்துவிட்டோமா? சரி இத்தனை குழப்பத்திற்கு போர் செய்து வெற்றி கிடைப்பதைவிட தன்னை கோழை என்று சொன்னாலும் பரவாயில்லை. நான் இதிலிருந்து திரும்பிவிடுகிறேன் என எல்லாவகையிலும் குழப்பமாகிறான் அர்ச்சுனன். இந்தக் குழப்பத்தை தெளிவாக்குவது தான் கீதையாக உருவாகியது.

இதே போன்று நமது வாழ்க்கையிலும் உறவுகள் ,நண்பர்கள், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் போன்ற பல சூழ்நிலைகளில் நாம் எப்படிச் செயல்படுவது. எது சரி? எது பிழை? யாரை நம்புவது? விரோதிகளை எப்படி சமாளிப்பது? என பலநூறு கேள்விகளுக்கு தெளிவல்லாமல் தடுமாறுகின்றோம்.



**குழப்பத்தை தவிர்க்கும் வழிகள்**

குழப்பங்களில்லாமல் செயற்பட மனதில் உறுதியும் தெளிவும் வேண்டும். அதற்கு முதலில் சரியான முடிவெடுக்க வேண்டும்.

இரண்டாவது அம்முடிவை எக்காரணத்தைக் கொண்டும் எந்தச்சூழ்நிலையிலும் மாற்றாமல் செயற்படுத்த வேண்டும்.

மூன்றாவது சரியான முடிவை செயற்படுத்தும் போது வரும் எதிர்ப்புக்களை உணர்ச்சிவசப்படாமல் சண்டையிடாமல் சுமூகமாக பேசி மனிதநேயம் பாதிக்கப்படாமல் செயற்படுத்தவேண்டும். இதற்கு தேவையான இடங்களில் பிறர் சொல்லுவதை மறுத்துப்பேச வேண்டும்.

மறுப்புத் தெரிவிக்குமுன் மறுதரப்பிலுள்ளவர் தம்முடைய சுயநலத்தை கருதாமல் உங்கள் நலனுக்காக மட்டும் சொல்கிறார் என்றால் அவரோடு உங்கள் விருப்பத்தை மனம் விட்டுப்பேசி அவரை ஏற்கும்படி செய்யலாம். ஆனால் மறுப்பு செய்து விட்டு தவறு செய்துவிட்டோமா? என்ற குற்றவுணர்வு கொள்ளக்கூடாது. அதற்கு முதலில் எந்தப்பிரச்சினையும் பொறுத்து நன்கு ஆராய்ந்து தெளிவுடன் சிந்தித்த பிறகே முடிவெடுக்க வேண்டும். சரியான முடிவெடுக்க தெரியாதவர் நடுநிலையாளர் ஒருவரின் உதவியுடன் முடிவு செய்யலாம். பிரச்சினைகளை தெளிவாக ஆராய்ந்து சரியான முடிவெடுத்து அதிலிருந்து பின்வாங்காமல் செயற்படுத்துபவர்களே மன உறுதி மிக்கவர்கள். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழ வேண்டுமெனில் புதுமையாய் எழுது எழுந்து விட்டால் வெற்றி உனதெனக் கருது

## VIRGINIA WOOLF
## வேர்ஜினியா வூல்ஃப்

அன்பானவரே, நான் என் சிந்தையை இழக்கின்றேன் என்று நினைக்கின்றேன். நாம் கடந்து வந்த அந்த பயங்கரமான நாட்களை மறுபடியும் என்னால் கடக்க இயலாது என்று எண்ணுகின்றேன். எனக்கு ஏதேதோ குரல்கள் எல்லாம் கேட்கின்றன. அவைகள் என் கவனத்தை சிதறடிக்கின்றன. ஆனாலும் என்னால் முடிந்தவற்றை முயலுமானவரை செய்கின்றேன். அன்பானவரே நீங்கள் எனக்கு கொடுத்த சந்தோஷங்களுக்கு ஈடு இணை எதுவுமேயில்லை.

எனக்கு எல்லாமுமாக இருந்த நல்லவர் நீங்கள். இந்தப் பயங்கர நோய் எனக்கு வர நான் எந்தப் பாவமும் பண்ணவில்லையே. நம் இருவரைப் போல் வேறு எவராலும் இருந்திருக்க முடியாது. இந்த நோய் என்னை சூழும் வரை, இதற்கு மேலும் என்னால் போராட முடியாது. அதற்குண்டான தெம்பும், தைரியமும் என்னிடமிருப்பதாகத் தெரியவில்லை. நான் இப்போது உங்கள் வாழ்க்கையை சிதைக்கின்றேன் என்று தோன்றுகின்றது. நான் இல்லாமலும் உங்களால் இயங்க முடியுமென்பது என் மனதிற்கு தெரிவதில் தவறேதும் இல்லையே? என் வழக்கமான நடையில்லாமல் சுமாராக இதை எழுதுவதில் இருந்தே தெரிகிறது என்னால் எழுதக்கூட முடியவில்லை. எழுதிய வார்த்தைகளை வாசித்து நேசிக்கவும் முடியவில்லை. என் வாழ்க்கையின் மொத்த சந்தோஷமும் உங்களால் எனக்கு தாரை வார்க்கப்பட்டது தான். அதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

நீங்கள் பொறுப்புடனும் பொறுமையுடனும் என்னைக் கண்ணில் வைத்து கவனிக்கின்றீர்கள். என்னைப் போல் அனைவருக்கும் இது நன்றாகத் தெரியும். என்னை யாரேனும் ஒருவர் காப்பாற்றுவாராயின் அது நீங்கள் ஒருவர் மட்டுமே. உங்கள் அன்பைத் தவிர அனைத்துமே என்னை விட்டு விலகிப் போயிற்று. இதற்கு மேலும் உங்கள் வாழ்க்கையில் நான் வேண்டாம். உங்கள் நிம்மதி என்னால் கெட்டுப் போக வேண்டாம். நம்மைப் போல் இவ்வுலகில் இன்பங்களை மொத்தமாய் குத்தகைக்கு எடுத்தவர் எவருண்டு. இப்படிக்கு உங்கள் அன்பின் முன் தோற்று நிற்கும் வேர்ஜினியா.

இப்படி ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு 1941 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி ஆடைகளுக்கு மேல் அணியும் ஓவர்கோட்டை (OVERCOAT) மாட்டிக் கொண்டு அதில் உள்ள பாக்கெட்டுகள் (POCKETS) அனைத்திலும் கற்களைப் போட்டு நிரப்பிக் கொண்டு தன் வீட்டிற்கு அருகே ஓடிக்கொண்டிருந்த "ரிமி" நதிக்குள் இறங்கி அதன் ஆழத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள் வேர்ஜினியா.

இங்கிலாந்தின் மிடில்செக்ஸ் மாகாணத்தின் கென்சிங்டன் என்ற ஊரில் 1882 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 வரலாற்று நூலாசிரியரும், விமர்சகரும், மலைவாசியும், தேசிய சுயசரிதையின் நெறியாளருமான லெஸ்லி ஸ்டீபன் மற்றும் ஜுலியா ஸ்டீபன் ஆகியோருக்கு மகளாகப் பிறந்தாள் அடலின் வேர்ஜினியா ஸ்டீபன். தந்தையின் ஆற்றல் இவளையும் தொற்றிக் கொள்ளவே 1905 ஆம் ஆண்டு 'த கார்டியன்' இதழுக்கும், 1905 ஆம் ஆண்டு 'த டைம்ஸ் லிடரி சப்ளிமென்ட்' இதழுக்கும் தன் ஆக்கங்களை எழுதத் தொடங்கினாள். யூதர்களின் குரலையும் அவர்களது மொழியையும் வெறுத்தவள், யூத இனத்தைச் சேர்ந்த எழுத்தாளரான லியோனார்ட் வூல்ஃப் என்பவரை 1912 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி திருமணம் செய்து கொண்டாள்.

1915 இல் தனது முதலாவது நாவலான தி வோயேஜ் அவுட் (THE VOYAGE OUT) என்ற நூலை தனது அண்ணனின் ஊக்கத்தாலும் உதவியோடும் வெளியிட்டவள், தனது கணவரோடு சேர்ந்து புத்தகங்களை பிரசுரித்து வெளியிடும் அச்சுத் தொழிலைத் தொடங்கினாள். 1925 இல் மிஸிஸ் டல்லவே (M-RS DOLLOWAY) என்ற முழுக்க முழுக்க கற்பனையில் எழுதிய கதையை வெளியிட்டாள். மத்திய வயதுடைய ஒரு பெண் ஏற்பாடு செய்யும் விருதையும், முதலாம் உலக மகாயுத்தம் முடிவடைந்து பயங்கரமான உடல் தழும்புகளுடன் திரும்பி வரும் ஒருவனையும் பற்றியதான கதை. வேர்ஜினியாவின் பலமே அவளது கற்பனைதான். எல்லையில்லாத அந்த உலகத்தின் அத்தனை அழகையும் அற்புதங்களையும் அழகாகப் படம் பிடிக்கும் அவளது கையில் உள்ள எழுதுகோல், கொஞ்சம் கூட உண்மை இல்லாவிட்டாலும் வாசிப்பவர்களுக்கு கற்பனையில்லாத உண்மையாகவே தெரியும் வண்ணம் அந்த உலகத்திற்குள் வாசகர்களை மூழ்கடித்து விடுவாள். ஒவ்வொரு வார்த்தையும் வசனமும் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களால் செதுக்கி வைக்கும் வசியமும் மாயாஜாலமும் தெரிந்தவள் வேர்ஜினியா.

1927 இல் டு த லைட் ஹவுஸ் (TO THE LIGHT HOUSE) என்ற நாவலை வெளியிட்டபோது, அவளது கற்பனை எல்லைகளை மீறி வெள்ளியாய் தெரிந்தது. அடிக்கடி தான் பார்த்து ரசித்த லைட் ஹவுஸை வாயைப் பிளந்து கழுத்தெலும்பு முறியும்படி அண்ணாந்து பார்க்கும் ஆகாயக் கோட்டையாய் கட்டி முடித்து ஆங்கில இலக்கியத்திற்கே 'நவீனத்துவத்தின் புதுமை' என்ற புதிய முலாம் பூசினாள். 1921 இல் வெளியான ஓர்லாண்டோ (ORLANDO) என்ற சுயசரிதைப் புத்தகம் நவீன புதிய யுக்திகளையும் இலக்கியத்தின் உயர் உச்சங்களையும் தொட்டு நின்றது. 30 வயதிற்குப் பிறகு வயதாகமல் 300 வருடங்கள் வாழும் ஒரு இளமையான, நேர்மையும் விழுமிய உயர் குணமுடைய ஒருவருடைய போலியான சுயசரிதத்தை, வாசிப்பவர்கள் உடல் புல்லரித்துப் போகும். புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட வரலாற்று காவியமது. 1929 இல் எழுதி வெளியிட்ட எ ரூம் ஆப் ஒன்ஸ் ஓன் (A ROOM OF ONE'S OWN) என்ற புத்தகம் பெண்களின் தேவைகளையும் உரிமைகளையும் உணர்த்தி நின்றது. பணமும் வீடும் பெண்ணுக்கு எந்தளவுக்கு முக்கியம் என்பதை விறுவிறுப்பாக உணர்ச்சி பொங்க எழுதினாள் வேர்ஜினியா. இறுதியில் மன அழுத்த நோயினால் பீடிக்கப்பட்டவள்,


ஒரு கட்டத்தில் மனநலம் குன்றியவர்கள் போல் செயல்படத் தொடங்கினாள். என்ன செய்கின்றேன்? ஏது செய்கின்றேன்? என்று எதையும் உணராதவளாய் ஒரு பைத்தியம் போலவே காரியமாற்றத் தொடங்கியவள், தன் கணவனுக்கு ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு, கூர்மை மழுங்காத ஒரு முடிவுடன் கற்களை நிரப்பிய கோட்டை அணிந்தபடி ஆற்றில் இறங்கி, 'கணவரை விட்டு பிரிகிறேனே' என்ற ஒற்றைக் கவலையுடன் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்து ஆற்றின் ஆழத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள். ஆற்றின் வெள்ளம் அங்குலம் அங்குலமாய் அவளை உள்வாங்கி இறுதியில் தன் பசிக்கு மொத்தமாய் அவளை இரையாக்கிக் கொண்டது. 1941 ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி வரை அவளது உடலைக்கூட யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆங்கில இலக்கியத்தின் நம்பர் ஒன் எழுத்தாளரும் நாவலாசிரியையுமான வேர்ஜினியாவுக்கு இலண்டன் மாநகரில் 2004 இல் உருவச்சிலை வைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டாள். ருமேனியா அரசு 2007 இல் வேர்ஜினியா வூல்ஃப்பின் உருவப்படத்தை தபால் தலையில் வெளியிட்டு இலக்கியத்திற்கு புதுப்பாதை அமைத்தவளை கண்ணியப்படுத்தியது. ●

**கவிஞர் எம். பிரேம்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?




போதுமான பாதுகாப்பே குடும்பத்தில் நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா? இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

**Super Visa 100% Refund if Visa Denied**

உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

**திலீபன் இராமநாதன்** BBM (Hons)
**(Thileepan Ramanathan)** Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 15 | 12 | 15 | 14 | 19 | 18 | 26 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 492 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 316 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 761 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 58 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 154 | 128 | 201 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 115 | 102 | 142 | 126 | 178 | 149 | 234 | 195 | 280 | 239 | 370 | 303 | 476 | 393 | 641 | 541 | 878 | 744 |

Non medical- Term & Permenent Products

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 41 | 64 | 53 | 92 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 369 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 38 | 64 | 51 | 113 | 83 | 197 | 134 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 147 | 104 | 243 | 164 | 398 | 257 | 675 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 101 | 72 | 165 | 112 | 268 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 91 | 230 | 152 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 92 | 76 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 124 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 164 | 223 | 183 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 564 |

Call me for your free consultation.

Life100
INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"



# BEST DEAL FROM ROGERS

**Student Offer is Back**

**High Speed Unlimited Internet** $ 49.99 Only
**Free advance Wifi Modem**

**Home Phone, Internet Digital Basic TV** $ 99.95

**Tamil Channel Starting from** $ 8.00


**Internet** Starting from $ 49.95

**Home Phone** $ 8.99 only



தமிழ் TV அலைவரிசைகளின் புதிய பொதி

VIJAY SUN TV JAYA TV KTV **$30** மாதம் ஒன்றுக்கு



தமிழில் தொடர்புகளிற்கு:

ROGERS™ **SANJAY : 416.315.2917**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டிற்கான நோபல் பரிசுகள் அறிவிப்பு

சில்லையூர் றெ. அலெக்ஸ்

சிறுவயதில் கற்கையில் ஆசிரியர்கள் வழங்கும் பாராட்டுரைகள், பாடசாலைப் பரிசளிப்புக்களில் வழங்கப்படும் வெகுமதிகள் என்ப, மாணாக்கரின் கற்றல் மீதான ஆர்வத்தினை அதிகப்படுத்தும் வகையில் அமைவதைக் காணலாம் அண்மையில் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானபோதும் கூட, உயர் புள்ளி வெற்றபவர்களுககு பாராட்டுக்களும் பரிசில் மழைகளும் பொழிந்தன. சிறந்த செயற்பாட்டினை வெளிப்படுத்தும் துடிதுடிப்பானவர்களுககு, பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிலையங்கள் எனக் கல்வி நிலையங்களில் மட்டுமல்மல் ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களிலும் ஊக்குவிக்கும் நிகழ்வுகள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றன.


இதே போன்றே, மனித குலத்தின் நன்மைக்காகப் பாடுபட்டு உழைத்து அரிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்த மனிதர்கள் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இவ்வகையில், வருடம்தோறும் வழங்கப்பட்டு வரும் நோபல் பரிசு தொடர்பான அறிவிப்புக்கள் அண்மையில் வெளியாகியுள்ளன.


'தோன்றிற் புகழோடு தோன்றுக, அஃதுஇலார் தோன்றலின் தோன்றாமை நன்று' (236) என்ற திருவள்ளுவரின் குறள் கூறும் பொருளிற்கிணங்க, அமரர் அற்பிறட் நோபல் மேற்கொண்ட தீர்மானம். அவரின் உடல் அழிந்தாலும், அவர் புகழுடல் அழியாது இன்னமும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்க வழிசெய்து கொண்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல், உலகின் ஆக்கத்துறைகளில் பங்களிப்புச் செய்யும் ஆய்வாளர்களுக்கு ஓர் உந்து சக்தியாகவும் நோபல் பரிசுகள் திகழ்ந்துக் கொண்டிருக்கின்றன.

தனது கண்டுபிடிப்பான 'டைனமைற்' (dynamite) வெடிமருந்து, ஆக்க சக்தியாகப் பயன்படாமல் அழிவிற்கு மனிதரால் பயன்படுத்து கின்றமையை நோபல் அவதானித்தார். இந்தப் பிழையான பிரயோகத்தால், 'டைனமைற்' இனைக் கண்டுபிடித்த தனது பெயர் உலகத்தினரால் அவப்பெயராக, காலங்காலமாக உச்சரிக்கப்படப் போவதை பிழையான பத்திரிகைச் செய்தி ஒன்றினூடாக அறிந்தார். இதனை மாற்றி அமைக்கத் திடங்கொண்ட அவர், தனது மரணத்திற்கு முனனர் தமது உயிலினை, அறிவியல் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிக்கும் வகையிலும், உலக அமைதிக்கு ஆர்வமூட்டும வகையிலும் எழுதினார். இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், அமைதி ஆகியவற்றிற்கான நோபல் பரிசுகள் அவரின் உயிலின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டன. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு, சுவீடனின் மத்திய வங்கியின் 300 ஆவது வருட நிறைவையொட்டி நோபல் நிதியத்திற்கு நிதியளித்து உருவாக்கப்பட்டதாகும்.

இந்த வருடம் அப்புகழ்பெற்ற நோபல் பரிசில்களைப் பெறத் தகுதி பெற்றவர்களின் பெயர் மற்றும் விபரங்கள் தொடர்பான அறிவிப்பு அண்மையில் வெயியாகின.

## இயற்பியல்







இயற்பியலுக்கான இவ்வருட நோபல் பரிசு மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரித்தாரிவைத் தமது பிறப்பிடமாகவும், அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பணிபுரிபவர்களுமான டேவிட் தௌலெ, டங்கன் ஹால்டேன் மற்றும் மைக்கேல் காஸ்டர்லிட்ஸ் ஆகிய ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சடப்பொருளின் கட்டமைப் பியல் மாற்றங்களின் புரிதல் தொடர்பில் ஆய்வினூடாகப் பங்களித்தமைக்காக இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.


## வேதியியல்


மூலக்கூற்று இயந்தி வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு என்பவற்றில் பணியாற்றிய மூவருக்கு இம்முறை வேதியியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்படுகின்றது. ஆய்வாளர்களான பிரான்ஸ் நாட்டினைச் சேர்ந்த ஜீன் பெர்ரி, அமெரிக்காவைச் சேர்ந்த பிரேசர் மற்றும் நெதர்லாந்து நாட்டினைச் சேர்ந்த [illegible] என்போரே இப்பரிசினைப் பகிர்ந்து கொள்கின்றனர்.


மருத்துவத்திற்கா இவ்வருட நோபல் பரிசினை ஜப்பானிய ஆய்வாளர் யோஷினோரி ஒஷிமி பெறவுள்ளார். இவர், ஜப்பானின் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் கலைங்கள் தொடர்பான துறையில் பேராசிரியராகக் கடமைபுரிந்து வருகின்றார். உயிரினங்களின் உடல்களில் காணப்படும் கலங்கள் காலத்துக்குக் காலம மீன்சுழற்சி செய்துவருவது 50 வருடங்களுக்கு மேல் அறியப்பட்டிருந்தாலும், பேராசிரியர்களின் ஆய்வு, அப்பொறிமுறை தொடர்பில் அறிவுவதற்கு வித்திட்டிருக்கின்றது இதனைக் கௌரவிக்கும் வகையில் இப்பரிசு வழங்கப்பட உள்ளது.

## இலக்கியம்

இவ்வருடத்திற்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசினை 75 வயதான பாப் டிலன் என்ற அமெரிக்க பாடலாசிரியர் பெறவுள்ளார். அமெரிக்க கவிதை உலகில், கவிதை எழுத என மட்டுப்படுத்தப்பட்டுள்ள விடயங்களில் மட்டுமல்லாமல், தத்துவம் அரசியல் எனப் புரிய





கருப்பொருட்களிலும் கவியாடி புரட்சியினை ஏற்படுத்தியுள்ளார். அது மட்டுமல்லாமல், மனித உரிமைகள் மற்றும் போர் எதிர்ப்புப் பாடல்கள் என்பனவும் இப்பாடலாசிரியரால் உருவாக்கப்பட்டுள்ளன.

## அமைதி

உலக அமைதிக்காக உழைக்கும் மனிதர்களுக்கு வழங்கப்படும் நோபல் பரிசு, சில சமயங்களில் சலசலப்புக்களை ஏற்படுத்தி விடுவதண்டு. இந்தப் பரிசின் ஊடாக மேற்குலக நாடுகள் தமது அரசியல் எதிர்பார்ப்புக்களை அடைந்து கொள்ளும் வகையில் வழங்கப்படும் நபர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பதை அச்சலசலப்புக்களின் பின்னணியாக காணப்படுவதுண்டு.

இம்முறை சமாதானத்திற்கான நோபல் பரிசு, கொலம்பிய அரசுத் தலைவர் மனுவேல் சாண்டோஸுக்கு வழங்கப்பட்டுள்ளது. கொலம்பியா நாடு லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அந்நாட்டில் உள்நாட்டுப் போர் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வந்தது. இப்போர் நிலைமை, கொலம்பிய அரசுத் தலைவர் மனுவல் சாண்டோஸ் மற்றும் 'பார்க்' என்ற போராட்டக்குழு என்பவற்றிற்கிடையிலான ஒப்பந்தம் காரணமாக தற்காலிக அமைதி திரும்பியுள்ளது. இந்தத் தற்காலிக அமைதி நீடித்த அமைதியை ஊக்குவிக்கும் வகையில் இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்டுள்ள நோபல் பரிசினை போரினால் பாதிக்கப் பட்டுள்ள மக்களின் நல்வாழ்விற்காக வழங்கவுள்ளதாக கொலம்பிய அரசுத் தலைவர் அறிவித்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரம்

பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு, நோபல் உருவாக்கப்படாத போதும் ஏனைய நோபல் பரிசுக அறிவிக்கப்படுகையிலேயே இதுவும் அறிவிக்கப்படுகின்றது.

இம்முறை இப்பரிசினை இருவர் பகிர்ந்துக் கொள்கின்றனர். அவ்விருவரில் ஒருவர், ஒலிவர் கார்ட். அமெரிக்காவின் ஹவார்ட் பல்கலைக்கழகத்திலும் மற்றவர், பெங்க், மஸாசூசெட் தொழில்நுட்ப கல்வி மையத்திலும் பணிபுரிகின்றனர். பொருளாதாரத்துறையில் காணப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பில் கோட்பாடுகளை உருவாக்கியமைக்காக இப்பரிசு வழங்கப்படவுள்ளது.

நோபல் பரிசு நிறுவுனரின் நினைவு தினமான எதிர்வரும் டிசெம்பர் 10ஆம் திகதி, இவ்வருடம் பெரியடப்பட்டவர்கள் பரிச வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட உள்ளனர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வசதிக்கு ஏற்ற, அதிபயன் தரும் ஆயுட் காப்புறுதித் திட்டங்கள்

உங்கள் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் உடல் நிலைக்கும் ஏற்ப சரியான காப்புறுதியைப் பெறுவதற்கும், உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்பு, வரிக் கழிவு பெற்ற சேமிப்பு, ஓய்வூதியச் சேமிப்பு போன்ற முதலீடுகளுக்குமான ஆலோசனைகளை என்னிடம் பெறுங்கள்!

**Term Life Insurance**

| Age | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 18 | 15 | 19 | 15 | 21 | 17 | 28 | 22 | 43 | 31 | 67 | 48 |
| 500K | T20 | 36 | 25 | 37 | 27 | 40 | 30 | 56 | 40 | 88 | 60 | 148 | 97 |
| 1 Mill | T20 | 68 | 45 | 68 | 48 | 75 | 53 | 106 | 75 | 171 | 115 | 288 | 188 |
| **Permanent Life Insurance - Premium Never Change** | | | | | | | | | | | | | |
| 200K | WL | 81 | 71 | 98 | 89 | 121 | 105 | 150 | 131 | 196 | 166 | 233 | 200 |
| 500K | WL | 188 | 164 | 232 | 201 | 289 | 251 | 364 | 313 | 476 | 401 | 590 | 488 |
| 1 Mill | WL | 363 | 310 | 450 | 387 | 566 | 484 | 712 | 606 | 935 | 791 | 1129 | 965 |
| **Critical Illness Insurance- 100% Money Back** | | | | | | | | | | | | | |
| 50K | T75 | 44 | 42 | 56 | 51 | 70 | 65 | 90 | 85 | 120 | 113 | 177 | 148 |
| 100K | T75 | 76 | 72 | 96 | 88 | 123 | 112 | 157 | 145 | 212 | 205 | 321 | 265 |

- கொடிய நோய்க்குரிய காப்புறுதி
- அடமானக்கடனுக்குரிய காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
- 20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி
- Disability Insurance
- Final Expense Insurance
- பிரயாணக் காப்புறுதி
- சுப்பர் விசா மருத்துவக் காப்புறுதி

**முதலீட்டுத் திட்டங்கள்**

**• RRSP • RESP • TFSA**



RBC Insurance · Manulife · Industrial Alliance · La Capitale Financial Group · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

## Thana Manickavasagar Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சனைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI

**Certified Insolvency Counsellor**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


YOGI & PARTNERS presents
FOR WINNERS:
1st 1 Week Vacation Trip to Cuba (All inclusive) for 2 and Surprise Gift
2nd $1,000 3rd $500
LIVE MUSIC BY
agni
MR. & MRS.
YOGI'S Best Couple Contest - 2016
With Actor Rahman & Mehrunisa
Scarborough Convention Centre, 20 Torham Pl., Toronto ON
POWERED by
HIMELFARB PROSZANSKI 416 599 8080
IDEAL GROUP
SATURDAY DEC 17 6:00 PM
NAVA LAW
416.321.1100
AMBIKA JEWELLERS
Ajith Sabaratnam Insurance and Investments Inc.
MEDCENTRE CONNECT
Dr. S. Senthill Mohan, MD
416 357 7714
Please send your registration confirmation to yogiandpartnercontest@gmail.com
or Contact Program Director: Yogi T. Pillai 416.786.4778, Sudhir Nambiar: 647-393-1638.
Dr. Vasuki Asirwatham 647.862.9329 To participate in the contest contact Subha 647-831-9167
Last day to receive the registration is by Friday, Nov. 25th. Registration Fees: $150 for pair
HOPE MEDICAL CENTRE
Dr. Ramesh Indran Asirwatham
Family Physician
416-267-6700
3208 Eglinton Ave. East, Scarborough, ON M1J 2H6
NALLUR KUMARAN
YOGI & PARTNERS 416 289 4141
HIMELFARB PROSZANSKI
Steven Sieger, B.A., LL.B
Barrister & Solicitor, Notary Public
Trade Mark Agent (Can. & U.S.)
416.599.8080 x248
MORTGAGE ALLIANCE
sunshine DENTAL 416 291 1011
www.sunshine-dental.ca
east
Dr. Arunkumar Pillai, Ph. D, C. Psych
Clinical and Rehabilitation Psychologist
Psychological Recovery Clinic
2100 Ellesmere Road, #334, Scarborough ON
416.356.4280 or 647.342.5444
arun@psychologicalrecovery.com
$80 Per Person $150 Per Couple
Includes Sit Down Dinner

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் முஸ்லிம்கள் மீதான விரோதப்போக்கு தொடரும்

1979இல் சோவியத் யூனியன் கட்டமைப்பு சிதைவுற்றது முதல் மனித வரலாற்றில் அமெரிக்கா மட்டுமே அறியப்பட்ட ஒரே இராணுவ பலம்மிக்க சக்தி என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டது.

உலகில் மிகவும் அதிகார பலம் மிக்க ஆசனம் அமெரிக்க ஜனாதிபதி ஆசனம் தான். எனவே, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு உலகம் ஆகக் கூடுதலான முக்கியத்துவத்தை அளித்து வருகின்றது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கும் இதிலிருந்த விதிவிலக்கு கிடையாது. அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளரும், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் மனைவியுமான ஹிலாரி கிளிண்டன் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகவும், வர்த்தகப் புள்ளி டொனால்ட் டிரம்ப் குடியரசு கட்சி வேட்பாளராகவும் களமிறங்கியுள்ளனர்.

டொனால்ட் டிரம்ப் கடும் சொற்களைப் பாவிக்கும் ஒரு நபர் என்பதால் அவரின் அந்த சொற்பிரயோகங்கள் அமெரிக்காவுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, அவர் அமெரிக்க ஜனாதிபதியாக வரத் தகுதியற்றவர் எனக் கூறி கடந்த ஜுன் மாதத்தில் ஹிலாரி செய்தித் தலைப்புக்களில் இடம் பிடித்தார். ஆனால், அமெரிக்காவின் உயர்மட்ட இராஜதந்திரியாக ஹிலாரி இருந்த காலத்தில் அவரின் தலைமையின் கீழான அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை சற்று ஆழமாக அலசிப் பார்த்தால் டிரம்ப் எந்தளவு நாசகார போக்கு உள்ளவரோ அதைவிட ஹிலாரி எந்த வகையிலும் குறைவானவர் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அமெரிக்காவின் பல யுத்தக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர் ஹிலாரி. மில்லியன் கணக்கான அப்பாவி மக்களின் இரத்தத்தை ஆறாக ஓட விடப்பட்டமைக்கு பதில் கூற வேண்டியவர்.

அமெரிக்காவின் வெர்ஜீனியா மாநில றிச்மண்ட் பிராந்தியத்தைச் சேர்ந்த செயற்பாட்டாளர் செச் கார்ட்ரைட் என்பவர் ஆப்பிரிக்காவின் செல்வம் கொழிக்கும் நாடாக இருந்த லிபியாவில் அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்பை நடத்தி அந்த நாட்டை சின்னாபின்னப்படுத்தியவர் ஹிலாரி தான் என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு முன்னர் லிபிய மக்கள் நிம்மதியான சூழலில் உயர் வசதிகள் மிக்க வாழ்க்கைத் தரத்தை அனுபவித்தவர்கள் ஈராக் மற்றும் சிரியாவின் வீழ்ச்சி ISIS இன் தோற்றம் என்பனவற்றுக்கும் காரணமாக ஹிலாரி இருந்துள்ளதோடு யேமனில் அப்பாவி மக்களை கொன்று குவிப்பதற்காக சவூதி அரேபியாவுக்கு 46 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்தவரும் அவர் தான். ஹிலாரியின் கரங்கள் யேமன் நாட்டு மக்களின் இரத்தத்தில் தோய்ந்த கரங்கள் ஹெய்ட்டியில் வறுமைக்கும் பட்டினிக்கும் ஸ்திரமற்ற நிலைக்கும் வித்திட்டவர் ஹிலாரி தான். ஹொண்டுராஸின் வீழ்ச்சிக்கும் இவர் வழங்கிய ஆதரவு கணிசமானது என்றே கூறப்படுகின்றது.

சிரியாவை அழிக்க வேண்டும் என பகிரங்கமாக அழைப்பு விடுத்தவர் ஹிலாரி. மத்திய கிழக்கில் இஸ்ரேலின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது தான் இந்த அழைப்பின் முக்கிய குறிக்கோள். இதன் விளைவுதான் சிரியாவில் இன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலைமைகள். உலகம் முழுவதும் அமெரிக்க குற்ற அலைகள் மேலோங்கி வீசக் காரணகர்த்தாவாக இருந்தவர் தான் இந்த ஹிலாரி.

கடந்த வாரம் இவர் கிளிண்டன் பவுண்டேஷன் அமைப்பில் இருந்து 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை கத்தார் மத்திய வங்கிக்கு மாற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானால் அமெரிக்காவின் முதலாவது பெண் ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார்.

மறுபுறத்தில் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் வார்த்தைகளால் வன்முறை செய்பவர். அடிப்படை நாகரீகம் தெரியாதவர். மக்கள் இவரை பொய்யன் என்றும் பித்தன் என்றும் கூட குறிப்பிடுகின்றனர். இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான தீவிர பகைமை போக்கு கொண்டவர். அவரின் இனவாத கருத்துக்கள் அவரை அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு தகதி அற்றவர் என்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

ஆனால் எப்படியோ இந்த இருவரில் ஒருவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வந்து அமெரிக்காவையும் அங்கிருந்தவாறு உலகையும் ஆட்டிப் படைக்கப் போகின்றனர் என்பது மட்டும் நிச்சயம்.

தமது வடிவமைப்புக்களுக்கு ஏற்ப பொய்களை மட்டுமே விற்பனை செய்யும் யூத ஊடகங்களால் மூளைச் சலவை செய்யப்பட்ட அமெரிக்க மக்கள் இந்த இருவரில் ஒருவருக்கு வாக்களித்தே தீர வேண்டும் என்பது விதி. யூதர்களால் கபளீகரம் செய்யப்பட்டுள்ள அமெரிக்க கூட்டாண்மை நிறுவனங்களும், யூதர்களின் மூளைச் சலவைக்கு ஆளாகியுள்ள அமெரிக்க ஊடகங்களும் ஏனைய தொழில் துறையும் ஆயுத உற்பத்தி பிரிவுகளும் தான் இந்தத் தேர்தலை தீர்மானிக்கின்றன.

இந்த கூட்டாண்மை நிறுவனங்கள் தான் தமக்குத் தேவையான தமக்கு கீழ் படிவான ஒருவரை வெள்ளை மாளிகையில் பதவியில் அமர்த்துகின்றன.

பராக் ஒபாமாவை பொறுத்த மட்டில் சிக்காகோவை சேர்ந்த கோடீஸ்வர யூத வர்த்தகர் ஒருவரின் உதவியோடுதான் அவர் ஆட்சியில் அமர்த்தப்பட்டார் என்றும் ஒபாமாவின் பிரசாரத்துக்கு பக்கபலமாக இவரே இருந்தார் என்றும் பரவலாக கதைகள் உள்ளன. ரஹ்ம் எமானு என்ற இந்த நபரின் தந்தையான பென்ஜமின் எம். எமானுவலுக்கு ஒபாமா உயர் பதவி ஒன்றை அளித்துள்ளதாகவும்



கூறப்படுகின்றது. இவர் ஒரு காலத்தில் யூதர்களின் பயங்கரவாத அமைப்பான இர்குன் அமைப்பின் உறுப்பினராக இருந்தவர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஒபாமாவின் பதவி காலத்தில் காஸா மக்கள் மீது இஸ்ரேல் பல குற்றங்களைப் புரிந்துள்ளது. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒபாமா இதயமற்ற ஒரு மனிதராகத் தான் இருந்துள்ளார். இஸ்ரேலுக்கு தற்காப்பு உரிமை உள்ளது என்று ஒபாமா அறிவிப்பையும் விடுத்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஒருவரைப் பொறுத்தமட்டில் இது மிகவும் மோசமான நிலையாகும். ஆனால், அதைத்தான் யதார்த்தம் என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

யூதர்களின் ஆதிக்கம் பற்றி 1982 இல் எழுதப்பட்ட முதலாவது புத்தகத்தில் அமெரிக்காவின் குடியரசு கட்சி காங்கிரஸ் உறுப்பினராக 22 வருடங்கள் பதவி வகித்த போல் பின்ட்லே என்பவர் குறிப்பிடுகையில் அமெரிக்க இஸ்ரேல் பொது விவகாரக் குழு AIPAC அமெரிக்க வெளிநாட்டு கொள்கையை செப்பனிடுவதில் எந்தளவு தாக்கம் கொண்டுள்ளது என்பதை தெளிவாக விளக்கியுள்ளார். காங்கிரஸ் மற்றும் செனட் உறுப்பினர்கள் மீதும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலும் இந்த அமைப்பின் செல்வாக்கு எத்தகையது என்பதை அவர் தெளிவாக விளக்கியுள்ளார்.

THE DARE TO SPEAK OUT என்ற தனது நூலில் அவர் மத்திய கிழக்கு பல்கலைக்கழக திணைக்கள செயற்பாடுகளில் AIPAC செல்வாக்கு செலுத்த எடுத்த முயற்சிகளை விவரித்துள்ளார். அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் மீது கூடுதல் அனுதாபம் கொண்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களை எவ்வாறு மட்டம் தட்டலாம் என்பதில் இந்த அமைப்பு எந்தளவு கவனம் செலுத்தியது என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார். யூத மக்கள் மத்தியில் நியாயமான சிந்தனை போக்குடைய இஸ்ரேலின் கொள்கைகளை வெளிப்படையாக விமர்சித்து அவற்றை கேள்விக்கு உட்படுத்திய புத்திஜீவிகள் பலர் எவ்வாறு மட்டம் தட்டப்பட்டார்கள் என்பதை போல் பின்ட்லே தனது நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். இஸ்ரேலின் கொள்கைகளை விமர்சித்த ஊடகவியலாளர்கள், நடுநிலை சிந்தனையாளர்கள், முற்போக்கு எழுத்தாளர்கள், நூல் ஆசிரியர்கள், புத்தக வெளியீட்டாளர்கள் என சகல பிரிவினரும் எவ்வாறு கையாளப்பட்டார்கள் என்பதையும் அவர் தெளிவுபடுத்தி உள்ளார். சிக்காகோ பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறை பேராசிரியராக உள்ள ஜோன் ஜே மியஸீமர் மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழக சர்வதேச விவகாரத் துறை பேராசிரியர் ஸ்டீபன் எம் வேலால்ட் ஆகியோர் ISREAL LOBBY AND US FOREIGN POLICE என்ற தமது நூலில் இஸ்ரேல் அமெரிக்காவை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கின்றது என்பதை தெளிவாக விளக்கியுள்ளனர்.

2016 அக்டோபர் 14 இல் அமன்தா புரோலீச் என்ற பத்தி எழுத்தாளர் தனது கட்டுரையில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் 'அமெரிக்கா ஒரு ஜனநாயக நாடல்ல அது தன்னலம் சார்ந்த குழுவினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு நாடு' என கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் கொள்கைகளை பணம் தான் கட்டுப்படுத்துகின்றது. இந்த ஒழுங்கு முறையின் கீழ் அமெரிக்காவின் இரண்டு பிரதான கட்சிகளும் அளப்பரிய நன்மைகளை அடைகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

2015 இல் ஒரு ஊடக நிகழ்ச்சியில் பேசியஜிம்மிகார்ட்டர்அமெரிக்காவின் அரசியல் திட்டங்கள் என்பது நாம் கண்ணால் காணுகின்றவற்றில் இருந்தும் மிகவும் வித்தியாசமானது. அமெரிக்கா தற்போது தன்னலக் குழுக்களால் கட்டுப்படுத்தப்படும் ஒரு நாடு. அங்கு தற்போது இருப்பது வரையறுக்கப்படாத அரசியல் இலஞ்சம். அரசியல் முறைமை இதற்கு முற்றாக அடிபணிந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நீங்கள் எந்தக் கட்சிக்கு ஆதரவளிக்கின்றீர்கள் என்பது இங்கு முக்கியமே அல்ல. இரண்டு கட்சிகளுமே வரையறுக்கப்படாத பணக் கொடுப்பனவால் நன்மை அடைகின்றன என்று அவர் அலசியுள்ளார். பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வுகளில் இருந்து இந்த விடயம் தெரிய வந்துள்ளதாகவும் அவர் ஆதாரம் காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் ஆளுநர்கள், செனட்டர்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள் என எல்லோருக்கும் இது பொதுவானதே. பிரதான கொடுப்பானவாளர்களின் இந்த எல்லையற்ற பணத்தால் எல்லோரும் அளப்பரிய நன்மைகளை அடைந்துள்ளனர். அதை அவர்கள் தமக்கு கிடைத்துள்ள பெரும் வரப்பிரசாதமாகக் கருதுகின்றனர். ஆட்சிக்கு வர இருப்பவர்களை விட ஆட்சியில் இருப்பவர்களுக்கு இந்த வரப்பிரசாதங்கள் அதிகமாகவே உள்ளன. அந்த வகையில் அமெரிக்காவின் அரசியல் முறைமை என்பது இந்த பிரதான கொடுப்பனவாளர்களுக்கு முற்றிலும் கீழ் படிவு உள்ளதாகவே காணப்படுகின்றது. தேர்தல் முடிந்த கையோடு இவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஆட்சி பீடத்தை அணுகுவார்கள். அமெரிக்க ஆட்சி பீடம் அவர்களுக்கு தலைசாய்த்து சேவை செய்ய எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். ●

**லத்தீப் பாரூக்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை நினைவேந்தலும் புலம்பெயர் தேசங்களும்



சுதந்திர வேட்கையையும் மூர்க்கமான அர்ப்பணிப்பையும் தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டங்கள் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்திருக்கின்றன. அவை, விலை மதிக்க முடியாத தியாகங்களினால் நிறைந்தவை.

'இலக்கு எது' என்பது தொடர்பில் பல நேரங்களில் மாற்றங்களை செய்து வந்திருக்கின்ற தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டக் களம், ஒரு கட்டத்தில் தனி ஈழம் எனும் இலக்கை இறுதி செய்து, அதற்கான அர்ப்பணிப்பை அபரிமிதமாக வழங்கியிருக்கின்றது. அதிகமான உயிர், உடல், வாழ்க்கை இழப்புகள் அதற்காகவே வழங்கப்பட்டிருக்கின்றன. கார்த்திகை நினைவேந்தல் வாரத்தில் இந்த விடயங்களை நினைவிலேற்றி பயணத்தை தொடர வேண்டிய கடப்பாடோடு தமிழ்ச் சமூகம் இருக்கின்றது.

போராட்டத்தின் மீதான பற்றுறுதியையும், சந்தர்ப்பங்களை தீர்க்கமாக கையாளும் திறனையும், நிலைத்திருப்பதற்கான போக்கினையும் சரியாக உள்வாங்கி, அரசியலாக வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது. முடித்து வைக்கப்பட்ட போராட்ட வடிவங்களின் வெற்றி— தோல்வி குறித்து ஆழ்ந்து ஆராய்ந்து கொள்வது அவசியம். அது, தியாகங்களைக் கொச்சைப்படுத்துவதாக அமையாது. மாறாக, அந்த தியாகங்களை அர்த்தப்படுத்திக் கொண்டு அடுத்த கட்டத்துக்கு நகரும் வழிமுறைகள் அவை. அதை தமிழ்ச் சமூகம் கடந்த காலங்களில் செய்திருக்கவில்லை.

ஓர் இனம், தன்னுடைய உண்மையான நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். பழம்பெருமைகளைப் பேசுதல் என்பது பல நேரங்களில் மனகிலேசங்களை மாத்திரமே கொடுக்கும். மாறாக, பயன்களை வழங்காது. தமிழ்ச் சமூகம் குறியீட்டு ஒருங்கிணைவையும், பழம்பெருமை பேசுதலையும் ஒன்றாக்கி தொடர்ந்தும் குழப்பிக் கொண்டு வந்திருக்கின்றது. **மே மாதத்தையும், நவம்பர் (கார்த்திகை) மாதத்தையும் விடுதலைப் போராட்டங்களுக்காக நிகழ்த்தப்பட்ட தியாகங்களை நினைவிலேற்றி ஒருமிப்பதற்கான வழிகளாகக் கொள்ள வேண்டும். அது, குறியீட்டு அரசியல் வடிவங்களில் ஒன்று.**

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குத் தலைமை வழங்கிய கால்நூற்றாண்டு காலத்துக்குப் பின்னரான கடந்த ஆறு ஆண்டுகளில், அரசியல் — சமூக அபிவிருத்தி ஆகியவற்றில் சொல்லிக் கொள்ளும் படியான வெற்றிகள் எவையும் சாத்தியமாகவில்லை. தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து, தமது எதிர்பார்ப்பையும் அரசியல் இருப்பு தொடர்பிலான ஆணையையும் வழங்கிய சம்பவங்கள் தேர்தல்களினூடு நிகழ்ந்திருக்கின்றன. மற்றப்படி, தீர்க்கமான நகர்வுகள் என்று எவையும் நிகழ்த்தப்படவில்லை. அதற்கான வழிகள் திறக்கப்படவும் இல்லை. திறப்பதற்கான ஆர்ப்பரிப்புக்களை வெளிப்படுத்தும் தரப்புக்கள் என்று தம்மை முன்னிறுத்துபவர்கள் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்டவை) கூட அதற்கான சாத்தியமான வழிகளையோ, அணுகுமுறையையோ, மக்கள் நம்பிக்கை கொள்ளும்படியான செயற்பாட்டினையோ வெளிப்படுத்தியிருக்கவில்லை. அப்படியான நிலையில், தமிழ்த் தேசிய அரசியலில் பிரதான இடத்தைக் குறைநிரப்பும் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) தரப்பொன்று ஈடுசெய்துள்ளது.

ஏன், தமிழ்த் தேசிய விடுதலைக்கான களமும், அதன் அரசியலும் தேங்கியிருக்கின்றது என்கிற கேள்வி கடந்த ஆறு ஆண்டுகளாக எம்மிடையே எழுப்பப்பட்டு வந்திருக்கின்றது. அந்தக் கேள்விகளுக்கான உண்மையான பதில்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்றால், பெரும்பாலும் 'இல்லை' என்ற பதிலே கிடைக்கும். பொது எதிரிகள் (பௌத்த சிங்கள பேரினவாதம், பிராந்திய வல்லரசு, சர்வதேச வல்லரசு) பற்றி நாம் எவ்வளவு அவதானமாக இருக்க வேண்டுமோ, அதேயளவுக்கு எம்மிடையே காணப்படுகின்ற குறைபாடுகள், செயலற்ற தன்மை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களிலிருக்கின்ற தமிழ் மக்களுக்கிடையிலான ஒருங்கிணைவு என்பது, உணர்வு ரீதியில் ஒன்றாக இருக்கின்ற போதிலும், அணுகுமுறை மற்றும் தேவைகளின் போக்கில் வேற்றுமைகளினால் நிறைந்திருக்கின்றன. அது, பெரும் இடைவெளியை வெளித்தெரியாமல் உருவாக்கி விட்டிருக்கின்றது.

தனி மனிதர்களாக ஒவ்வொருவரினதும் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பன அவர்களின் தளங்களுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. சமூகமாக ஒருங்கிணையும் போது அந்தத் தேவைகளும், எதிர்பார்ப்புக்களும் சில விட்டுக்கொடுப்புக்களோடும், அணுகுமுறை சார்ந்தும் பிரதான தேவைகள், எதிர்பார்ப்புக்களை இலக்குக்களாக மாற்றுகின்றன. இலக்குக்கள் என்பவை, சில நேரங்களின் தனி மனிதர்களாக சிலருக்கு அவசியமற்றவையாகக் கூட இருக்கலாம். சமூகமாக ஒருங்கிணையும் போது அவற்றை இலக்காக ஏற்றாக வேண்டும். அதுதான், சமூக அரசியலின் சூட்சுமம். தாயகத்திலிருக்கின்றவர்களுக்கும் புலம்பெயர் தேசங்களிலிருக்கின்றவர்களுக்கும் இடையிலான வெளித்தெரியாக வேறுபாடுகளும் இப்படித்தான் உருவாகியிருக்கின்றன.

புலம்பெயர் தேசத்திலிருக்கின்ற தாயகத்தின் நேரடித் தலைமுறை தன்னுடைய இறுதிக் காலங்களை நோக்கி நகர்கின்றது. அடுத்த தலைமுறையே அதன் அரசியலையும், சமூக அபிவிருத்தியையும் தீர்மானிக்கும் தரப்பாக இருக்கின்றது. அப்படியான நிலையில், **தாயகத்துக்கும், புலம்பெயர் தேசத்திலிருக்கின்ற புதிய தலைமுறைக்குமான (பெரும்பாலும் அந்த நாடுகளில் பிறந்து, வளர்ந்த) தொடர்பாடலை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் பெரிதாக ஏற்படுத்தப்படவில்லை.**

தமிழ்த் தேசிய அரசியல் பற்றிய ஆர்வத்தோடு தாயகத்திலும்— புலம்பெயர் தேசத்திலும் இயக்கும் நண்பரொருவருடனான அண்மைய உரையாடலொன்றில் அவர், 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், கார்த்திகை நினைவேந்தல் (மாவீரர் தினம்) என்பன எவ்வளவு உணர்வுபூர்வமாக, குறிப்பிட்டளவான புலம்பெயர் மக்களினால் அணுகப்படுகின்றதோ, அதேயளவுக்கு, அவற்றை எந்தவித அடிப்படைகளும் இன்றி களியாட்ட மனநிலையோடு அணுகும் தலைமுறையொன்றும் உருவாகி விட்டிருக்கின்றது. அத்தோடு, பணத்தைப்; பறிக்கும் கும்பல்களின் தொடர்ச்சியும் அச்சுறுத்தும் அளவுக்கு அதிகரித்துள்ளது' என்றார்.

தமிழ்த் தேசிய விடுதலைக்கான களங்களை களியாட்ட மனநிலையோடும், பணம் பறிக்கும் வாய்ப்பாகவும் அணுகும் தரப்புக்களை இனங்கண்டு, புறந்தள்ள வேண்டியதன் அவசியத்தை புலம்பெயர் தேசங்களிலுள்ளவர்கள் வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில், தாயகம்— புலம்பெயர் தேசத்துக்கிடையில் காணப்படும் இடைவெளியின் பெரும் இடத்தினை ஏற்படுத்தி விட்டவர்களில் இந்த இரண்டு தரப்புக்களும் முக்கியமானவை. தமிழ்த் தேசிய விடுதலையை பணம் பறிக்கும் — வசூலிக்கும் சூட்சுமமாக கருதும் தரப்புக்களே, அதீத உணர்வூட்டல்களை எந்த நியாயப்பாடுகள் இன்றி செய்து கொண்டும், துரோகி பட்டங்களை வாரி வழங்கிக் கொண்டும் இருக்கின்றன. இந்தத் தரப்புக்களுக்குள் இருக்கின்றவர்களில் பலர், விடுதலைப் புலிகளின் பில்லியன் கணக்கான சொத்துக்களை சொந்தமாக்கி விட்டு சூழ்ச்சி அரசியல் செய்கின்றார்கள். 'தலைவர் வரட்டும் அவரிடம் சொத்துக்களை வழங்குவோம்' என்கிற சல்ஜாப்பு கோஷ்டிகளே, புலம்பெயர் தேசங்களின் தமிழ்த் தேசிய அரசியலை பெரும்பாலும் தீர்மானிக்கின்றன என்பது மிகவும் வருத்தமான ஒன்று. தமிழ்த் தேசிய அரசியலில் 'முடிவு'களை எடுக்கின்றவர்களாக தம்மை பெரும்பாலும் முன்னிறுத்த முனையும் தரப்புக்கள் அல்லது அதன் கடிவாளத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பும் தரப்புக்களுக்கிடையிலான மோதல் என்பதுவும் பிராந்திய ரீதியில் மக்களிடையே வேற்றுமைகளை ஏற்படுத்தி விட்டிருக்கின்றன. தாயகத்திலிருக்கின்ற மக்களின் அடிப்படைத் தேவைகள், தமிழ்ச் சமூகம் பாடிக் கொண்டிருக்கும் பெருமைகளை ஓங்கி அறையும் அளவுக்கு இருக்கின்றது. அதுவும், ஆயுத மோதல்களின் வடுக்களை மனங்களிலும், உடலிலும், தேசத்திலும் வாங்கியிருக்கின்றவர்களின் தேவைகள் பாரதூரமானவை. அவற்றை பூர்த்தி செய்யாமல், கொள்கை கோட்பாடுகள் என்று பேசிக் கொண்டிருப்பது எல்லாவற்றையும் குழிதோண்டி புதைப்பதற்கு சமமானது. இந்த உணர்திறன் என்பது தாயகம்— புலம்பெயர் தேசங்கள் என்ற வேறுபாடுகள் இன்றி உள்வாங்கப்பட வேண்டும். அது, அடுத்த கட்டம் நோக்கிய நம்பிக்கைகளோடு அணுகப்படவும் வேண்டும்.

மாவீரர் தினத்தை முன்னிறுத்தி, புலம்பெயர் தேசங்களில் இன்னமும் நிதி சேகரிக்கப்படுகின்றது. இந்த நிதி எங்கு செல்கின்றது. யார் யார் கையாள்கின்றார்கள், எனப்து மிகவும் வெளிப்படையாக வைக்கப்பட வேண்டும் ஏனெனில், கடும் உடலுழைப்பை வழங்கி சம்பாதிக்கப்படும் பணம், ஊழையாக யார் யாரிடமோ சென்று சேர்கின்றது. அதற்காக, தியாகங்களையும், உணர்வுகளையும் விற்பனையாக்கும் தரப்பு திட்டமிட்டு செயலாற்றுகின்றது. அதே நேரம் முழு உண்மையுடன் செயலாற்றும் அமைப்புக்கு மக்கள் ஆதரவு என்றும் கிடைக்கும் , அவர்கள் தமது செயல் திட்டங்கள் மிகவும் வெளிப்படையாக வைக்க வேண்டும்

புலம்பெயர் தேசங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் அஞ்சலி செலுத்துவற்கும், ஒருங்கிணைவதற்குமான புள்ளிகளாக எவ்வாறு அமைய முடியுமோ, அதேயளவுக்கு தாயகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகளை உருவாக்கவும், தீர்க்கமான அரசியலை முன்னெடுக்கவும் உதவ வேண்டும். ஒவ்வொரு விடயத்தையும் முன்னிறுத்தி நிறையக் கேள்விகள் எழுப்பப்பட வேண்டும் தாயகத்திலிருக்கின்றவர்களோடு நேரடியாக உரையாட வேண்டும். **இணைய ஊடகங்கள், சமூக ஊடகங்களில் வரும் செய்திகள் மட்டுமே அரசியலையும், உறவின் தொடர்ச்சியையும் இறுதி செய்ய முடியாது. ஏனெனில், அவற்றின் உண்மைத்தன்மை அபத்தமானவை.** அவற்றை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமானது. இலங்கையில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டு, சிறிய ஜனநாயக வெளியொன்று திறக்கப்பட்டுள்ள போதிலும், மாவீரர்களை வெளிப்படையாக நினைவுகூருவதற்கான அனுமதியை அரசாங்கம் மனதார தரும் என்று கொள்ள முடியாது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளே கூட பாரிய இடர்பாடுகளைத் தாண்டியே நடந்திருக்கின்றன. அப்படியான நிலையில், புலம்பெயர் தேசங்களில் தமிழ்த் தேசிய விடுதலைக்காக அர்ப்பணித்தவர்களை அர்த்தபூர்வமாக நினைவிலேற்றி நினைவுகூரப்படும் நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டியது அவசியம் அது, தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டங்களின் குறியீட்டு அரசியலும் ஆகும்.

நீண்டு கோலோச்சிய ஆயுதப் போராட்டம் தமிழ்த் தேசிய விடுதலைக் களத்திலிருந்து அகற்றப்பட்டுள்ள நிலையில், தீர்க்கமான போராட்ட வடிவத்தினை சூழ்ச்சிகளை முறியடித்து தமிழ்ச் சமூகம் தேர்தெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தையும், கார்த்திகை நினைவேந்தல் வாரம் நினைவூட்டிச் செல்கின்றது.

*2015 மாவீரர் நாள் கண்ணோட்டத்திலிருந்து* ●

**புருஜோத்தமன் தங்கமயில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#1 RE/MAX

RE/MAX@ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
YOUR PLACE

Real Estate & Mortgage Services

"Your Dreams, My Mission"



SRI NADARAJASUNDRAM
Sales Representative
416-276-6666
sri@remaxace.com

Tel: 416-270-1111
Fax: 416-270-7000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org